₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 1 | January 2021



## உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல

## பூமியிலேயும் செய்யப்படுவதாக.

– இயேசு (மத்தேயு 6:10)

*இந்த புதிய 2021-ம் ஆண்டு, தங்களுக்கு சந்தோஷமும், சுகமும், ஆசீர்வாதமும் நிறைந்ததாக அமைய ஜெபிக்கிறோம்! வாழ்த்துகிறோம்!*

# ஆரம்ப வரிகள்...

## பூலோகத்திலேயே பரலோகமா...!



இவ்வுலகிலே நடக்கும் அனைத்து சம்பவங்களும் தேவனுடைய சித்தத்திற்கு உகந்தே நடக்கிறதென அநேகர் தவறாக நினைக்கிறார்கள். ஆனால், 'தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்பட வேண்டும்' என்று இயேசு நமக்குக் கற்பித்துள்ளார் (மத்தேயு 6:10). அதாவது, தேவசித்தம் தானாகவே இப்பூமியிலே நடைபெறுமென்றால், இயேசு அதற்காக ஜெபிக்க நமக்கு அறிவுறுத்தத் தேவையில்லை. தேவசித்தம் இப்பூமியிலே செய்யப்பட தேவப்பிள்ளைகளாகிய நாம் செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால், நமது எதிரியாகிய சாத்தானின் விருப்பம் இப்பூமியிலே செய்யப்பட அது ஏதுகரமாகும்.

இயேசு கற்பித்த ஜெபத்தின் இப்பகுதி, ஒரு எழுப்புதலுக்கான ஜெபமாகும். இது பூமியில் தேவசித்தத்தைச் செயல்படுத்துவதற்கான ஜெபப்போராளிகளுடைய போராட்டத்தின் கொ்ச்சனையாகும். ஆம், இது நாம் நமது மாபெரும் போராளியான கிறிஸ்துவோடு இணைந்து சாத்தானுக்கு எதிராக முழங்கும் ஓர் போர் முழக்கமாகும்!

முதலாவதாக, இந்த ஜெபத்தை நாம் ஏறெடுக்க வேண்டுமாயின், நமது சித்தத்தைத் தேவனுடைய சித்தத்திற்கு நாம் கையளித்திருக்க வேண்டும். அதற்கு, இந்த ஒப்புக்கொடுத்தலின் ஜெபத்தை ஏறெடுத்த இயேசுவையே மாதிரியாகக் கொள்ளல் வேண்டும். அவர் கெத்சமனே தோட்டத்தில் தேவசித்தத்திற்குத் தம்மை ஒப்புவித்தது மட்டுமல்லாமல் (லூக்கா 22:42), தேவசித்தத்தை நிறைவேற்றுவதிலும் உறுதியாக இருந்தார். இவ்வுலக வாழ்வில் தேவசித்தத்தை நிறைவேற்றுவதே இயேசுகிறிஸ்துவின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. நாமும் நமது வாழ்வில் தேவராஜ்யத்தைத் தேடுவதற்கு முன்னுரிமை அளித்து (மத்.6:33), தேவசித்தத்திற்கேற்ப நம் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, இந்த ஜெபத்தை நாம் ஏறெடுக்க வேண்டுமாயின், தேவசித்தத்தை இப்பூமியில் நிறைவேற்றுவதற்கான செயல்களில் நாம் ஈடுபட்டிருக்க வேண்டும். அதாவது, பரிசுத்த ஆவியானவரின் உதவியால் மட்டுமே நாம் தேவசித்தத்தை இப்பூமியில் நிறைவேற்ற முடியும் என்பதை உணர்ந்து, அதற்காக நாம் அவரையே சார்ந்திருத்தல் அவசியமானது; அப்பொழுதுதான், நாம் இவ்வுலகைச் சீராக்க தேவனால் பயன்படுத்தப்படும் கருவிகளாவோம். தேவன் பரலோகத்தைப் போன்று பூமியைச் சீர்படுத்த நாம் உடைந்த இருதயத்தோடும், மிகுந்த பாரத்தோடும் இந்த ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். அதாவது, 'ஆண்டவரே, நாங்கள் உம்மோடு இணைந்து, இவ்வுலகில் பாவத்திற்கும் தீமைக்கும் எதிராகப் போர் புரிந்து, இரட்சிப்பையும், நம்பிக்கையையும், புதுப்பித்தலையும் செயல்படுத்த விரும்புகிறோம்' என்பதே நமது செயலாக்கம் நிறைந்த ஜெபமாக இருக்க வேண்டும்.

ஆம், இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கும், பூமிக்கும் இடையிலான பாலமாகக் காணப்படுகிறார். "தேவனுடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்பட வேண்டும்" எனும் விண்ணப்பத்திற்குப் பதிலும் அவரே. தேவசித்தத்தை நமக்காக முழுமையாக தம் வாழ்வில் நிறைவேற்றி முடித்தவரும் அவரே. பரலோகிற்கும் நமக்குமிருந்த இடைவெளியை, தமது மரணத்தால் நீக்கி, பிதாவைக் கிட்டிச்சேரும் பாக்கியத்தை நமக்கு நல்கியவரும் அவரே. அவரது உயிர்த்தெழுதலால் நாம் நித்திய வாழ்வின் சுதந்தரவாளிகளானது மட்டுமல்லாமல், மற்றவர்களும் இப்பரலோக பாக்கியத்தை இப்பூலோகத்திலேயே பெற்று அனுபவிப்பதற்காக, நம் மூலமாகவும் அவரது சித்தம் இவ்வுலகிலே நிறைவேற்றப்படுவதற்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கவும் அழைக்கப்படுகிறோம். அவருடைய நல்ல சாட்சிகளாக அவரது நாமத்தைத் தேசமெங்கிலும் பறைசாற்றுவதின் மூலமே நாம் இந்த தேவசித்தத்தை முழுமையாக நிறைவேற்ற முடியும்.

மெய்யாகவே, இயேசுவின் இந்த ஜெபம் நமக்குப் பெரும் நம்பிக்கையைத் தருகிறது. ஆம், நமது சித்தத்தைத் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து அவருடைய சித்தத்தின்படி நாம் செயல்படும்போது, பரலோக சித்தம் பூமியில் நிச்சயம் நிறைவேற்றப்படும் என நாம் விசுவாசிக்கலாம்; அது விசுவாசிகளாகிய நம்மில் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டதன்றோ!

- JJ. ஹாரிஸ் *(தகவல் தொடர்பு துறை)*

"தேவனின் சித்தம் என்னவெனில், பரலோகத்தின் யதார்த்த நிலை பூமியின் யதார்த்த நிலையாக மாற வேண்டுமென்பதுதான்." – பில் ஜாண்சன்

"நல்லது எப்போதும் தேவனுடைய சித்தம் அல்ல; ஆனால், தேவனுடைய சித்தம் எப்போதும் நல்லது." – வாட்ச்மேன் நீ

"பூமியில் தேவனுடைய சித்தத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கான முக்கிய உந்துதலாக நாம் ஜெபத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு நாம் ஜெபத்தைத் தேவனின் வல்லமையாக வெளிப்படுத்தி, அதை வெற்றி பெறுவதற்கான ஒரே வழியாகக் கையாளும்போது, நமக்கு எதிரான சக்திகள் எதுவும் ஒருபோதும் பெரிதாகத் தோன்றாது." – ஜான் சி. மேக்ஸ்வெல்

"நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் தேவசித்தத்தைச் செய்வதற்குரியதாகவும் இருக்க வேண்டுமானால், நாம் யார், நாம் என்ன என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு, நம்மை உருவாக்கிய தேவனிடத்தில் நம் வாழ்வை மீண்டும் ஒப்புக்கொடுப்பதோடு, அவர் நம்மை உருவாக்கியிருக்கும் விதத்திற்காகவும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆம்! தேவன் எனக்கருளிய பரிசுதான், நான்; அதற்கீடாக நான் என்னில் அவருடைய சித்தத்தைச் செய்வதுதான், அவருக்கு நான் அளிக்கும் பரிசாகும்." – வாரன் W. வியர்ஸ்பே

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


பொதுச் செயலாளர்:
S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுகாரியதரிசியிடமிருந்து...

அன்பிற்குரிய பெரியோரே, சகோதர, சகோதரிகளே மற்றும் சிறார்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

நாம் இந்த புதிய ஆண்டைச் சந்திக்கும் வேளையில், கொரோனா வைரஸால் ஏற்பட்ட தொற்றுநோயைக் குறித்த பயம், பதட்டம் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் இன்னும் நம்மில் காணப்படலாம். இந்த தொற்றுநோய் பணக்காரர் மற்றும் ஏழைகள், ஆட்சியாளர் மற்றும் குடிமக்கள், எஜமானர் மற்றும் வேலைக்காரர் ஆகிய எவரையும் விட்டுவைக்கவில்லை. இதைக் கட்டுக்குள் கொண்டுவர தடுப்பூசிகளைக் கண்டுபிடிக்க பல்வேறு நாடுகள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு வருகின்றன. தொற்றுநோய்க்கு இன்னும் மருந்து முழுவதுமாகக் கண்டுபிடிக்கப் படாவிட்டாலும், அதற்கான முயற்சி நமக்கு நம்பிக்கையின் ஒளியைத் தருவதாக அமைகிறது. இத்தகைய நிச்சயமற்ற, மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிற சூழ்நிலைகளிலும், நாம் தேவனுடைய அனாதி சித்தத்தையும், வல்லமையையும், உண்மையையும் மற்றும் அவரது மாறாத அன்பையும் இப்புதிய ஆண்டில் எதிர்நோக்கிக் காணப் படுவது அவசியம்.

இந்த பின்னணியில், “நீங்காதிரும், என் நேச கர்த்தரே!” என்கிறப் பாடல் எனது நினைவிற்கு வருகிறது. இந்தப் பாடலை எழுதியவர், வெளிச்சம் மங்கி இருட்டானாலும் ஓர் அடி மட்டும் தனக்குக் காட்டுமாறு தேவனிடம் மன்றாடுகிறார். கடந்த காலங்களில், அவர் பெருமையினால் சொந்த வழியை தான் தேர்ந்தெடுத்து நடந்துவிட்டதாக உண்மையைத் தேவனிடத்தில் ஒப்புக்கொள்கிறார். அதோடு, அவர் மனந்திரும்புதலுடன் தேவனுடைய வழிநடத்துதலுக்குத் தன்னை அர்ப்பணிக்கிறார். ஆம், தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தைத் தேவன் நமக்கு அளித்துள்ளார். எனவே தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது, நம்முடைய சுதந்திரம் பறிக்கப்பட்டுப் போகுமென நாம் தவறாக நினைத்து, நம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவது ஒரு உண்மையான சுதந்திரம் ஆகாது; அதோடு, அது நமக்கு அநேக பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதற்கான காரியமாக அமைந்துவிடும். அதாவது, அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 2:2-3 வசனங்களிலே இதைத்தான், உலக வழிகள் அல்லது சாத்தானின் கிரியைகள் அல்லது மாம்ச கிரியைகள் அல்லது நமது மனவிருப்பங்கள் எனக் குறிப்பிடுகிறார். எனவே, இவற்றை நாம் கைக்கொண்டால், நாம் ஆவிக்குரிய மரணத்தை அடைவதோடு, அது நம்மில் எந்த அளவிற்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்பதை உணருவதற்கும் ஏதுவில்லாமல் ஆக்கி விடும்.

## நமது விடுதிப் பிள்ளைகள்:

சுமார் 13,000 பிள்ளைகள் நமது விடுதிகளில் இந்தக் கல்வியாண்டிலே, பள்ளிக்குச் செல்வதினால் வரும் நன்மைகளை அனுபவிக்க முடியவில்லை. ஏனெனில், ‘தொற்றுநோய்’ காரணமாகச் சமூக கட்டுப்பாட்டு விதிமுறைகள் நடைமுறையில்

காணப்படுவதால் பள்ளிகள் திறக்கப்பட வில்லை. ஆயினும் சமூக இடைவெளி மற்றும் முககவசம் அணிவது போன்ற சமூக கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு கிறிஸ்துமஸ் கொண்டாட, அவர்கள் ஒருநாள் மட்டுமே விடுதிகளுக்கு வரவழைக்கப்பட்டு, அவர்களது விடுதிக் காப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் மூலம் ஒரு ஜோடி புத்தாடைகள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துமஸ் பரிசாக வழங்கப்பட்டன. தொற்றுநோயால் ஏற்பட்ட இக்கால நீண்ட இடைவெளிகளினால், இந்த குழந்தைகள் தங்கள் படிப்பில் ஆர்வத்தை இழக்காதபடி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### நமது விரிவுப்பணியிலுள்ள ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் அர்ப்பணிப்பு:

கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பாடல்குழு (carols) நடத்துவதில் பல சிரமங்கள் இருந்தாலும், பல இடங்களில் நமது விரிவுப்பணி ஊழியர்களும் மற்றும் பொறுப்பாளர்களும் நமது ஊழியத்தைத் தாங்குகிற குடும்பங்களின் இல்லங் களுக்குச் சென்று, அவர்களுக்குக் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைக் கூறி, நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் நாம் தாங்குகின்ற குழந்தைகளுக்காகவும் கிறிஸ்துமஸ் காணிக்கைகளைச் சேகரித்து வந்தனர். பல நிதி நெருக்கடிகளின் மத்தியிலும், இவர்களை உற்சாகமாக வரவேற்று உதாரத்துவமாகக் கிறிஸ்துமஸ் காணிக்கைகளைக் கொடுத்துதவிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவின் பணியில்



S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்




# ஆண்டவரின் திருவுள சித்தம்!

( அருள்திரு. ஹாரிசன் சின்னகுமார், புனித திரித்துவ ஆலயம் - துபாய். )



ஆசீர்வாதமான 2021-ம் ஆண்டுக்கான எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் கர்த்தர் தாமே தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்வாராக!

கடந்துச் சென்ற பல ஆண்டுகளில் நிறையப் பாடங்களை நாம் கற்றுக்கொண்டுள்ளோம். அதிலும் குறிப்பாக, கடந்த 2020-ம் ஆண்டில் பல கடினமான நிகழ்வுகள் நடைபெற்றன. ஆயினும், கர்த்தரின் பெரிதான கிருபையினால் நாம் அவைகளை மேற்கொண்டு, இப்புதிய ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கிறோம். இந்த 2021-ம் ஆண்டை நம்பிக்கையின் ஆண்டாக நாம் எதிர்பார்க்கலாமா? ஆம்! ஆண்டவரின் சித்தத்திற்குள் நாம் இருக்கும் வரை, நமது வாழ்வின் ஒவ்வொரு நாளும் உன்னத நோக்கமும் மனமகிழ்ச்சியும் நிறைந்த நம்பிக்கையின் நன்னாளாகவே இருக்கும்.

மக்கள் கூட்டமொன்றில் பங்கேற்ற நான், அதில் பங்கேற்றவர்களிடம் 'தங்கள் வாழ்வின் நோக்கம் என்ன? என்பதை ஆறு வார்த்தைகளில் கூறுங்கள்' என்றேன். அதற்கு அவர்கள்,

*"நான் இழந்திருக்கின்றேன்; ஆனாலும் நம்பிக்கையோடு இருக்கின்றேன்."*

*"நம்பிக்கையை நான் ஒருபோதும் விட்டுவிடவில்லை."*

*"என் கஷ்டம் இன்னும் தீரவில்லை; ஆயினும் நம்பிக்கையிலே நிலைத்திருக்கின்றேன்."*

*"என்னையே நான் மன்னிப்பதைவிட பிறரை மன்னிப்பது எளிதானது."*

*"என் வாழ்வின் கட்டுப்பாட்டை நான் விட்டுவிட கற்றுக்கொண்டேன்."*

எனப் பதிலளித்தார்கள். அவர்களிடமிருந்து ஆறுவார்த்தைகளுக்குள் அடங்கிய இவ்வாக்கியங்களை நான் பெற்றுக் கொண்டாலும், அவை அனைத்தும் நம்பிக்கையைப் பற்றியே அமைந் திருந்தன. ஆயினும், கடைசி வாக்கியத்தை நான் அதிகம் விரும்பினேன். ஏனெனில் அப்பதிலை அளித்தவர், தனது வாழ்க்கையைத் தானாக கட்டுப்படுத்தாம லிருக்கும் பாடத்தைக் கற்றுக்கொண்டார். அப்படியானால் அவரின் வாழ்க்கையை யார் கட்டுப்படுத்துகின்றார்?

'எங்கள் பிதாவே, ... உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக' என்ற இந்த ஜெபம், "மரியாதைக்குரிய பயம் கலந்த ஜெபம்!" என்று மார்ட்டின் லூத்தர் கூறுகின்றார். பரலோக ஆண்டவரின் திருவுள சித்தத்தை நமது பூலோக வாழ் விற்குக் கேட்பதினால், இது ஒருவித பயங்கர அச்ச அதிர்வலையை ஏற்படுத்தக்கூடிய ஜெபம் எனலாம். இந்த ஜெபம் நமக்குச் சற்று பயத்தை உண்டுபண்ணினாலும், நம்மை

நமது சுயசித்தத்திலிருந்து விடுவித்து, ஆண்டவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க ஏவுகின்றது. நம்முடைய அனைத்து ஜெபங்களுக்கும் இதுவே அடிப்படையான ஜெபமாகவும் இருக் கின்றது. இக்கருத்து மிகவும் எளிமை யானது. நம்மையே நாம் நமதாண்டவரின் சித்தத்திற்கு ஒப்படைத்தால், அவர் அவருடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றுவார். இந்த ஜெபத்தை நாம் கருத்தாய் ஏறெடுப்பதின் மூலம், நமது வாழ்வின் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் ஆண்டவர் ஆளுகை செய்ய அவரை நம் வாழ்விற்குள் நாம் அனுமதிக்கின்றோம் என்பதுதான் உண்மை.

## ஆண்டவரின் சித்தம் நன்மையானது:

கர்த்தர் நல்லவர்; அவருடைய செயல் களெல்லாம் நன்மையானவை; அவரே நன்மையானவற்றை நிலைநிறுத்துகின்றார். அவராலேயன்றி நன்மையானதொன்றும் இல்லை. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5). நாம் நல்லவர் களாயிராவிடினும், நன்மையானவற்றை நம்மில் நிலைப்படுத்த ஆண்டவர் விரும்புகின்றார். சகோதரர்கள் யோசேப் பின் மீது மிகவும் கொடூரத்தனமா யிருந்தனர். அவனைக் கொன்றுபோடத் தீர்மானித்திருந்த அவர்கள், பின்னர் அவனை எகிப்திற்குப் போகிறவர்களிடம் விற்றுப்போட்டனர். சகோதரர்கள் அவனுக் குத் தீமையானவற்றைத் திட்டமிட்டனர்; ஆனால், கர்த்தர் அதை நன்மையாக மாற்றினார். யோசேப்பே அதை சாட்சியாகக் கூறுகின்றார், "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்," (ஆதி. 50:20). எதிரியானவன் நமக்குத் தீமை யானவற்றை சிந்திக்கின்றபோது, கர்த்தர் அதை நமக்கு நன்மையாக மாற்று கின்றார். ஆம்! கர்த்தர் நல்லவர், அவர் நன்மையானதை மட்டுமே செய்கின்றார். நம்முடைய தோல்விகள், தவறுகள் அனைத்தையும் கர்த்தர் ஆசீர்வாதமாக மாற்றுகின்றார். பத்சேபாளுக்கு எதிராகத் தாவீது செய்த பாவம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தாவீது மனந்தி ருந்தியபோது, கர்த்தர் தாவீதின் தீயச் செயலை மாற்றி, இப்பூமியை ஆளும் ராஜாக்களிலேயே மிகுந்த ஞானமுள்ள ராஜா அவன் மூலம் பிறக்கும்படி செய்தார்.

ஆண்டவரின் சித்தம் என்பது சர்வாதி காரம் அல்ல. நமது ஆண்டவர், அவர் தாம் செய்கின்ற எல்லாவற்றிலும் அதி காரப்பூர்வமாக இருக்க முயற்சிக்கும் சர்வாதிகாரியா? இல்லை, நிச்சயமாக அவ்வாறில்லை! 'தான் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்' (Man proposes, God disposes) என்பது நமக்கு நன்குத் தெரிந்த ஒரு பழமொழி. அதாவது, மனிதன் தன் விருப்பம் நிகழ வேண்டும் என்று விரும்புகின்றான்; ஆனால் ஆண்டவர் அதை தம் விருப்பம்போல் நிகழ்த்த விரும்புகின்றார். ஆம், கர்த்தரே இறுதியானவர் என ஒப்புக்கொள்வோம்! எனினும், கர்த்தர் தம்முடைய மக்களோடு ஐக்கியமாயிருக்க விரும்புகின்றார்; அவர் தம்முடைய மக்களோடு தமது திட்டத்தைப் பற்றி கலந்துரையாடி, அவர்கள் தம்முடன் பேசி உறவாட அனுமதிக்கின்றார். ஆபிரகாம், மோசே, தாவீது என்று பலச் சான்றுகள் இதற்கு வேதாகமத்தில் உள்ளன. 'கர்த்தர் நம்முடைய வார்த்தைகளுக்குச் செவிமடுக்கின்றார்,' என்று இந்தச் சான்றுகள் யாவும் நமக்குக் கற்பிக்கின்றன. ஆனால், இயேசுவின் ஊழியத்தில் ஒரு காரியம் என்னை அதிகமாக ஆச்சரியப்பட வைத்தது. அது யாதெனில், 'சாதாரண மக்களின் நம்பிக்கையைக்கூட (விசுவாசத்தை) இயேசு அங்கீகரிக்கின்றார்' என்பதே.

வேதாகமத்தில் காணப்படும் ஒவ்வொரு சுகமாக்குதலின் இறுதியிலும் இயேசு, “உன் நம்பிக்கை உன்னைச் சுகமாக்கினது” என்று கூறுவதைக் காணலாம். இது கர்த்தர் நம்முடன் கொண்டுள்ள ஐக்கியத்தின் செயல்பாடாகும். 23 ஆண்டுகளாக என்னோடு குடும்ப வாழ்க்கை நடத்தி வந்த என் அன்பு மனைவி ஒரு ஆண்டுக்கு முன்பு இறந்துப் போனார். அவர் இறந்துப் போனதை இப்போது நான் திரும்பிப்பார்க்கும்போது, என் மனைவியின் இழப்பை எதிர்கொள்ள முன்னதாகவே கர்த்தர் என்னையும் என் பிள்ளைகளையும் எவ்வாறு ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார் என்பதைத் தெளிவாக உணர முடிகின்றது. அநேக இடங்களில் ஆண்டவர் தாம் செய்யப்போவதை முன்னதாகவே தமது பிள்ளைகளுக்குத் தெரிவிக்கின்றார்.

## ஆண்டவரின் சித்தமும், மனிதனின் சுயசித்தமும்:

சுயசித்தத்தோடு மனிதனை ஆண்டவர் சிருஷ்டித்தார். ஆண்டவருடைய சித்தத்தின் கீழ் மனிதனின் சுயசித்தம் இயங்கவேண்டும் என்பதற்காக அவர் மனிதனுக்கு ‘தேர்ந்தெடுக்கும் உரிமையைக்’ (free will) கொடுத்தார். ஏதேன் தோட்டத்தில் பல் வேறு கனிகளைத் தரும் பிற மரங்களும் இருந்தன. என்னுடைய போதகர் பணியில், நான் பெற்றோருக்கு ஆலோசனையாக, “உணவு, கல்வி, பயன்பாட்டுக் கருவிகள் போன்றவற்றில் தேர்ந்தெடுக்கும் உரிமையை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்; ஆனால், ஆலயம் / ஆண்டவர் ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடாது’’ எனக் கூறுவேன். கட்டாயம் ஆண்டவர் நம் எல்லோருக்கும் அவசியமானவர்; அவர் இல்லாமல் நாம் உயிர் வாழ முடியாது என்கின்ற அமைப்பில் நாம் படைக்கப்பட்டுள்ளோம். ஆண்டவருடைய சித்தத்தின் கீழ் மட்டுமே நமது சுதந்திரம் அனைத்தும் செயல்படுத்தப்படவேண்டும்.

நன்மை, தீமை அறியத்தக்க மரத்தையும் கர்த்தர் ஏதேன் தோட்டத்தில் உருவாக்கி, அதின் கனியைப் புசிக்கலாகாது என்று ஆதாம் மற்றும் ஏவாளுக்குக் கட்டளையிட்டார். நமது சுயசித்தத்தின் மீது நாம் நம்பிக்கை வைத்தால், கர்த்தர் ஏன் விலக்கப்பட்ட மரத்தை அங்கே வைத்திருந்தார் என்றக் கேள்வி எழும். ஆயினும் நாம் கர்த்தர் மீதுள்ள நம்பிக்கையைக் காண்பிக்கும் பொருட்டு, ‘தேர்ந்தெடுக்கும் உரிமையை’ நமக்கு அவர் கொடுத்திருந்தார். ஆனால், கட்டாயக் கட்டளையாக அல்ல. நாம் சுதந்தரவாளிகளாயினும், நமது சுயசித்தத்தின் மூலம் நமது நம்பிக்கை தானாக கர்த்தர் மீது நம்மில் தோன்றியிருக்க வேண்டும்; ஆனால், அதிலே நாம் தோற்றுவிட்டோம். ஏதேன் தோட்டத்து அழகான சூழ்நிலையில், அந்த மரத்தை வைத்து, அதன் கனியைப் புசிக்காதே! எனக் கூறி, கர்த்தர் அதை விலக்கியிருந்தார்; ஆனால் ‘கீழ்ப்படியாமை’ அங்கே உருவாயிற்று. நம்மைச் சுற்றியுள்ள இருளான இச்சூழலில் இயேசு, நாம் நம் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அழைக்கின்றார். ஆனால் அதைத் ‘தேர்ந்தெடுக்கும் உரிமை’ நம்முடையதே. நாம் சுயசித்தத்தில் இருப்பதால், ‘இரட்சிப்பு’ என்பது நம்மீது திணிக்கப்பட முடியாது. கர்த்தரின் அழைப்பு இப்போது நமக்கு உள்ளது. ஆனால், இந்த அழைப்பு நிரந்தரமாக இருக்கும் என்று கூறி விடமுடியாது. கர்த்தர் நம்முடைய சுயசித்தத்தை மதித்துதான், வாசலில் நின்று கதவைத் தட்டிக்கொண்டிருக்கின்றார் (வெளி. 3:20).

## ஆண்டவரின் சித்தமும், நற்செய்தி அறிவித்தலும்:

எல்லோரும் இரட்சிக்கப்படுவது கர்த்தரின் சித்தம் என்றால், நாம் எவ்வாறு

நற்செய்திப்பணியைச் செய்யவேண்டும்? கர்த்தர் தம் மக்களை முன்னதாகவே தெரிந்துக்கொண்டுள்ளார் என்றால், இனிமேல் செய்யப்பட என்ன உள்ளது? இவ்வினாக்கள் காலங்காலமாகக் கேட்கப்பட்டு வருகின்றன. இரட்சிப்பை மக்களுக்கு அருளுவது கர்த்தரின் செயல் என்றாலும், சரியான வழிமுறைகள் வாயிலாகவே அதை அவர் செயல்படுத்த முனைகின்றார். எனவே, அவருடைய சாயலின் வழியாக வந்த மனிதர்களே இப்பணியில் அதிகமாக ஈடுபடுகின்றனர். ஆகவேதான் பவுல், 1 கொரிந்தியர் 3:6-ல், "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார்" எனக் கூறுகின்றார். 'விதைக் கிறவன் உவமை' இதை இன்னும் விரிவாக விளக்குகின்றது. அதன் பல் வேறு நிலைகளாவன: விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், முளைத்தல், விளைதல் இதைப்பற்றி எழும் வினாக்களைப் பவுல் ரோமர் 10:14 & 15-ல் எழுப்பி, அதற்குரிய பதிலையும் கூறுகின்றார். அழைப்பு விசுவாசித்தலுக்கு வழிநடத்து கின்றது; அனுப்பப்படுதல் பிரசங்கித் தலுக்கு வழிநடத்துகின்றது; பிரசங் கித்தல் செவிமடுப்பதற்கு நேராய் வழி நடத்துகின்றது; செவிமடுத்தல் விசுவாசத் திற்கு நேராய் வழிநடத்துகின்றது. இது ஒரு வழிமுறை. எனவேதான் ஆண்டவருடைய சித்தத்தின் கீழாக, சீடர்களை உருவாக்கு வதில் நாம் அவருடன் ஐக்கியமாய் இருக்கின்றோம்.

## ஆண்டவரின் சித்தமே இறுதியில் நிறைவேறும்:

"நமது ஆண்டவரே மகா பெரிய எஜமானர்!" என ஒருவர் கூறினார். சதுரங்கப்போட்டியைப் போல, மனித வாழ்க்கையிலும் நல்லவித நகர்த்தல், கெட்டவித நகர்த்தல், முட்டாள்தனமான நகர்த்தல் ஆகிய எந்த நகர்வுகளை மனிதன் மேற்கொண்டாலும், ஆண்டவர் அவனுடைய எல்லாவித நகர்வுகளையும் கையாண்டு, இறுதியில் அவரே வெற்றி சிறக்கின்றார். சர்வவல்ல தேவனுடைய அண்டசராசர வரலாற்றுச் சரிதையில், அவரை அறியும் அறிவில் எனக்கும் ஒரு பங்கு இருப்பதால் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். '1001 அரபிய இரவுகள்' என்ற நீண்ட கதையில் பல சிறுகதைகள் அடங்கியுள்ளன. அதுபோல கர்த்தர் தம்முடைய நீண்ட சரிதையில், கிருபையாக உங்களையும் என்னையும் குறித்து வைத்திருக்கின்றார். அவருடைய சரிதையில் நம்மைச் சாதாரண பாத்திரங்களாக அவர் உருவாக்கவில்லை. அதில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பான தனித்துவமான பங்கைக் கொடுத்திருக்கின்றார். இந்த புரிதல் நமது கர்த்தரைப் பற்றி என்னைப் பெருமிதம் கொள்ள வைக்கின்றது. நாம் ஒன்றும் பெரியவர்கள் அல்ல; நம்மில் எவரும் நல்லவர்கள் அல்ல; நல்லவைகளைச் செய்கிறவர்களும் அல்ல. ஆனால், கர்த்தர் தம் புத்தகத்தில் நம்மையும் சேர்த்து வைத்தி ருக்கின்றார். நமது ஆண்டவரின் சித்தம் என்னவெனில், அவர் நம்மில் ஒருவரையும் இழந்துவிடாமல், நம்மை அழகுப்படுத்தி, இவ்வுலகில் சிறப்பான இடத்தில் நம்மை நிலைநிறுத்துவதோடு மட்டுமல்லாது, அவருடைய தேவராஜ்யத்திலும் நம்மை நிலைநிறுத்த விரும்புகின்றார். ஆஹா! எத்தகைய மாபெரும் கர்த்தரை நாம் தெய்வமாகக் கொண்டிருக்கின்றோம். எனவே, நாள்தோறும் நம்மை ஆண்ட வரிடத்தில் அர்ப்பணித்து, "பரலோகத்தி லிருக்கிற எங்கள் பிதாவே, விண்ணகத்தில் உம் சித்தம் செய்யப்படுவது போல மண்ணகத்திலும் செய்யப்படுவதாக!" என்ற இந்த அடிப்படையான ஜெபத்தை அதிக நம்பிக்கையுடன் ஏறெடுத்து, அவருடைய சித்தத்தை இப்பூமியிலே செய்து நிறைவேற்றுவோமாக! ஆமென்.



# பரலோக சித்தம், நித்தம் நிகழட்டும்!

**2021**-ம் ஆண்டின் எனது புது வருட வாழ்த்துக்களை அன்பான அறைகூவல் ஜெபப்பங்காளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் உங்களோடிருந்து உங்கள் ஜெபங்களுக்குப் பதில் தந்து, தேவைகளைச் சந்தித்து, உங்களைப் பாதுகாத்து வழிநடத்துவாராக!

T20 கிரிக்கெட் பந்தயம் போன்று பரபரப்பாகவும் பதட்டமாகவும் நம்மை விட்டுக் கடந்துவிட்டது, 2020-ம் ஆண்டு. ''கொரோனா'' என்ற வார்த்தையை உச்சரிக்காத எந்தவொரு தனி நபரும், பதறி நிற்காத யாதொரு நாடும் இல்லை. இலட்சங்களுக்கு மேற்பட்டவர்களைக் காவு வாங்கிய இக்கொடிய நோயிலிருந்து தேவன் நம்மைப் பாதுகாத்து, இப்புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கச் செய்துள்ளதற்காக அவரைத் துதிக்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் நாம் நமது நாட்காட்டியின் தலையங்க வசனத்தை மையமாக வைத்து முதல் மாதச் செய்தியை எழுதி வருவது அனைவரும் அறிந்த ஒன்று. இவ்வாண்டின் தலையங்க வசனம், மத்.6:9,10-ல் உள்ள கர்த்தருடைய ஜெபத்தை ஆதாரமாகக் கொண்டது. அதில் ''**உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக**'' என்று Henry Bower தமிழ் மொழிப் பெயர்ப்பும், ''**பரலோகத்தில் உள்ளது போலவே பூமியிலும் நீர் விரும்பியவை செய்யப்படட்டும்**'' என்று Easy to read version (ERV) தமிழ் மொழிப்பெயர்ப்பும் கூறுகின்றன.

கர்த்தர் கற்றுக்கொடுத்த இந்த அர்த்தமுள்ள ஜெபத்தில்தான் எத்தனை ஆழமான விளக்கங்கள்...! நாம் மிகவும் பயன்படுத்துகின்ற, நமது சிறுபிள்ளைகள் கூட மனனமாய் சொல்லக்கூடிய இந்த ஜெபத்தில், 'நான், என்னுடைய, எனக்கு' என்ற ஒருமை சொற்களில்லாமல் 'நாங்கள், எங்களுடைய, எங்களுக்கு' என்ற பன்மை பதங்கள் வருவதால், இது குடும்பமாகவும் குழுவாகவும் இணைந்து செய்யக்கூடிய ஒரு அற்புதமான ஜெபமாகும். இதனைக் கடும் வேகத்திலோ, கருத்தில்லாமலோ சொல்லி விடாதபடி இதன் அர்த்தத்தை உணர்ந்து சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, இதன் ஆரம்பம் '**பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே**' என்பதினால், யாரெல்லாம் தேவனைப் பிதாவாக, அப்பாவாக ருசித்திருக்கின்றார்களோ அவர்கள் சொல்வதில்தான் அர்த்தம் இருக்க முடியும். ஏனெனில் இது பிறப்பின் உரிமையல்ல, ... விசுவாசத்தின் உரிமை. ''அப்பா!'' என்றழைக்கக் கூடியவர்கள் அந்த தகுதிக்குரியவர்களாய் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். அது மட்டுமல்ல,

**''உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;**
**உம்முடைய ராஜ்யம் வருவதாக;**
**உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக ...!''**

என்று இந்த ஜெபத்தின் முன்பகுதி முழுவதும் சர்வவல்லமையுள்ள ஆண்டவருக்கு முக்கியத்துவத்தைக் கொண்டுவருவதாகவும், அதன் பின்னர் வருபவை

நம்முடைய தேவைகளைப் பற்றிய விண்ணப்பங்களாகவும் அமைந்துள்ளது–

**“எங்களுடைய ஆகாரம்,**

**எங்களுடைய பாவக்கடன்,**

**எங்களுக்கு சோதனையிலிருந்து வரக்கூடிய இரட்சிப்பு.”**

ஆக மொத்தத்தில் இவை யாவும் நமக்கு உணர்த்தும் ஓர் முக்கியச் செய்தி யாதெனில், நாம் தேவசித்தத்தோடு சீர் பொருந்தி, அவருடைய மகிமை, ஆளுகை ஆகியவைகளை முதலாவது முக்கியப்படுத்துவதும் அதன் பின்னர் நம்முடைய தேவைகளை அமைத்துக்கொள்வதுமே ஒழுங்கு என்பதையே. ஆம்! இந்த வரிசை ஒழுங்கு மாறக்கூடாது. கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ப நம்முடைய சித்தத்தைச் சீர்படுத்திக் கொண்டு, அவருடைய சித்தத்தை நம் சித்தமாக ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான ஜெபம் என்கிறார், **Rev. Dr. தியோடர் வில்லியம்ஸ்**. இந்த ஜெபத்தில் நாம் தியானிக்கும் பகுதியான “உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்பது, பரலோகத்தில் எப்படி தேவசித்தத்தைத் தேவதூதர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக மகிழ்ச்சியாக எந்தக் கேள்வியும் கேட்காமல் நிறைவேற்றுகிறார்களோ, அதைப்போலவே அவருடைய பிள்ளை என்ற உரிமைக்குச் சொந்தமானவர்களாகிய நாமும் அதை இப்பூமியில் நிறைவேற்ற வேண்டும்.

**இராபர்ட் லா** என்ற தேவ மனிதர் கூறும்பொழுது, **“மனிதனுடைய சித்தத்தைப் பரலோகில் நிலைநாட்டுவதற்கு அல்ல, இது தேவனுடைய சித்தத்தைப் பூமியில் நிறைவேற்றுவது. தேவனுடைய சித்தம் பூமியில் நிறைவேறாதபடி அவருடைய நாமத்திற்கு அவகீர்த்தி உண்டாக்கவோ, அவருடைய ராஜ்யம் வருவதைத் தடுக்கவோ கூடிய எதையும் கர்த்தர் செய்யும்படி கேட்பதற்கு நமக்கு எவ்வித உரிமையும் கிடையாது”** என்கிறார்.

எனவே, கர்த்தருடைய விருப்பம் ஒரு மனிதனின் தனி வாழ்வில், ஜெப வாழ்வில், அவனுடைய பொது வாழ்வில் எவ்விதம் நிகழ வேண்டும்? என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

## தனி வாழ்வில் தேவ விருப்பம்

துவக்கக் காலங்களில் அடிமைகளில் இருவகை இருந்தார்கள். ஒன்று, உரிமை பாராட்ட முடியாத எந்த விருப்பு வெறுப்புகளையும் வெளிப்படுத்த இயலாத நிரந்தர அடிமைகள் (Bond Slaves); மற்றொன்று, கிரயம் கொடுத்து குறிப்பிட்டப்பணி செய்ய அமர்த்தப்பட்ட (Hired Slaves) வாடகை அடிமைகள். நிரந்தர அடிமைகளை அவர்களின் உரிமையாளன் விலைக் கொடுத்து வாங்கியுள்ளபடியால், அவர்கள் முற்றிலும் அவர்களது எஜமானனைச் சார்ந்தவர்கள். அவர்களின் நேரம், செல்வம், தாலந்து, குடும்பம், சொத்துக்கள் – ஏன் அவர்கள் முதற்கொண்டு எஜமானனின் உரிமைச்சொத்து. இதைத்தான் கொரிந்து மக்களுக்குப் பவுல் குறிப்பிடும்பொழுது, “நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல. தேவன் விலைக்கொடுத்து உங்களை மீட்டுக்கொண்டார். தேவனுக்குரிய உங்களது சரீரத்தால் அவரை மகிமைப்படுத்துங்கள்” – 1கொரி.6:19,20 (ERV - Tamil) என்கிறார்.

ஆம் பிரியமானவர்களே, நமது மனம் நம் சரீரத்தைக் கட்டுப்படுத்துகின்றது; நமது சித்தமோ (விருப்பம்) நம் மனதைக் கட்டுப்படுத்துகின்றது. எனவே நமது சித்தத்தைத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும்பொழுது மட்டுமே, கிறிஸ்துவின் வல்லமை நமக்குப் பெலன் கொடுத்து சரியான தேவ விருப்பத்தை நாம் நிறைவேற்ற உதவுகிறது. கீழ்க்கண்ட ஒப்புக்கொடுத்தலின் விளக்கங்கள் இதனை இன்னும் தெளிவாய்ப் புரிந்துக்கொள்ள உதவும்.

**1. பூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல்**

**2. அனுமதி சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல்**

**3. தவறான மாம்சீக விருப்ப உணர்வுக்கு ஒப்புக்கொடுத்தல்**

தேவனின் பூரண சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழ்வது, கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியாகும். தமஸ்குவின் வீதியில் தேவனால் சந்திக்கப்பட்ட சவுல் மன மாற்றம் அடைந்து கேட்ட முதல் கேள்வி, **“ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்த மாயிருக்கிறீர்?”** (அப். 9:6) என்பது தான். அவன் தன்னைப் பூரணமாய் தேவ சித்தம் செய்ய ஒப்புக்கொடுத்தான்.

அனுமதி சித்தத்திற்கு முக்கிய எடுத்துக்காட்டு: **பிலேயாம் - (எண். 22-24)** தேவனுடைய பூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க இயலாத பிலேயாமைத் தேவன், அவனது சுயவழிகளில் சென்றே அதனை அனுபவிக்க விட்டுவிட்டார். அதன் முடிவு நமக்குத் தெரிந்ததுதான். இதேபோல் இஸ்ரவேல் மக்கள் தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் ஆளுகை செய்ததை விட்டுவிட்டு, மற்ற தேசத்தில் இருப்பதைப் போல் தங்களுக்கும் அரசன் வேண்டும் என்று சாமுவேலிடம் கேட்டு, தேவனின் பூரண சித்தத்திலிருந்து அனுமதி சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்ததின் விளைவும் நமக்குத் தெரிந்த ஒன்றே. எனவே, நாம் தேவனின் பூரண சித்தத்திற்குள் (Perfect Will) எப்பொழுதும் இருந்துவிட வேண்டும். அவருடைய அனுமதி சித்தத்திற்குள் (Permissive Will) சென்றுவிடக்கூடாது.

இதைவிட மிகவும் பரிதாபமானவர்கள் எவரெனில், தங்களைத் தாங்களே தங்களது தவறான மாம்சீக விருப்ப உணர்வுக்கு (Perverted Will) ஒப்புக்கொடுத்து சிக்கிக்கொள்பவர்கள். இவர்கள் தங்கள் வாழ்வை முற்றிலும் இழந்து, தேவ திட்டத்திலிருந்தும் அவருடைய மேலான பாதுகாப்பிலிருந்தும் விலகிப்போனவர்கள். இதற்கு வேதாகமத்தில் **யூதாஸ், அனனியா, சப்பீராள், தேமா** இவர்கள் எல்லாரும் அழகான ஆரம்பத்தைத் துவங்கி, பின்பு சாட்சியிழந்து, இன்றும் நமக்கு ஒரு எச்சரிக்கைக்குரிய எடுத்துக்காட்டாக நிற்கின்றார்கள்.

பிரியமானவர்களே, தாவீதைக்குறித்து அவன் தன் காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்த பின்பு, நித்திரையடைந்தான் (அப். 13: 36) என்ற இந்த உன்னத சாட்சியின்படி நாமும் நம் தனி வாழ்வில் தேவனின் பூரண சித்தத்திற்கே நம்மை ஒப்புக்கொடுத்தவர்களாக வாழ்வோம்.

## ஜெப வாழ்வில் தேவ விருப்பம்

நம்முடைய ஜெப வாழ்வில் தேவ விருப்பம் (சித்தம்) நிறைவேறுகின்றதா? கர்த்தருடைய ஜெபத்திற்கு ஏற்ப நம் ஜெபம் அமைந்துள்ளதா? **‘‘நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்’’** (1 யோவான் 5:14) என்பதுதான் யோவான் நிருபம் நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடமேயன்றி, எதை வேண்டுமானாலும் கேளுங்கள் என்பதல்ல அதன் பொருள். Bro. Stanley அவர்கள் குறிப்பிடும்பொழுது, **‘‘உமக்குச் சித்தமானால்’’** எனக் கேட்ட தொழுநோயாளியை இயேசு கடிந்துக் கொள்ளாமல் சுகமாக்கினார். எனவே, அவ்வார்த்தை அவிசுவாச வார்த்தை இல்லை என்கிறார். என்றுமில்லாத அளவில் நமது ஜெப நேரங்களைக் கொள்ளை கொண்டுப்போக சத்துரு புதுப்புது திட்டங்களை, புதுப்புது செயலிகளை அறிமுகப் படுத்திக் கொண்டே இருக்கின்றான்.

தங்களுக்கு வரும் குறுஞ்செய்தியின் ஒலி ஓசையினால் அமைதியிழந்து அதனை உடனடியாக எடுத்து வாசிக்கத் துரிதப்படும் நபர்களில் நீங்களும் ஒருவரா? இந்த மனநோயிற்கு அநேகர் பலியாகி விட்டனர். இதில் இளையோரும், முதியோரும் விதி விலக்கல்ல. அரசாங்க வலைதளப் புள்ளி விபரப்படி,

- ✔ நம் நாட்டில் 18 வயதிலிருந்து 34 வயதுவரையுள்ள 71% இளைஞர்கள் Face Book பயன்படுத்துகின்றனர்.
- ✔ 40 கோடிக்கும் மேற்பட்டவர்கள் Whatsapp பயன்படுத்துகிறார்கள். இதில் உலக அளவில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது.
- ✔ 27 கோடிக்கும் மேற்பட்டவர்கள் Youtube Channel-ஐ பயன்படுத்தி, அதில் பல அசுத்தமான பதிவேற்றங்களைப் பதிவு செய்கின்றனர். இதில் உலக அளவில் இந்தியா 5-ம் இடத்தில் உள்ளது.

இப்படி Twitter, Instagram எனப் பல சமூக வலைதளங்களில் மூழ்கி, தங்கள் நேரத்தை அநியாயமாய் செலவழிக்கும் நிலைக்கு அநேகர் தள்ளப்பட்டு விட்டனர். இன்று பலருடைய ஒரு நாளின் முதல் பார்வையும் கைபேசிதான், அந்த நாளின் இறுதிப் பார்வையும் கைபேசி தான்.

கடந்த ஆண்டு நம் இயக்கத்தில் **H2H வீடுகள்தோறும்** என்றத் தலைப்பை ஜெபத்துடன் தீர்மானித்து, செயல்படுத்தத் திட்டமிட்டிருந்தோம். எதிர்பாராத விதமாக மார்ச் மாதத்தின் இறுதியில் நம்மை முடக்கிப் போட்டு செயலிழக்க வைத்த **"கொரோனாவால்"** அநேகர் Conference Call, Zoom Call எனப் பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, ஜெபத்தை அதிகப்படுத்தினர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக! பல முழுநேர ஊழியர்கள் தொடர்ச்சியாய் இதனைச் செய்தனர். இது மிக நல்லது, மிக அவசியம், அவசரமும்கூட. ஆனால், என் தனிப்பட்ட ஜெப நேரங்கள் தேவனுக்கு மகிமை கொண்டு வந்ததா? பரலோக விருப்பம் இதில் நிறைவேறியதா? சிந்தித்துப் பார்ப்போம்!

வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு சபைகளில் தேவனின் அங்கீகாரத்தைப் பெற்றது, இரண்டு சபைகள் மாத்திரமே. "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்" என்று கர்த்தர் குறை கண்டு, வேதனைப்பட்டது மீதமுள்ள ஐந்து சபைகளின் மேல் ஆகும். ஆகவே, நாம் "எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், ... எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?" (சங். 85:4,6) என்று கதறிய சங்கீதக்காரனைப் போல் கதறி, மனந்திரும்புவோம். குறைந்துப்போன நமது தனி ஜெபங்களையும், நின்றுப்போன நமது குடும்ப ஜெபங்களையும் சரி செய்வோம். ஏனெனில், **பிரசங்கம் செய்பவர்களைப் பார்த்தல்ல, ஜெபிக்கின்ற மனிதர்களைப் பார்த்தே பிசாசு நடுங்குவான்.**

## பொது வாழ்வில் தேவ விருப்பம்

சுவிசேஷப்பகுதியில் கிட்டத்தட்ட 43 இடங்களில், 'அவர் திரளான ஜனங்களைக் கண்டு' என்ற இத்தொடர் வார்த்தைகள் வருவதை நீங்கள் வாசிக்க முடியும். அதிலும் குறிப்பாக மத்தேயு இதனைக் குறிப்பிடும்பொழுது, 'அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள்மேல் மனதுருகினார்' (மத்தேயு 9:36) என்று குறிப்பிடுகிறார். திரளான ஜனங்களை நாம் காணும்பொழுது, இப்படிப்பட்ட கிறிஸ்துவின் மனதுருக்கம் நம் கண்களின் பார்வையிலோ, சிந்தையிலோ வருகின்றதா? இதைத்தான் தேவ மனிதனாகிய **E.M. பவுண்ட்ஸ்**, "மனிதர்கள் முறைமைகளைத் (Methods)

தேடுகிறார்கள்; கடவுளோ மனிதர்களைத் (Men) தேடுகிறார்" எனக் குறிப்பிட்டார். கைவசம் இருக்கும் 99 ஆடுகளின் மீதுள்ள மகிழ்ச்சியை விட, அவரது ஏக்கம் எல்லாம் தொலைந்துப்போன ஒரு ஆட்டின் மேல்தான். எனவேதான் இயேசு குறிப்பிடும்பொழுது **"இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது என் பிதாவின் சித்தமல்ல"** என்றார் (மத். 18:14).

ஒருமுறை கூடுகையொன்றில் Operation Mobilization (OM) இயக்கத்தின் நிறுவனரான ஜார்ஜ் வெர்வர் என்ற தேவ மனிதனை நான் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். கண்ணீருடன்கூடிய அவருடைய ஊழியப்பகர்வு, உலக ஊழியங்களைக் குறித்த அவரின் தூரப்பார்வை, இவை எல்லாவற்றையும் விட, அவர் தான் தனித்திருக்கும் நேரத்திலும் உலக வரை படத்தால் ஆன குறுந்தோற் சட்டை (Jerkins) – ஐ பிடித்துக்கொண்டு, உலக நாடுகளின் தேவைகளுக்காகப் பெயர் சொல்லி ஜெபித்துக்கொண்டிருந்த செயல் என்னை வெகுவாய்ப் பாதித்தது. ஆம், அவருடைய பிரசங்கங்களில் எப்பொழுதும் மையப் பிரசங்க வசனமாக, **"உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; நீ பெற்ற இன்பத்தை ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு; காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; "** (பிரசங்கி 11:1–6) என்ற இவ்வார்த்தைகளை ஆணித்தரமாக முழங்குவார்.

பிரியமானவர்களே! இன்று நம்மில் அநேகர் மக்களைக் கிறிஸ்துவின் அன்பிற்கு நேராய் வழி நடத்தும் பணியில் ஆர்வம் காட்டுவதில்லை. இன்று நம் சபைகளும் ஊழியங்களும், 98% கிறிஸ்தவர்களைச் சந்திப்பதிலேயே தங்களுடைய நேரத்தையும், பணத்தையும் செலவுச் செய்கின்றது. வெறும் 2% மட்டுமே அறியப்படாத மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது.

- ✔ உலக மக்கள் தொகையில், 6 நபர்களில் 1 நபர் இந்தியர்.
- ✔ உலகத்திலே சந்திக்க இயலாத மிகப் பழமையான 639 மக்களினங்களில் (Primitive People Groups) 485 மக்களினங்கள் இந்தியாவில் தான் இருக்கின்றன.
- ✔ இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களில் 13 மாநிலங்களில் இயேசுவைப் பின்பற்றுவோர் 1% க்கும் குறைவு.

35 ஆண்டுகளுக்கு ஒருமுறை நம் நாட்டின் ஜனத்தொகை இரு மடங்காகிறது என்கிறது புள்ளி விபரங்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, செருபாபேலுக்கு சொல்லப்பட்ட தேவவார்த்தைதான் நினைவுக்கு வருகிறது ...**"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்"** (சகரியா 4:7). இது எப்பொழுது நடக்கும்? நம் தேசமெங்கிலும் இருக்கின்ற அவசியத் தேவையைக் காணும்படியான தேவ கண்களை, தேவ சிந்தையை நாம் பெற்றுக்கொள்ளும் பொழுது மட்டுமே. "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்" (யோ.10:16) என ஏங்கும் ஆண்டவர் இயேசுவின் துக்கம் தணிக்கும் சீஷர்களாய் நாம் மாறுவோம்.

ஆம், **"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார்"** (1 தீமோ.2:4) என்ற வேத வசனத்திற்கிணங்க, தகப்பனே, உம் பரலோக சித்தம், நித்தம் இப்பூமியில் நிகழ எங்களையும் பயன்படுத்தும்! ஆமென்.

– அருள்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,
தமிழ்நாடு & பாண்டிச்சேரி
விரிவுப்பணி செயலர்

# முன்னோக்கி...!



## திரும்பிப் பார்த்து தேவனைத் துதிப்போம்!

“இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!” எனக் கடந்த 2020-ம் ஆண்டின் துவக்கத்தில் நாம் வாழ்த்திய போது, ‘2020’ இத்தனை கடினமான, துக்கம் நிறைந்த ஆண்டாக இருக்கும் என நாம் நம் கற்பனையில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம். கண்காணா எதிரி கோவிட்-19னின் கோரத் தாண்டவத்தால் உலகமே புரட்டிப் போடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது. 2020 மறக்க முடியாத துக்கம் நிறைந்த ஓர் ஆண்டாக மனித வரலாற்றில் பெயர் பெற்றுவிட்டது. ஆன்மீகவாதிகள், தத்துவ ஞானிகள், அரசியல்வாதிகள், சமூகவியலாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் மருத்துவ விஞ்ஞானிகள் என அனைத்து நிபுணர்களும் கூறிய விளக்கங்கள், சாமான்யர் அடைந்த துன்பங்களுக்கு விடைக்கூற முடியவில்லை. மார்தட்டி எங்கள் தேசத்தை மீண்டும் மிகச் சிறந்த தேசமாக மாற்றுவோம் எனக் கூறிய தேசியவாதத் தலைவர்களும் செய்வதறியாது கைபிசைந்து நின்றதையும், சாவு எண்ணிக்கை உயர்வதைத் தடுக்க முடியாமல் உலக மகா மருத்துவர்களும் திகைத்து நின்றதையும், சிலர் கண்ணீர் ததும்ப மக்களவையில் அறிக்கைகள் வாசித்தக் காட்சிகளையும் மறக்க முடியுமா? உலகமே விக்கித்து நின்றது! மனிதர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்ததுடன், நம்பிக்கை தளர்ந்து ஸ்தம்பித்து நின்றனர். தேசத்தின் எல்லைகள் அடைக்கப்பட்டன, ஊரடங்கு பெரும்பான்மையான தேசங்களில் அமல்படுத்தப்பட்டது, எனினும், நிலைமையோ கட்டுக்கு வரவில்லை. சமூக வலைதள ஊடகங்களில் பரவிய தவறான செய்திகளும், கற்பனைக்கதைகளும், பொய்யும் புரட்டும் மக்களை மென்மேலும் அச்சம், அவநம்பிக்கை நிறைந்தவர்களாக மாற்றி, சிலரைத் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளின. உலகம் சுற்றிய பயணிகள் வீட்டுக்குள் முடங்கினர். சிறுதொழில்கள் அடியோடு அழிந்தன. பெருந்தொழில் அதிபர்களும் திகைத்து நின்றனர். உலக அரசாங்கங்கள் சீர் குலைந்தன. பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது. இந்தியாவில் பல இலட்சம் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், பல்லாயிரம் மைல்கள் கால் கடுக்க நடந்துத் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிய பிம்பங்களை நாம் நமது மனத்திரையில் இருந்து அழிக்க முடியுமா?

‘ஒரு கெட்ட கனவு’ என 2020-ஐ மறந்துவிட நினைக்கின்றோம். நமக்கு நெருங்கிய பலர் இவ்வுலக வாழ்வில் இருந்தே விடைபெற்று விட்டனர். இக்கொடூரமான கொள்ளைநோயின் கோரப் பிடியில் இருந்து சிலர் தேவனின் அளவில்லா கிருபையால்

மீண்டு வந்தனர். பிறர் வாழ்வைக் காக்க தங்கள் உயிரைப் பணயம் வைத்து, சேவைச் செய்து பாதிப்பிற்குள்ளான முன்னணி வீரர்களைப் பாராட்டுகிறோம். துயர் துடைக்க பல்வேறு வகைகளில் உதவிய அனைவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. கண்ணுக்குப் புலப் படாத எதிரியுடன் போராடிய நாம் "என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?" (சங்.13:2) எனக் கதறினோம். மேலும், ''என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்" (சங்.6:3) என விண்ணப்பித்தோம்.

கர்த்தரைத் தங்கள் நம்பிக்கையாகக் கொண்டு, அவரது சத்திய வசனத்தின்படி வாழ வேண்டும் என அர்ப்பணித்து வாழ்ந்தவர்களுக்குக் கடந்த ஆண்டு பல்வேறு பாவங்களில் இருந்து மனம் திரும்பி, 'நம் கன்மலை' எனக் கருதும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவை இறுகப் பற்றிக்கொள்ளும் ஆண்டாக அமைந்தது. மேலும் ''நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்" (ஏசா.51:1) என்பதற்கேற்ப நாம் நமது ஆவிக்குரிய வாழ்வின் அஸ்திபாரங்களை, அடிப்படைகளைச் சோதித்துப் பார்த்து, சர்வவல்லவருடன் நம் உறவைப் புதுப் பிக்கும் ஆண்டாகவும் அமைந்தது.

## புதிய ஆண்டு 2021 எவ்விதம் இருக்கும்?

இப்புதிய ஆண்டில் நம்மை நாமே ஊக்கப் படுத்திக் கொள்வதற்காகவும் ''யாவும் நலமே" எனும் விநோதக் கற்பனையில் மிதப்பதற்காகவும் மறுபடியும் அர்த்தமற்ற வார்த்தை ஜாலங்களுக்கு மயங்கி, பல்வேறு ஜோதிடர்கள் "நாஸ்ட்ரடேமஸ்" போன்றோரின் புத்தகங்களுக்குக் கூறும் விளக்கங்களைப் பார்த்தும், கேட்டும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளப்போகிறோமா? அல்லது ''தீர்க்கதரிசனம்'' எனும் போர்வையில் போலி கிறிஸ்தவ ஊழியர் சிலரும், மற்றும் பிறமத வாக்குரைப்போரும் பகுத்தறிவுக்கும், வேதவார்த்தைக்கும் விரோதமாகக் கூறும் கற்பனைக்கதைகளை நம்பிக் கொண்டிருக்கப் போகிறோமா? இல்லை ஒருபோதும் கூடவே கூடாது!

## அடிப்படைகளுக்குத் திரும்புவோம்!

எதிர்காலம் நமக்காக எதை வைத்தி ருக்கிறது என்று நமக்கு இன்று தெரியாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தையே தன் கையில் வைத்திருக்கும் காலத்தின் அதிபதியை நாம் அறிந்திருக்கிறோம். எனவே, "காலத்தின் அருமையை ஞாலத்தில் உணர்த்தும் காலத்தின் அதிபதி''யை நாம் உற்று நோக்குவோம். பூரண நம்பிக்கையுடன் அவரை விசுவாசித்து வாழ்வோம். அவருடைய **"தூய வேதாகமம்"** கூறும் முழு வார்த்தைகளையும் உறுதியாய் பற்றிக்கொள்வோம். நம் மனதிற்குப் பிடித்த சில வார்த்தைகள், வசனங்களை மாத்திரம் எழுதப்பட்ட பின்னணியத்தை முற்றும் புரியா மலே நமக்கேற்றவாறு விளக்கமளித்து, நம் உணர்வுகளைத் தூண்டி நம்மை நாமே திருப்தி செய்துக்கொள்ள வைக்கும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம். இப்புதிய ஆண்டில், குடும்பமாக அமர்ந்து, வேதத்தை ஆராய்ந்துப் படித்து, உள்ளான மனிதனில் பெலன் கொள்வோம், தெய்வீக நற்சுபாவங்களை நாம் வளர்ப்போம். நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த

தலைவர்கள், கடந்த ஆண்டு ஜெபத்துடன் இவ்வியக்கத்தில் தொடர்பு கொண்டோர் அனைவருக்கும் வலியுறுத்தப்படும் கருத்தாக "வீடுகள்தோறும்" H2H என முழங்கினார்கள். இவர்கள் தங்களைத் தீர்க்கதரிசிகள் என்றோ, தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்றோ தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் ஆழ்ந்த ஆவிக் குரிய கரிசனையுடன், தூய ஆவியானவரால் ஏவப்பட்டதால் அக்கருத்தை வலியுறுத்தி, அதன் மூலம் நம் தனிப்பட்ட வாழ்வு, குடும்பம் மற்றும் சமுதாய வாழ்வில் நாம் அனைவரும் ''கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக" நிறுத்தப்பட வேண்டும் என்றும், வீடுகள்தோறும் மன்றாட்டு விண்ணப்பத் தூபம் நிறையவேண்டும் என்றும், அதன் மூலம் இந்த தேசம் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதே இவர் களின் இதயத் தாகமாக இருந்தது. இது பணித்தளங்களிலும், தாங்குவோர் முனையிலும் ஒருங்கே நடைபெற வேண்டும் என்பது இவர்களது இதய ஏக்கம். இந்த ஏக்கம் நிறைவேற கோவிட்-19 நமக்குத் தந்த 'ஊரடங்கு' ஓரளவு உதவியது. ஆவிக்குரிய சிந்தை நிறைந்த ஆண்களும், பெண்களும், பெரியோர் முதல் சிறியோர் வரை, நமது தேசத்திலும், உலகெங்கிலும் இந்த ஆவிக் குரிய மன்றாட்டுப் பயிற்சியை ZOOM மற்றும் பிற "எண்முறை மேடை" (Digital Platform) "மின்னியல் தளம்" வாயிலாகவும், கைபேசி கருத்தரங்கு உரையாடல் மூல மாகவும் நமது நாட்டிலும், உலகளவிலும் பலர் ஈடுபட்டு நடைமுறைப்படுத்தினர். நிலைமை கட்டிற்குள் வரும் வரையிலும், அதற்குப் பின்பும் இம்முறையை இப்புதிய ஆண்டிலும் தொடர்ந்து பின்பற்றலாம். 'காலத்தின் சவால்களுக்கு ஏற்ப தங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொண்டோர் பாக்கியம் பெற்றோர்' எனலாம்.

## நில், கவனி, முன்னேறு, ... பின்னடையாதே!

கடந்த ஆண்டு நமக்குக் கற்றுக்கொடுத்த பாடங்களை நாம் தொடர்ந்து இப்புதிய ஆண்டிலும் அப்பியாசிக்க வேண்டும். சூழ்நிலை மீண்டும் இயல்புநிலைக்குத் திரும்பும் வரை, இக்கட்டில் நாம் பயின்ற நற்காரியங்களைக் கைவிடாமல் கடை பிடிப்பது அவசியம். காலமும், சூழ்நிலை களும் மாறலாம். ஆனால், நாம் ஆராதிக்கும் தேவன் "மாறாதவர்." அவரது உடன்படிக்கை மாறாதது. "தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" (ரோமர் 11:29). கடந்த ஆண்டு நம்மை ஸ்தம்பிக்கச் செய்த நிகழ்வுகள், நமது உள்ளான ஆவிக்குரிய மனிதன் பலப்படவும், தேவனோடு நாம் கொண்டிருக்கும் நிலையான உறவு சீரடையவுமே என்று எண்ணி, இப்புதிய 2021-ம் ஆண்டின் சவால்களை எதிர் கொள்வோம்.

உலகம் மாறலாம்; ஆனால், நம்மையும் இந்த அண்ட சராசரங்களையும் ஆளும் தேவாதி தேவனின் விதிமுறைகள் என்றும் மாறுவதில்லை. எனவே, விசுவாசத்துடன் வீண்கவலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இவ்வுலகில் நாம் வாழும் வரை தொடர்ந்து முன்னேறிச் செல்வோம். பரிசுத்த பவுல் கூறுவது போல் "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்'' ( பிலி.1:21 ) என்று எதிர்காலத்தை எதிர்கொள்வோம். ''நம்பிக்கையூட்டும் நற்செய்தியை'' (கொலோ.1:4-6) நாம் நம் வாழ்வின் நங்கூரமாக்கிக் கொரோனாவை மட்டு மல்ல, அதைவிடக் கொடிய பிரச்சனை எது வந்தாலும் துன்பக்கடலில் தத்தளித்து மூழ்கிடும் நமது மக்கள் அனைவருக்கும் நம்பிக்கையூட்டுவோம்.

– அருள்திரு. என். பிரபாகர், FMPB.



# பெண்கள் ஆவிக்குரிய முகாமின் நிதித்தேவை!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் பங்கெடுத்து, இடைவிடாது ஜெபித்து, சளைப்பில்லாமல் கொடுத்து உழைத்து வரும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

நம் நாட்டின் கிராமப்புறங்களில், அதிலும் குறிப்பாக வட இந்திய மாநிலங்களில் சமுதாயத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டு, கல்வியறிவு இல்லாத நிலையில் சுகாதாரமற்ற சூழ்நிலையிலும், வறுமையிலும் வாழ்ந்துக்கொண்டிருந்த பெண்கள் மத்தியில் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பெண் மிஷனெரிகள் பணிசெய்ததன் விளைவாக அநேக பெண்கள் ஆண்டவர் பக்கம் திரும்பியுள்ளனர். கல்வியறிவு இல்லாதவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்தின் மூலம் கல்விக் கொடுத்து, அரை ஆடை அணிந்துக்கொண்டிருந்தவர்களுக்கு ஆடையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, தற்போது சமுதாயத்தில் பெண்கள் மத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளோம். வறுமையில் வாழ்ந்துக்கொண்டிருந்த பெண்கள் கல்வியறிவு பெற்றதன் விளைவாக அவர்கள் தங்கள் பிள்ளைகளும் கல்விப் பெறவேண்டுமென்று, பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி படிக்க வைக்க முன்வந்ததன் விளைவாக இளம் பெண்கள் தொழிற்சாலைகளிலும், மருத்துவமனைகளிலும் பணிசெய்ய ஆரம்பித்துள்ளனர். அநேகர் ஊழியர்களாகப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். உற்சாகமானப் பெண்கள் ஜெபக்குழுக்களை நடத்துவது, தனிப்பட்ட வேலை நேரம் தவிர பிற நேரங்களில் மற்றவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பது போன்ற ஊழியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படி நம் ஊழியங்களின் மூலமாக கிறிஸ்துவுக்குள் வந்த பெண்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுத்துவதில் நமது ஊழியர்கள் மிகவும் அக்கறை கொண்டு, மண்டலங்கள் மற்றும் பிராந்தியங்கள் வாயிலாக ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு முறை மூன்று நாட்கள் வரையிலும் ஆவிக்குரிய மேளாக்கள் நடத்துகின்றனர். ஆவிக்குரிய முதிர்ச்சிபெற்ற ஊழியர்களை வரவழைத்து, ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான சத்தியங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதோடுகூட, குடும்பத்தில் பெண்களின் முக்கியப் பங்கு என்ன? தங்கள் குழந்தைகளை ஆவிக்குரிய பிள்ளைகளாக உருவாக்குவது எப்படி? என்றும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. வருடத்தில் இரண்டு அல்லது மூன்று முறை இப்படி முகாம்கள் நடத்துவதன் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்துப் போகாமல், வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தருக்கு முன்னுரிமை கொடுத்து ஜெபத்தினால் அதை மேற்கொள்ள முடியும் என்பதில் உறுதியாய் நிற்க கற்றுக்கொள்கின்றனர். அவர்களது ஜெப ஜீவியம், ஊழிய வாஞ்சை, சாட்சியுள்ள வாழ்வு குன்றாமல் முன்னேற இம்முகாம்கள் வழிவகுக்கின்றன. இப்படி நடத்தப்படும் முகாம்களில் கலந்துக்கொள்ளும் விசுவாசிகளில் சிலர் தங்கள் சாட்சிகளைப் பகர்ந்து கொள்வதன்மூலம், முகாம்களில் கலந்துக்கொள்ளும்

அத்தனைப் பெண்களின் ஆவிக்குரிய வாழ்விலும் உத்வேகம் ஏற்படுகிறது. கிறிஸ்துவின் அன்பைத் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்த பெண்கள், தங்கள் அருகாமையில் வசிக்கும் கிறிஸ்தவரல்லாத பெண்களையும் இம்முகாம்களுக்கு அழைத்து வருவதன்மூலம் அவர்களும் கிறிஸ்துவின் அன்பை அறிந்துக்கொள்வதோடு, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஜெபித்துச் செல்கின்றனர்.

இப்படி அனைத்து மண்டலங்களிலும் பெண்கள் மத்தியில் முகாம்கள் நடத்த 2020-21 ஆம் நிதியாண்டிற்கென்று ரூ.**35,57,843/-** தேவை என்று இயக்கமாக நிர்ணயித்துள்ளோம். மூன்று நாட்கள் நடத்தப்படும் முகாம்களின் அனைத்துத் தேவைகள் உட்பட ஒரு தனி நபருக்கு ஒருநாள் ரூ.200/- முதல் ரூ.250/- வரையிலும், பணித்தளவாரியாக நடத்தப்படும் முகாம்களில் ஒரு தனி நபருக்கு ரூ.100/- முதல் ரூ.150/- வரையிலும் செலவுச் செய்யப்படுகின்றன. இவ்வூழியத்தேவைக்கென்று நீங்கள் கொடுக்க உங்கள் உள்ளத்தில் ஆண்டவர் இடைபடுவாரென்றால் உற்சாகமாகக் கொடுக்க முன்வாருங்கள். இத்தேவையை உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். இதன்மூலம் சமுதாயத்தில் பின்தங்கிய பெண்களின் ஆவிக்குரிய வாழ்வு மலரும். அவர்கள் மூலம் அநேகர் கிறிஸ்துவின் அன்பைக் கண்டுக்கொள்வார்கள்.

இவ்வூழியங்களுக்காக ஜெபியுங்கள். பெண்களின் ஆவிக்குரிய வாழ்வு செழித்து மலர வேண்டும்; பெண்கள் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்; விசுவாசப் பெண்கள் மூலம் கூட்டம் கூட்டமாக மக்கள் கிறிஸ்துவண்டை வர வேண்டும்; மூட பழக்கவழக்கங்கள் மறைய வேண்டும்; சமுதாய கட்டுப்பாடு நீங்க வேண்டும் என்று ஜெபியுங்கள்.

**மேலும் கூடுதல் விபரமறிய விரும்பினால் உங்கள் அருகில் வாழும் முன்னேற்றப் பணி செயலரையோ, கௌரவ முன்னேற்றப்பணி செயலரையோ அல்லது ஜெபக்குழுத் தலைவர்களையோ தொடர்பு கொள்ள பட்சமாய்க் கேட்கிறோம்.**

– நிதித்துறை

# மகிமைக்குள் பிரவேசித்தார்



தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் என்ற ஊரைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி விக்டோரியா தேவராஜ் அவர்கள், 14.11.2020 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சுமார் 25 ஆண்டுகள் ஜெபக்குழுத்தலைவராக இருந்து ஊழியர்களுக்காக ஜெபிக்கவும், ஊழியங்களுக்காக உதவிசெய்யவும் பலரை உற்சாகப்படுத்தியவர். இவருடைய சாட்சியுள்ள ஜீவியத்திற்காகத் தேவனைத் துதிக்கிறோம். இவருடைய பிள்ளைகள் திரு. ஜோசப் ஜெபசிங், திருமதி. கிருபாராணி ஆகியோரைத் தேவன் ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

– FMPB, பிராந்திய விரிவுப்பணி செயலர் – தூத்துக்குடி

# ஒரு புத்தாண்டு ஜெபம் 2021



“கிருபை நிறைந்த பரம பிதாவே, சென்ற ஆண்டு முழுவதும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும் உமது செட்டைகளின் கீழ் என்னைப் பாதுகாத்ததற்காய் உம்மைத் துதிக்கிறேன்.

“ஆண்டவரே, உமது அன்பின் கரங்களிலிருந்து நான் பெற்றிருக்கும் ஆன்மீக, உடலுக்கடுத்த, பொருளாதார ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் உமக்கு நன்றி. இவை ஒன்றிற்கும் என்னிடம் தகுதியேதும் கிடையாது, அப்பா. எல்லாம் உமது கிருபையினாலேயே.

“உமது குமாரனாகிய கிறிஸ்துவானவர், பரிசுத்த ஆவியானவர், பரிசுத்த வேதாகமம், உமது மக்களோடுள்ள சகவாசம் ஆகிய ஈவுகளுக்காக, தேவா, உம்மைத் துதிக்கிறேன். நான் அல்ல, நீரே முதலாவது என்னிடம் அன்புகூர்ந்தீர். எனது வாழ்வின் துவக்கமும் முடிவுமானவர் நீரே என்று உம்மை ஆராதிக்கிறேன்.

“கர்த்தாவே, இன்னொரு ஆண்டிற்குள் நான் நுழையக் கிருபை செய்ததற்காய் உம்மைத் துதிக்கிறேன். என்னைவிடப் பரிசுத்தமும் தேவ பக்தியும் நிறைந் திருந்தவர்களிலும் பலர் சென்ற ஆண்டு இறந்துவிட்டனர். எனது வாழ்வு இன்னும் கனி நிறைந்து காணப்படவேண்டும் என்ற உமது எதிர்பார்ப்பையே அது எனக்கு உணர்த்துகிறது. உம்மை ஏமாற்றிவிடாதிருக்கச் செய்யும்.

“தேவனே, நீர் என்னிடம் ஒப்படைத்துள்ள தருணம், தாலந்துகள், தனம் ஆகியவற்றின் பொறுப்புகளில் உத்தமமாயிருக்க எனக்குதவியருளும். இந்த ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நான் சொந்தக்காரன் அல்ல; பயன்படுத்துவதற்காக மட்டுமே இவை என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளன என எப்பொழுதும் உணரச் செய்யும்.

“எனது ஜெபமின்மை, வேதத் தியான அசட்டை, ஆத்துமாதாயத்திலும் நற்செய்தி அறிவிப்பிலும் சோம்பல், தானதர்மத்தில் கஞ்சத்தனம் ஆகியவற்றை உம்மிடம் அறிக்கையிடுகிறேன். ஆண்டவரே, உம்மைப்போலப் பார்க்க என் கண்களைத் திறந்தருளும். உமக்காகப் பேச எனது வாயைத் திறந்தருளும். உம்மைப்போல் தாராளமாயிருக்க என் கைகளைத் திறந்தருளும். என்னை மறுபடியும் உமது பலிபீடத்தில் கிடத்துகிறேன்.

“அக்கிரமமும் அன்பின்மையும் பெருகிவரும் இந்தக் கடைசி நாட்களில், ஆண்டவரே, எனது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உடன் விசுவாசிகள், உடன் பணியாளர்கள் யாவரிடமும் அன்புடன் பழகவும், அவர்களது உரிமைகளை மதித்து நடக்கவும் எனக்கு உதவும். யாவரோடும் சமாதானத்துடன் வாழவும், சமாதானத் திற்காய்ப் பாடுபடவும் என்னை நடத்தும். தீமைக்கு நன்மை செய்து தன்னலமற்று மற்றவர்களிடம் அன்பு செலுத்த எனக்கு அருள் தாரும்.

"அன்புள்ள பிதாவே, இவ்வாண்டில் நான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர உதவி தாரும். எனக்குள் குடிகொண்டிருக்கும் ஆவியானவரது ஒத்தாசையினால் நான் உமது குமாரனாகிய இயேசுவைப்போல மாறிக்கொண்டேயிருக்க அருள் செய்யும். நான் வெற்றியின் மேல் வெற்றியும், பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமும், மகிமையின்மேல் மகிமையும் அடைய வாஞ்சிக்கிறேன். எனது வாஞ்சையை எனக்கு நிறைவேற்றித் தாரும்.

"பிதாவே, உமது குமாரனை நீர் சீக்கிரம் இவ்வுலகிற்குள் திரும்ப அனுப்பவிருப்பதற்காய் உம்மைத் துதிக்கிறேன். அவரது வருகைக்காய் வாஞ்சித்து நிற்கிறோம். இந்த மகிமையான நிகழ்வுக்காய் நாங்களும் ஆயத்தப்பட்டு, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த உதவி செய்யும். உமக்கு முன்பாக எங்களை உமது குமாரன் குற்றமற்றவர்களும் பழுதற்றவர்களுமாய் நிறுத்தப் போவதற்காகவும், நாங்கள் உம்மோடு புதிய வானம் புதிய பூமியில் என்றென்றுமாய் வாழப் போவதற்காகவும் பரவசத்துடன் உம்மைப் போற்றுகிறோம்.

"எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் மூலம் எல்லாத் துதியும் கனமும் மகிமையும் உமக்கே உண்டாவதாக! ஆமென்!"

– R. ஸ்டான்லி, BYM – நிறுவனர்.


UPI Accepted Here

ICICI Bank iMobile BHIM

Merchant Name M/S.FRIENDS MISSIONARY PRAYER BAND
Mobile Number 9444396217

Steps to Pay
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

## காணிக்கை அனுப்புவதற்கு
# பார்கோடு வசதி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் கீழ்காணப்படும் பார்கோடு வசதியையும் தேவையானால் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.



# மொழிப்பெயர்ப்புப் பணியில் மற்றுமொரு மைல்கல்

## காந்தேஷி பீலி மொழியில் புதிய ஏற்பாடு!



மொழிப்பெயர்ப்பாளர்களைக் கௌரவித்தல்






முக்கிய பிரமுகர்களுடன் காந்தேஷி பீலி இன விசுவாசிகள்



மொழிப்பெயர்ப்பாளர்கள் குழு

நமது இயக்கத்தின் மிஷனெரிகள் 13 மொழிகளில் வேதாகமத்தை மொழிப்பெயர்க்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நாம் அறிவோம். மால்தோ மொழியில் (சௌரியா பகாடியா) முழுவேதாகமமும் ஏற்கனவே மொழிப்பெயர்க்கப்பட்டு, அது நமது விசுவாசிகளின் கைகளிலும் இதயத்திலும் தவழ்ந்துக்கொண்டிருக்கின்றது. மேலும் 13 மொழிகளில் குறிப்பாக மால்தோ ( குமார்பாக் ), சௌத்ரி, வசாவி ஆம்புடி, வசாவி தேவாலி, வசாவி காந்தேஷி, வார்லி டோக்ரி, வார்லி தாவ்ரி, வார்லி நிஹிரி, டுங்ராபீலி, ஹரியான்வி, பாவ்ரி, காந்தேஷி பீலி மற்றும் குடுக் ஆகிய மொழிகளில் வேதாகமம் முழுமையாகவும், பகுதி களாகவும் மொழிப்பெயர்க்கப்பட்டு வருகின்றன. அதுதவிர மேலும், ஆறுமொழிகளிலும் மொழிப்பெயர்ப்புப்பணி துவங்கவுள்ளது.

தேவ ஒத்தாசையால் காந்தேஷி பீலி மொழியில் புதிய ஏற்பாடு முழுவதும் மொழிப் பெயர்க்கப்பட்டு, கடந்த நவம்பர் மாதம் 26-ம் தேதி 2020-ல் மகாராஷ்டிரா மாநிலம், காந்தேஷ் பிராந்தியத்திலுள்ள சாக்ரி (Sakri) பணித்தளத்தில் மாலன்காவ் என்னும் ஊரிலுள்ள நமது தேவாலயத்தில் வைத்து தேவநாம மகிமைக்காக அப்புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வைபவத்தில், சர்வதேச மனித உரிமை நிறுவனத்தின் உதவித்தலைவர் (International Human Rights) திரு. ஜோசப் மால்பாரி அவர்களும், அப்பகுதியிலுள்ள சட்டசபை உறுப்பினரான (MLA) திருமதி மஞ்சுளா கவித் அவர்களும், அருள்திரு. தேவேந்திர சிண்டே (DYSP-Nasik) மற்றும் நமது இயக்கத்தின் மூத்த மிஷனெரிகளும், சுதேச ஊழியர்களும், விசுவாசிகளுமாக சுமார் 2000 பேர் சமுதாய இடைவெளி நெறிகளைக் கடைபிடித்து, கலந்துச் சிறப்பித்தார்கள். கடந்த 18 ஆண்டுகளாக நமது மிஷனெரிகள் இந்த பிராந்தியத்தில் ஆற்றிய மிஷனெரிப்பணியினாலும், கடந்த ஏழு ஆண்டுகளாக நடந்து வந்த காந்தேஷி பீலி மொழிப்பெயர்ப்புப்பணியினாலும், நமது ஊழியத்தில் இந்த புதிய மைல்கல்லை அடைய தேவன் நமது மிஷனெரிகளுக்குக் கிருபை பாராட்டினார். இம்மொழிப்பெயர்ப்புப்பணியில் ஈடுபட்டுவருகிற சகோ. அஜய்குமார் லிமா மற்றும் அவரது மனைவி சகோதரி பிரத்யாசனி லிமா அவர்களையும், அதற்கு உறுதுணையாயிருந்த அனைத்து மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளையும் உளமாரப் பாராட்டுகிறோம். முழுவேதாகமமும் இந்த காந்தேஷி பீலி மொழியில் கூடிய விரைவில் வெளிவரத் தொடர்ந்து ஜெபிப்போம்.

## விசுவாச மகளிரின் அழகிய சங்கமம் - 2021

**(திருவள்ளூர் மண்டலம்)**

நாள்:
ஜனவரி 26, 2021 செவ்வாய் கிழமை

நேரம்: காலை 7.00 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

இடம்: வசந்தம் திருமண மண்டபம்,
பட்டாபிராம்.

காலை உணவு மற்றும் மதிய உணவு ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளது.

தொடர்பு: FMPB - Zonal Office
PH: 044-26852200

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. சாமுவேல் அவர்கள், 15.08.2020 அன்று தனது 54-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஸ்கேன் பொறுப்பாளராகக் கோவூர் பகுதியில் திறம்படச் செயல்பட்டவர். இவரது மனைவி சகோதரி கிறிஸ்டி சாமுவேல் மற்றும் பிள்ளைகள் பிரவீணா, பெமீனா ஆகியோரைத் தேவன் ஆற்றித்தேற்றி, பெலப்படுத்த ஜெபிப்போம்.

–FMPB, கௌரவ விரிவுப்பணி செயலர்,
குன்றத்தூர்.

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. J. செல்லத்துரை அவர்கள் (வயது 76), உடல் பெலவீனத்தின் காரணமாகக் கடந்த 04.08.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமம் பணிமாவட்டத்தின் ஜேம்ஸ் டவுன் பகுதியில் 20 ஆண்டுகளாக நமது ஜெபக்குழுத்தலைவராகவும், உண்டியல் காணிக்கை சேகரிப்பவராகவும் இருந்து வந்தார். இவர் தனது மகனைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக மிஷனெரியைத் தாங்குபவராக வழிநடத்தி வந்தார். இவர் விட்டுச் சென்றுள்ள இவரது குடும்பத்தாரைத் தேவன் ஆறுதல்படுத்த நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

– கௌரவ விரிவுப்பணி செயலர்,
அஞ்சுகிராமம் பணிமாவட்டம்.

# காலச் சுவடுகள்





மெல்வில் பி. காக்ஸ்

## ஒரு போதும் விட்டு விடாதீர்!

மேற்கு ஆப்பிரிக்காவில் லைபீரியா நாட்டில் மன்ரோவியா பகுதியில் அமைந்துள்ளது, மெதடிஸ்ட் உயர்நிலைப் பள்ளி. 1839-ல் திறக்கப்பட்ட இப்பள்ளி ஆப்பிரிக்காவின் மிகப் பழமையான பள்ளிகளில் ஒன்றாகும். லைபீரியாவின் பெருந்தலைவர்களை உருவாக்கியுள்ளது இப்பள்ளியின் வரலாற்றுச் சிறப்பாகும். அவ்வாறு இப்பள்ளியின் முன்னாள் மாணாக்கர்களே, ஆப்பிரிக்காவின் முதல் பெண் அதிபரான லைபீரியாவின் ஜனாதிபதி எல்லன் ஜான்சன் சிர்லீஃப் மற்றும் லைபீரியாவின் துணை ஜனாதிபதி ஜோசப் போவாக். மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள இப்பள்ளியின் பிரதானக் கட்டிடத்திற்கு 'மெல்வில் பி. காக்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஏனெனில், மெதடிஸ்ட் மிஷனெரியாக அமெரிக்காவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு வந்து இப்பள்ளியை நிறுவியது இவரே.

'மேய்ன்' என்ற பகுதியில், 1800-ல் எப்பாபிராஸ் கிப்பி என்பவர் ஒரு எழுப்புதல் கூடுகையை நடத்தினார். இக்கூடுகையில் மெல்வில் மற்றும் இவரது இரட்டை சகோதரரான கொர்சோம் ஆகியோர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, திருமுழுக்குப் பெற்றனர். இவர் நியூ இங்கிலாந்தின் மெதடிஸ்ட் கூடுகையில் 1822-ல் தன்னை ஊர்களில் பிரசங்கம் செய்பவராகப் பதிவு செய்து கொண்டார். ஆனால், 1825-ல் இவரைக் காசநோய் தொற்றிக்கொண்டது. எனவே பிரசங்கம் செய்ய முடியாததால், 'பால்டிமோர்' என்ற இடத்திற்குச் சென்று, அங்குள்ள ஒரு புத்தகக்கடையில் வாரப்பத்திரிக்கையைத் திருத்தம் செய்யும் பணியை மேற்கொண்டார். இவர் எல்லன் கிராம்வெல் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். பின் இரு ஆண்டுகளுக்குள் இவரது மனைவி எல்லன், இவரது இளைய மகள் மற்றும் இவரது பல நெருங்கின உறவினர்கள் யாவரும் காலரா தொற்றுநோயினால் இறந்தனர். இத்துயர சம்பவம் மெல்வில்லை அதிகமாகப் பாதித்தது. எனினும், உலக உறவுக்கட்டுகளிலிருந்து தான் விடுவிக்கப்பட்டதாகவும், மிஷனெரி ஊழியத்திற்கு தான் செல்ல வேண்டியச் சூழலாக இந்நிகழ்வு இவர் வாழ்வில் நிகழ்ந்திருக்கலாம் என்றும் கருதினார்.

1831-ம் ஆண்டில் மெல்வில் மிஷன் ஊழியத்தில் நாட்டங்கொண்டு, இயேசுவின் நற்செய்தியை ஒருமுறையேனும் கேட்டிரா தோர் மத்தியில் அதை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆவல் இவரது உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. மெதடிஸ்ட் எப்பிஸ்கோபல் திருச்சபை 1819-ல் ஒரு மிஷனெரிச் சங்கத்தை ஆரம்பித்திருந்தது. ஆனால், அயல் நாட்டிற்குச் செல்லக்கூடிய தகுந்த மிஷனெரி எவரும் அதற்கு கிடைக்க வில்லை. அந்நாட்களில், அமெரிக்க மாகாணங்களிலிருந்து விடுதலை பெற்ற அடிமைகள் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பி வந்து, லைபீரியாவில் குடியேறினர். இப்படிப்பட்ட மக்களின் இரட்சிப்பிற்காக ஆப்பிரிக்காவிற்கு யாரையாவது அனுப்ப வேண்டும் என்று இத்திருச்சபை தீர்மானித்து, அதற்காக நிதியைச் சேர்க்க ஆரம்பித்தது. இருந்தாலும் சவாலான இம்மிஷனெரிப்பணியை மேற்கொள்ள யாரும் முன்வரவில்லை. அச்சமயம் பேராயர் எலியா ஹெட்டிங்கை மெல்வில் சந்தித்து, தான் மேற்கு ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதியிலுள்ள லைபீரியாவில் தங்கியிருக்கும் விடுதலை பெற்ற அடிமைகள் மத்தியில் ஊழியம் செய்ய விரும்புவதாகக் கூறினார்.

மெல்வில்லின் உடல்நலத்தை நன்கு அறிந்திருந்த அவரது நண்பர், "நீ ஆப்பிரிக்கா சென்றால், அங்கேயே இறந்து விடுவாய்!" எனக் கூறினார். அதற்கு "நான் ஆப்பிரிக்காவில் மரித்தால், என்னுடைய கல்லறைவாசகத்தை நீ தான் அங்கே வந்து எழுதவேண்டும்!" என்று மெல்வில் பதிலளித்தார். தன்னிடம் கிறிஸ்து இருக்கும் வரையில், அவருக்காகப் பணியாற்ற தன் தாய்நாட்டிலிருந்து தொலைவில் சென்று மரித்தாலும் எந்தப் பாதகமுமில்லை என்று மெல்வில் கருதினார். அப்படியே தான் அங்கு மரித்தாலும், தன் மரணம் பிறரை ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்யத் தூண்டிவிடும் என்றே மெல்வில் நினைத்தார். இவ்வாறு இவர் தன்னுடைய உணர்வுகளைத் தனது கல்லறைவாசகம் பிரதிபலிக்கவேண்டும் என்றும் உறுதியாக விரும்பினார்.

"உன் கல்லறையில் நான் எதை எழுதலாம்?" என்று நண்பர் கேட்டார். அதற்கு மெல்வில் மெதடிஸ்டுகளுக்கே உரிய உற்சாகமானப் பதிலாக, "ஆப்பிரிக்காவை விட்டுவிட வேண்டுமென்றால், அதற்குமுன் ஆயிரம்பேர் மடியட்டும்!" எனக் கூறினார். இவ்வாறு கிறிஸ்துவின் அன்பிற்காகத் தன்னையே மறந்து, தன்னையே தியாகம் செய்ய முன் வந்த இவரது இவ்வார்த்தைகளின் வாயிலாகப் பலர் ஆரம்பக்கால மிஷன் ஊழியங்களுக்குத் தங்களை அர்ப்பணித்தனர். பின்நாட்களில் மெல்வில்லின் விசுவாசத்தால் அமெரிக்க மெதடிஸ்ட் திருச்சபையிலிருந்து பலர் தூண்டப்பட்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, ஆப்பிரிக்காவிற்குச் சென்றனர்.

06.11.1832-ல் மெல்வில், 'ஜுப்பிட்டர்' என்ற கப்பலின் வாயிலாக லைபீரியாவுக்குப் பயணமானார். அமெரிக்க மெதடிஸ்டுகளால் அயல் நாட்டிற்கு அனுப்பப்பட்ட முதல் மிஷனெரி மெல்வில். இவர் கடற்பயணத்தின் போது, ஊழியத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டினார். ஆனால் அவற்றையெல்லாம் செயல்படுத்துவது தன் கரத்தில் இல்லை என்பதை உணர்ந்து, தான் ஒரு மோசே மட்டுமே என்றும்; கர்த்தர் தொடர்ந்து பல யோசுவாக்களை அனுப்ப வேண்டும் என்றும் விரும்பி ஜெபித்தார். பின்னர் அடுத்த ஆண்டு 1833- மார்ச் மாதத்தில் லைபீரியா வந்தடைந்து, கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுத்தார்.

அதன்பின் உடனடியாக, அமெரிக்காவிலிருந்து திரும்பிய கறுப்பின கிறிஸ்த

வர்களைக் கூட்டி, ஒரு திருச்சபையை ஆரம்பித்தார். மேற்கு ஆப்பிரிக்காவின் வரைபடத்தை வைத்துக்கொண்டு பல திட்டங்களையிட்டு, அதற்கு முதற்படியாக, ஒரு பள்ளிக்கூடத்தைத் துவக்கி, அதில் 70 மாணவர்களுக்கு கல்விப் புகட்டினார். அதினூடாக முறையே முகாம்கள் நடத்தி, அதன்பின் வழக்கமாக நடக்கும் ஆராதனை, ஓய்வுநாள் பள்ளி ஆகிய வற்றை தான் வந்த சில வாரங்களுக் குள்ளாகவே தொடங்கி, தனது ஊழியத் திட்டங்களை மேம்படுத்தினார். இவர் எதிர்பார்த்திருந்தபடியே மரணம் இவரை விட்டு வைக்கவில்லை; மலேரியா நோய் இவரைத் தொற்றிக்கொண்டது. மலேரியா தாக்குதலால் அதிக வேதனையுற்ற மெல்வில் தாயகத்திற்குத் திரும்பியிருக் கலாம்; ஆனால், இவர் அவ்வாறு செய்யாமல் அங்கேயே தங்கியிருக்கத் தீர்மானித்தார்.

தன்னுடைய கையேட்டில் கடைசியாக 20.06.1833-ல் மெல்வில், “கர்த்தருக்கு எல்லாவற்றையும் அர்ப்பணிக்கின்றேன்,” எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் தான் அதிகம் பெலவீனமானபோதிலும், மேலும் 21.07.1833 வரை ஒருமாதக் காலம் தாக்குப்பிடித்தார். ஆப்பிரிக்கா விற்கு வந்து நான்கரை மாதங்கள் கழிந்தபின்னர், நோயின் கடுமையான காய்ச்சலின் மத்தியில் இவர், “நான் மகிழுகின்றேன்; நான் மகிழுகின்றேன்; ... என் நாட்கள் என்றென்றும் நீடிக்கும்,” என்றுப் பாடினார். மெல்வில்லின் இந்த உற்சாக ஆவி பிந்தைய நாட்களில் பலரைத் தொற்றிக்கொண்டதினால், ஊழியங்களுக்கு மேலும் அதிகமான மிஷனெரிகளைத் தேர்ந்தெடுக்க இது வழிவகுத்தது.

மெல்வில்லின் ஊழியம் கொடிய வலி களுடன் மிகக் குறுகியதாக இருந்தாலும், அது வீணாய்ப் போகவில்லை. அவரு டைய வீரமரணத்திற்குப் பின், பலர் ஆப்பிரிக்காவிற்குச் சென்றனர். பிறகு லைபீரியாவில் மூன்று மிஷன் பணித் தளங்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஆப்பிரிக்கா முழுவதுமாக ஐக்கிய மெதடிஸ்ட் திருச் சபைகள் உருவாக்கப்பட்டன. முன்னதாக சிறுவர்களுக்கென கல்வி அமைப்பே இல்லாத இப்பகுதிகளில். பல்வேறு வயதினருக்காக 80 பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னோடி மிஷனெரிகளுடைய ஊழியப்பணிகளின் மகத்துவத்தை அறிந்தவர்கள் மட்டுமே தரையில் விழுந்த இக்கோதுமை மணியின் மதிப்பை நன்கு உணரமுடியும். இவர் தனது வாழ்வின் பலவித சோர்புகளின் மத்தியிலும் அதிக வல்லமையான இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அதிஉற்சாகமாகப் பிறரி டையே மேம்புற எடுத்தியம்பியிருக்கும் விதம் இன்றுவரையும் தொடர்கிறது. ஊழியத்திற்கென ஒரு வீடு, பள்ளிக்கூடம், இளம் கிறிஸ்தவர்களுக்காக இறையியல் பாடசாலை, ஆலயங்கள் ஆகியவை எழுப்பப்பட வேண்டும் என்ற தரிசனத்தை மெல்வில் பெற்றிருந்தார். அவரது மரணத்திற்குப்பின் இவையனைத்தும் நிறைவேறின. ஆப்பிரிக்காவிலுள்ள அவரது கல்லறையில் எழுதப்பட்டுள்ள **“ஆயிரம் பேர் வீழ்ந்தாலும், ஆப்பிரிக்கா விட்டுவிடப்படக் கூடாது!”** என்ற வாசகம், மெல்வில்லின் தீராத தாகத்தை இன்றும் உச்சரித்துக்கொண்டே இருக்கிறது. மெய் தேவன் மெல்வில்லிற்கு அருளிய ஊழிய அழைப்பிற்கு ஏற்றவாறு, இன்றும் ஐக்கிய மெதடிஸ்ட் சபை செயல்பட்டு வருகின்றது என்பது பெரும் வியத்தகு விந்தையன்றோ!

*- சகோ. டேவிட் பென்னி*

# வஞ்ஜார்கோடி சபை வரலாறு

அஹ்வா பணித்தளம்,
சஹயாத்ரி பிராந்தியம்

குஜராத் (மேற்கு)
மண்டலம்



*எழுதியவர்*
அருள்திரு. எல். மாசிலாமணி

வஞ்ஜார்கோடி கிராமம், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள டாங் ஜில்லாவின் அஹ்வா தாலுகாவில் அமைந்துள்ளது. கிராமத்தின் அருகிலுள்ள நகரம் அஹ்வா ஆகும். மொத்த கிராமத்தின் பரப்பளவில் 4.48 சதுர கிலோமீட்டர் (80%) காடுகளால் சூழப்பட்டுள்ளது. இந்த கிராமத்தில் 259 பேர் வசிக்கின்றனர். 96.55% தொழிலாளர்கள் தங்கள் வேலையைப் பிரதான வேலைவாய்ப்பு அல்லது 6 மாதங்களுக்கும் மேலாகச் சம்பாதிப்பது என்று விவரிக்கிறார்கள். அதே நேரத்தில் 3.45% பேர் 6 மாதங்களுக்கும் குறைவான வாழ்வாதாரத்தை வழங்கும் குறுந்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பிரதான வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள 145 தொழிலாளர்களில், அதிகமானோர் சொந்தமாக நிலம் வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகள் (உரிமையாளர் அல்லது இணை உரிமையாளர்), மீதமுள்ளோர் விவசாயத் தொழிலாளர்கள். 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தவிர வஞ்ஜார் கோடியின் கல்வியறிவு விகிதம் 55% ஆகும்.

## *மக்கள் இனம்:*

வஞ்ஜார்கோடியிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 98.84% பட்டியல் பழங்குடியினராவர். பீல் மற்றும் குக்னா ஆதிவாசி மக்களினம் இங்கு வாழ்கின்றனர்.

## *ஊழிய ஆரம்பம்:*

அருள்திரு. எல். மாசிலாமணி அவர்களது குடும்பம் 08.05.1981 அன்று, பிப்பள்தகாட் கிராமத்தில் ஒரு வாடகை வீட்டில் சென்றுக் குடியேறி, அஹ்வா பணித்தளத்தைத் திறந்தனர். 12.03.1983 அன்று தோலியம்பார் கிராமத்தலைவரும் மற்ற புதிய விசுவாசிகளும் மிஷனெரிகளைத் தங்கள் கிராமத்திற்கு அழைத்ததால், மிஷனெரிகள் தோலியம்பார் கிராமத்தில் வசிக்கச் சென்றனர். தோலியம்பார் மற்றும் அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த பலர், கிறிஸ்துவிடமிருந்து சுகம் பெற தோலியம்பாருக்கு வந்தனர். தேவன் பல அற்புதங்களைச் செய்தார். பலர் இயேசுவை நம்பினார்கள். சுவிசேஷகர் சம்பத்பாய் மிஷனெரிகளுடன் இணைந்து பணிபுரிந்தார்.

திரு. கங்காராம்பாய் சோமன்பாய் குடும்ப உறுப்பினர்கள் வஞ்ஜார்கோடி கிராமத்தில் முதல் விசுவாசிகளாக இருந்தனர்.

அவர் காச நோயால் பாதிக்கப்பட்டார். அப்பொழுது தோலியம்பார் கிராமத்தில் நடந்துக்கொண்டிருந்த கிறிஸ்தவ ஊழியம் பற்றி அவர் கேள்விப்பட்டார். உடனே, பணித்தள மிஷனெரி அருள்திரு. எல். மாசிலாமணியை அணுகினார். மிஷனெரி அவரை அஹ்வா அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவருடன் கூடவே வரிசையில் நின்று, மருத்துவமனையில் மருத்துவருடன் பேசி, சிகிட்சைக்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஜெபத்தினாலும் மற்றும் மருந்துகள் எடுத்துக்கொண்டதினாலும் அவர் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்தார். அவரும் அவரது மனைவியும் மேலும் ஒரு நபருடன் 1988 -ம் ஆண்டில் தனது கிராமத்திலிருந்த திருச்சபையில் இணைந்தனர். 1989-ம் ஆண்டில் திரு. லஹானுபாய் கிசன்பாய் என்ற ஒரு குடும்பம் கிறிஸ்தவ நம்பிக்கைக்குள் வந்தது, அவர்கள் 1989-ல் திருச்சபையில் இணைந்தனர்.



ஜுலை 1995-ல் மிஷனெரி அருள்திரு. டி. ஆபிரகாம் குடும்பம், மிஷனெரி அருள் திரு. பெத்துவேல் பர்தனின் குடும்பத்திற்கு உடன்ஊழியராக அஹ்வா பணித்தளத்தில் சேர்ந்தனர். ஏப்ரல் 1996-ல், மகாராஷ்டிரா மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பிம்பள்நேர் பணித்தளத்தை மிஷனெரி அருள்திரு. பெத்துவேல் பொறுப்பேற்றதால், அருள்திரு. டி. ஆபிரகாம் குடும்பம் கார்கடி (அஹ்வா) பணித்தளத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

ஏப்ரல் 1996-ல் அருள்திரு. டி. ஆபிரகாம் அஹ்வா பணித்தள மிஷனெரியாக, கார்கடி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தார். ஆகஸ்ட் 1997- கார்கடி (அஹ்வா பணித்தளம்) மாதாந்திர அறிக்கையில் அவர் வஞ்ஜார்கோடி கிராமத்தில் புதிய கூட்டம் தொடங்கப்பட்டதை, "வஞ்ஜார்கோடி மற்றும் பத்தின கவ்டான் ஆகிய கிராமங்களில் புதிய கூட்டங்கள் தொடங்கப்பட்டன" எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த கூட்டம் சோனிராவ்பாய் இந்தர்பாயின் வீட்டில் தொடங்கப்பட்டது.

## *சோனிராவ்பாய் விசுவாசத்திற்குள் தான் வந்ததை விவரிக்கிறார்:*

"1994-ல் என் சகோதரர் சந்தியாராம் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவர் இடுப்பில் கட்டி இருந்தது. அவரைக் குணப்படுத்துவதற்காக மந்திரவாதிகள் மூலமாகப் பூஜைகளை நாங்கள் செய்தோம். என் சகோதரரை அஹ்வா அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வ தற்காக வாகனம் பெற சுவிசேஷகர் ஜீவல்யாபாயைத் தொடர்பு கொண்டோம். அவர் குணமடைந்தால், நான் ஒரு கிறிஸ்தவனாகிவிடுவேன் என்று சொன்னேன். ஜீவல்யாபாய் எனக்கு ஒரு வாகனம் பெற உதவினார்; என் சகோதரருக்காகவும் ஜெபம் செய்தார். என் சகோதரருக்கு அறுவை சிகிட்சை செய்யப்பட்டது, அவர் நலமடைந்தார். இயேசுகிறிஸ்துவைத் தொடர்ந்து விசுவாசிக்கும்படி ஜீவல்யாபாய் என்னை அறிவுறுத்தினார். நானும் என் சகோதரனும் கிறிஸ்தவர்களாகிவிட்டோம். பிப்லாய்தேவி

கிராமத்தில் திருச்சபையில் இணைந்தோம். பின்னர் என் மனைவி சுகவீனமானாள். மந்திரவாதிகள் மூலமாகப் பூஜை செய்ய என் தந்தை சொன்னார். ஆனால் நான் மறுத்துவிட்டேன். எனது கிராமத்தில் ஒரு குடும்பமாக நான் முதல் கிறிஸ்தவனாக இருந்தேன். என் குடும்பத்தில் ஏழு முதல் எட்டு பேர் ஆரம்பத்தில் திருச்சபையில் இணைந்தோம். ஆராதனைக்காக பிப்லாய்தேவி தேவாலயத்தில் கலந்துக் கொண்டோம். அதன்பின்னர் 1997 முதல், மிஷனெரி அருள்திரு. டி. ஆபிரகாமின் காலத்தில், எங்கள் கிராமத்தில் வாராந்திர கூட்டங்கள் தொடங்கப்பட்டன. நான் அஹ்வாவுக்குச் சென்று, பிராந்திய அலுவலகத்தில் பிராந்திய செயலர் அருள் திரு. எல். மாசிலாமணியைச் சந்தித்தேன், வாராந்திர இரவு கூட்டங்களுக்கு பெட்ரோ மேக்ஸ் லைட் மற்றும் டோலக் வாங்கி வந்தேன். சுவிசேஷகர் சம்பத்பாய் எனது ஊரில் வாராந்திர கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார். 2004-ம் ஆண்டில் எனது நிலத்தில் ஒரு கச்சா தேவாலயம் கட்டப்பட்டது. பின்னர் சுவிசேஷகர் தன்சுக்பாய் கூட்டங்களை நடத்தி வந்தார். 2009-ம் ஆண்டில், என் கிராமத்திலிருந்து அதிக எதிர்ப்பு வந்தது. நானும் எனது மனைவியும் அடிக்கப்பட்டோம்; நாங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம்; காவல்துறையினர் எனது கூற்றுக்களைக் கேட்கவில்லை. அவர்கள் கிராம மக்களின் பேச்சுக்களை எடுத்துக்கொண்டனர். கச்சா தேவாலயத்தை மூன்று முறை எரிக்க மக்கள் இங்கு வந்தனர். காவல்துறை மற்றும் கிராம மக்கள் மீது உயர் நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தேன். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 2014-ம் ஆண்டில் கிராம மக்களோடு சமாதான உடன்படிக்கையுடன் வழக்கு முடிந்தது. இப்போது எங்கள் கிராமத்தில் எங்களுக்கு எந்த எதிர்ப்பும் இல்லை. இந்த பெரிய தேவாலயத்தை எங்களுக்கு வழங்கிய தேவனுக்கு நன்றிக் கூறுகிறேன்."

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அதிகமான மக்களைக் கொண்டுவருவதற்கான தேவனின் பாத்திரமாக சோனிராவ்பாய் இருந்தார். அவரது வீட்டில் இரவு கூட்டங்கள் தொடங்கப்பட்டபோது, விசுவாசத்தில் ஏழு பேர் மட்டுமே இருந்தனர்.

## *திருச்சபை வளர்ச்சி:*

நோய்வாய்ப்பட்ட மக்கள் தேவாலயத்திற்கு வந்தார்கள், குணமடைந்த பிறகு அவர்கள் கிறிஸ்தவர்களானார்கள். 2004-ம் ஆண்டில் கச்சா ஆலயம் கட்டப்பட்டபோது விசுவாசிகளாக இருந்த 7 நபர்களிலிருந்து 13 குடும்பங்களாக வளர்ச்சி அதிகரித்தது. இப்போது 2016-ல் விசுவாசத்தில் 32 குடும்பங்கள் ஆகியுள்ளனர்.

## *ஆலயக்கட்டுமானம்:*

- ✔ 2004-ல் கச்சா ஆலயம் கட்டப்பட்டது.
- ✔ கச்சா ஆலயக்கட்டுமானத்தின் போது 13 குடும்பங்கள் விசுவாசத்தில் இருந்தனர்.
- ✔ பக்கா ஆலயக்கட்டுமானம் 25.09.2012 அன்று தொடங்கப்பட்டு, 21.11.2013 அன்று அர்ப்பணிக்கப்பட்டது.
- ✔ ஆலய அளவு - வராண்டா உட்பட 20 அடி அகலம் மற்றும் 50 அடி நீளம்.
- ✔ சோனிராவ்பாய் நில நன்கொடையாளராக இருந்தார். நில உரிமையாளரை தேவன் ஆசீர்வதித்ததால், ஆலயக்கட்டு மானத்திற்காக நிலம் கொடுக்க அவர் முடிவு செய்தார். ஆலயக்கட்டுமானத்தின் போது மக்கள் சிலர் எதிர்ப்பு வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தனர். ஆலய அர்ப்

பணிப்பின் கூட்டத்தின்போது எங்களை எதிர்க்க அவர்கள் திட்டமிட்டிருந்தனர். விசுவாசிகள் அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்கள் மனதை மாற்றினார். தேவாலய அர்ப் பணிப்பில் பங்கேற்றவர்களுக்கு அவர்கள் லாப்ஸி (சர்க்கரையுடன் சமைத்த கோதுமை ரவா) உணவளித்தனர். மக்கள் ஆலயம் கட்ட தங்களது இலவச உழைப்பைக் கொடுத்தனர். ஆலயம் ஏ.சி.சி (ஆஸ்பெஸ்டாஸ்) கூரையுடன் பக்கா தேவாலயமாகக் கட்டப்பட்டது.

## *அற்புதங்கள்:*

### பாப்புபாய் வாத்யாபாய் பாகுல் மற்றும் அவரது மகன் வஜாய்:



“என் மகன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். அவன் இரண்டு ஆண்டு களாகப் பக்கவாதத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். மந்திரவாதிகள் மூலம் பூஜைகள் செய்தேன். பூஜைக்காக 10 கோழிகள் மற்றும் ஒரு ஆடு கொடுத்தேன். என் மகன் என் வீட்டில் கஷ்டப்படுவதால் என் வீட்டைக் காலி செய்துவிட்டு, தன்னு டைய வீட்டிற்கு வரும்படி என் சகோதரர் என்னை அழைத்தார். 9 பேர் என் மகனை அந்த வீட்டிற்கு தூக்கிச் சென்றனர். நாங்கள் என் சகோதரர் வீட்டிற்குச் சென்றோம். என் சகோதரர் ஒரு கிறிஸ்தவர். என் மகனுக்காக ஜெபிக்க தேவாலய மூப்பரை அழைக்க என் சகோதரரின் மகன் சொன்னான். எனவே, கிறிஸ்தவ விசுவாசத்தை முயற்சிக்க முடிவு செய்தேன். நான் ஆலய மூப்பர் சோனிராவ்பாயின் வீட்டிற்குச் சென்று, என் மகனுக்காக ஜெபிக்க அவரை என் வீட்டிற்கு அழைத்தேன். அவர் வந்து என் மகனுக்காக ஜெபித்தார். அவனது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. அடுத்த நாள் ஆயர் தலாபாய் வந்து என் மகனுக்காக ஜெபித்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு ஞாயிறு வந்தது. என் மகன் தானாகவே நடந்து ஆலய ஆராதனையில் கலந்துக்கொண்டான். என் மகனுக்கு முழு சுகம் கிடைத்தது.” அல்லேலூயா!

### சிம்க்யா வாத்யா பாகுல்:

இவருக்கு வாயில் புற்றுநோய் இருந்தது. இவர் சூனியக்காரரிடம் சென்றார்; எந்த முன்னேற்றமும் இல்லை. இவர் வல்சாத்தி லுள்ள ஒரு புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்றார்; ஆபரேஷன் செய்யப்பட்டது. ஆனால், நோய் அதிகரித்தது. இவர் மீண்டும் மந்திரவாதிகள் பின் சென்றார். இவருக்கு எந்த சுகமும் கிடைக்கவில்லை. கடைசியில் ஆலய மூப்பரை அணுகி, ஜெபம் செய்யச் சொன்னார். ஜெபத்திற்கு பிறகு, இவர் தனது ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றத்தை உணர்ந்தார். இப்போது இவர் தவறாமல் நமது ஆலய ஆராதனைகளில் கலந்துக்கொள்கிறார். அல்லேலூயா!

### கத்தியா மோதிராம் மட்விஸ்:



இவரது தந்தை ஒரு கிறிஸ்தவர். ஆனால் அவர் தேவாலயத்திற்கு வந்ததில்லை. அவர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு காரணமாக இறந்தார். அச்சமயம் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு இருந்தது. இவரது தந்தையின் இறுதிச்சடங்கு பற்றிகூட இவருக்குத் தெரியாது. ஜீவல்யாபாய் பணிபுரிந்த நவ ஜீவன் சேவா மண்டல் (NSM) கிளினிக்கிற்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் அனுமதிக்கப்பட்டார். குளுக்கோஸ் ஏழு பாட்டில்கள் செலுத்தப்பட்டன; பின்னர் இவர் நலமாகி, 1998 முதல் ஆலய ஆராதனையில் கலந்துக்கொண்டு வருகிறார். அல்லேலூயா!

### சீமா துளசிராம் பர்டியா:

“என் முதல் மகன் குழந்தையாக இருந்த போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். அவனுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி இருந்தது. நான் அவனை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்றேன். ஆனால், அவனுக்கு எந்த சுகமும் கிடைக்கவில்லை. பின்னர் நான் சூனிய மந்திரவாதிகளை முயற்சித்தேன்; அதுவும் எந்த நல்ல பலனையும் தரவில்லை. அவனது சிகிட்சைக்காக நான் பல இடங்களுக்குச் சென்று, சோர்பாக இருந்தேன். கடைசியில் நான் ஆலய மூப்பரான சோனிராவ் மற்றும் பிற கிறிஸ்தவர்களை என் வீட்டிற்கு ஜெபத்திற்காக அழைத்தேன். அவர்கள் இருமுறை ஜெபம் செய்தனர். என் மகன் உடனே குணமடைந்தான். எனவே, பிப்லாய்தேவி கிராமத்திலுள்ள திருச்சபையில் இணைந்தேன்.” அல்லேலூயா!

### தினேஷ் கோமா மட்விஸ் (கிராமத்தலைவர் குடும்பம்) :



இவரது தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள். இவரது பெற்றோர் கரும்பு வயல்களில் வேலை செய்துக்கொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் மெலிந்துக் கொண்டே போனபடியால், மருத்துவர்கள் மற்றும் சூனிய மந்திரவாதிகளைக்கொண்டு அவர்களைக் குணப்படுத்த குடும்பத்தினர் முயன்றனர். ஆனால், அவர்கள் குணமடையவில்லை. பின்னர் அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து, அவர்களுக்காக கிறிஸ்தவர்களை ஜெபிக்க அழைத்தார்கள். சபை மூப்பர் சோனிராவும் மற்ற கிறிஸ்தவர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்று, அவர்களுக்காக ஜெபம் செய்தனர். இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவர்கள் முழுமையாகக் குணமடைந்தார்கள். எனவே, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் திருச்சபையில் இணைந்தனர். அல்லேலூயா!

## திருச்சபையை வடஇந்திய திருச்சபைக்கு ஒப்படைத்தல்:

வட இந்திய திருச்சபை, குஜராத் (சி.என்.ஐ) அத்தியட்சாதீனத்துடன் இந்த திருச்சபை 2013-ல் இணைக்கப்பட்டது. இந்த ஆலயம் பிப்லாய்தேவி சேகரத்தின் கீழ் இயங்குகிறது. மொத்த உறுப்பினர்கள் 70 பேர். இப்போது 32 குடும்பங்கள் விசுவாசத்தில் உள்ளனர்.

இருவரைத் தவிர மற்ற அனைவரும் பீல் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். நவசுபாய் மற்றும் ஒரு குடும்பம் குக்னா பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். வஞ்ஜார்கோடி கிராம மக்கள் மட்டுமே ஆலய ஆராதனைக்கு வருகிறார்கள். பிப்லாய்தேவி ஆசிரியர் சீதாராம்பாயின் மகன் மனோஜ்பாய், இந்த ஆலயத்தின் உபதேசியார் ஆவார். அவர் இந்த ஊழியத்தைத் தன்னார்வமாகச் செய்கிறார். சபை ஆராதனைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படுகின்றன. பிரார்த்தனைக் கூட்டங்கள் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஜெபத்திற்கு 20 முதல் 25 பேர் வருகிறார்கள். சபை மூப்பர் இந்த ஜெபக் கூட்டங்களை நடத்துகிறார். ஆராதனைக்கு பிறகு, ஞாயிறு சிறுவர் வகுப்பு நடத்தப் படுகிறது. ஏழு முதல் எட்டு குழந்தைகள் கலந்துக்கொள்கிறார்கள். நவீந்திரன், சோனிராவ் அல்லது மனோஜ்பாய் இதை நடத்துகிறார்கள். பெண்கள் கூட்டம் மற்றும் இளைஞர் கூட்டம் நடத்தப்படுவதில்லை. கன்வென்சன் கூட்டம் சேகர மையத்தில் நடத்தப்படுகிறது.

இத்திருச்சபையில் அருள்திரு. டி. ஆபிரகாம் குடும்பம் மிஷனெரிகளாகவும், சுவிசேஷகர்களாக சம்பத்பாய், தலாபாய் ஆகியோரும், போதகர்களாக ஜீவல்யாபாய், தன்சுக்பாய், பிரேம்சந்த்பாய் ஆகியோரும் இதுவரை இங்குப் பணியாற்றியுள்ளனர்.

ஆலயத்தில் அனைவரும் இருக்கும்போது ஒரு மாதத்திற்கு ரூ.700/- முதல் ரூ.1000/- வரை காணிக்கை வரும். கரும்பு வயல்களுக்கு இவர்கள் இடம்பெயரும் நேரத்தில் மாதத்திற்கு ரூ.100/- காணிக்கையாகக் கிடைக்கிறது. கரும்பு வயல்களில் வேலை செய்வதிலிருந்து மக்கள் திரும்பி ஆராதனைக்கு மீண்டும் வரும்போது பிற பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் பணம் போன்றவைகள் நன்றிக் காணிக்கைகளாக வழங்கப்படுகின்றன. முதல்கனி காணிக்கை, அறுவடை காணிக்கை, நன்றி செலுத்தும் காணிக்கை, ஆராதனை காணிக்கை போன்ற பல்வேறு வகையான காணிக்கைகள் பெறப்படுகின்றன. இத்திருச்சபைக்கென ஆலயக்கமிட்டி உள்ளது. கமிட்டி உறுப்பினர்களுக்குப் பொறுப்புகள் வழங்கப் பட்டுள்ளன. அவர்கள் தங்கள் கடமைகளைக் கமிட்டியாகக் கூடாமல் தன்னிச்சையாகவே செய்கிறார்கள். சேகரத்தின் கமிட்டி கூட்டம் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை கூடுகிறது. இந்த சேகரத்தின் கமிட்டி கூட்டத்தில் மூப்பர் சோனிராவ் கலந்துக்கொள்கிறார்.

## திருச்சபையின் சுவிசேஷ ஊழியம்:

கிராமத்தில் நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு விசுவாசிகளே சுவிசேஷத்தைப் பகருகிறார்கள். தலையில் கேன்சர் இருந்த ஒருவருக்கு நற்செய்தி கூறப்பட்டது. அவர் தனது வீட்டில் தர்கா வைத்திருந்தார். இப்போது அவர் அதை விட்டுவிட்டு, ஆலய ஆராதனைகளில் கலந்துக்கொள்கிறார். ஆராதனைகளில் தேவச்செய்தி கொடுக்க குக்னா மொழி பயன்படுத்தப்படுகிறது. இத்திருச்சபையில் இன்னும் அநேக புதிய நபர்கள் ஆதாயப்படுத்தப்படவும், விசுவாசத்தில் பின்வாங்கினவர்கள் மீண்டும் மீட்டெடுக்கப்படவும் ஜெபிப்போம்.



# மகிமைக்குள் பிரவேசித்தார்

திருமதி சரோஜினி சேகரன் அவர்கள், 1978-ம் ஆண்டு தொடங்கி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள். தாராபுரம், பெருந்துறை, சித்தோடு, ஈரோடு ஆகிய பகுதிகளில் அநேக புதிய அங்கத்தினர்களை நமது இயக்கத்தில் இணைத்து, ஒரு சிறந்த ஜெபக்குழுத்தலைவியாகச் செயல்பட்டவர்கள். மேலும் தற்போது நமது மிஷனெரியாகப் பணிபுரியும் திரு. மணிமாறன் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட புதிதில் அவர் ஆண்டவருக்குள் வளர ஊக்குவித்து, மிஷனெரியாக இணைவதற்கு உதவியவர்கள். ஜெபக்குழுக்களைக் கிரமமாக நடத்தி, அதன்மூலம் அநேக தலைவர்களை உருவாக்கினவர்கள்.

இந்தியாவின் பல மாநிலங்களுக்குப் பணித்தள விஜயம் மேற்கொண்டு, நமது ஊழியர்களை உற்சாகப்படுத்தினவர்கள். மிஷனெரிகளின் குடும்பங்களுக்காகக் கிரமமாக ஜெபிக்கும் பழக்கம் உடையவர்கள். குஜராத் – நேத்ரங் சிறுவர் விடுதி மற்றும் சரஸ்மால் சிறுமியர் விடுதி ஓய்வு அறைகள் கட்டுவதற்குக் கடினமாக உழைத்து, ஊழியத்திற்கு உதாரத்துவமாக உதவிச் செய்தவர்கள். உறுதியான ஜெபம், விடாப்பிடியான விசுவாசத்திற்குப் பெயர் பெற்றவர்கள். வியாதி நேரங்களில் மருத்துவமனைக்குச் செல்லாமல், விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலமே சுகத்தைப் பெற்றுக் கொண்டவர்கள். நேர் முழங்காலில் நின்று ஜெபிக்கும் பழக்கம் உடையவர்கள். 'பொருத்தனை பாட்டு' என ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடி, அநேக அற்புதங்களை ருசித்தவர்கள். தனது மூத்த மகன் திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் அவர்களைத் ( தமிழ்நாடு & பாண்டிச்சேரி விரிவுப்பணி செயலர் ) தியாக உள்ளத்தோடு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மிஷனெரி ஊழியத்திற்கு அனுப்பி வைத்தார்கள். தனது இளைய மகன் திரு. கிருபாகரன் அவர்களைத் திருச்சியில் ( கே.கே.நகர் ) ஜெபக்குழுத்தலைவராகத் துடிப்புடன் செயல்பட ஊக்குவித்தவர்கள்.

திருச்சியிலிருந்து வருடந்தோறும் மாநில முகாமிற்கு ஐந்து பேருந்துகளில் செல்ல வேண்டும் எனக் கூறி, அநேகரை ஊக்கப்படுத்தி, அழைத்துச் சென்றவர்கள். 'ஒவ்வொருவரும் ஒரு கோடி ஆத்துமாக்களோடு பரலோகம் வர வேண்டும்' என்ற உயர்ந்த தரிசனத்தோடு அனைவரையும் தீவிரமாய் செயல்படத் தூண்டியவர்கள். திருச்சி, உடையான்பட்டியில் ஷேரன் முதியோர் இல்லத்தை நிறுவி, அதன்மூலம் அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்தினவர்கள்.

இப்படிப்பட்ட வெற்றி வாழ்க்கை வாழ்ந்த திருமதி சரோஜினி சேகரன் அவர்கள், தனது 79 –வது வயதில், 2020 நவம்பர் 17 –ம் தேதி தேவனுடைய இராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

அவரது கணவர் திரு. ஹென்றி அருள் சேகரன், மகள்கள் திருமதி மேரி ஜெல்சிங் குடும்பம், திருமதி சுனிதா சந்திரன் குடும்பம், மகன்கள் அருள்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் குடும்பம், திரு. கிருபாகரன் குடும்பம் ஆகியோரை நமது சகலவித ஆறுதலின் தேவன்தாமே ஆற்றித்தேற்றி, பெலப்படுத்த ஜெபிப்போம்.

– FMPB, விரிவுப்பணி செயலர், திருச்சி



# மறக்க முடியாத மாமனிதர்கள்

## சித்தரஞ்சன் கன்சால்வ்ஸ்

(1970 - 2008)

### இளமைப்பருவம்:

சகோ. சித்தரஞ்சன் கன்சால்வ்ஸ், ஒடிசா மாநிலத்திலுள்ள அங்குல் மாவட்டத்தில் இருக்கின்ற சிமிலிபாடா என்ற கிராமத்தில் 1970-ம் ஆண்டு ஜுலை 3-ம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை திரு. மனோரஞ்சன் கன்சால்வ்ஸ், ஒரு அரசுப்பணியாளர்; தாயார் திருமதி பனலதா, ஒரு குடும்பத்தலைவி. சகோ. சித்தரஞ்சனுக்கு இருட்டி ரஞ்சன், தீபக் ரஞ்சன் என்ற இரு தம்பிகளும், சுவர்ணலதா என்ற தங்கையும் இருந்தார்கள். மூத்த மகனாக இருந்த சகோ. சித்தரஞ்சன் தனது வீட்டருகிலுள்ள பள்ளியில் கல்விப்பயின்று வந்தார். பெற்றோர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தபடியால் பிள்ளைகளைக் கிறிஸ்தவநெறியில் வளர்த்து வந்தனர். இவரது இரண்டு தம்பிகளும் தொழிற்கல்வியைக் கற்றுவந்தனர்.

### இரட்சிப்பின் அனுபவம்:

பெயரளவில் கிறிஸ்தவராக வாழ்ந்து வந்த சகோ. சித்தரஞ்சன், கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தபடியால் ஒழுங்காக ஆலயம் சென்று வந்தார். ஆனால், இவர் தன்னுடைய பள்ளி இறுதியாண்டுப் படித்து முடித்த நாட்களில், 1988-ம் ஆண்டு ஜுலை மாதம் 25-ம் தேதி நடைபெற்ற ஒரு கிறிஸ்தவக்கூடுகையின் போது, கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவருடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவியாக இருந்தவர் இவரது நண்பர் சகோ. பிராஜ்மகின் பர்தன் என்பவராகும். அனுதினமும் இவர் கிறிஸ்துவில் வளரவும், வெற்றியுள்ள வாழ்க்கை வாழவும் அவரே இவருக்குப் பேருதவியாக இருந்து வந்துள்ளார்.

### ஊழிய அழைப்பு:

சிறு வயதிலிருந்தே ஆண்டவருடைய பணியில் விருப்பம் கொண்டிருந்த சகோ. சித்தரஞ்சன் ஆலயத்தின் விசுவாசிகளோடு சேர்ந்து ஊழியத்திற்குச் செல்வார். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிப்பணியை அறிந்து, தன்னார்வ ஊழியராக நான்கு மாதம் முன்னேற்றப்

பணியில் உதவி செய்து வந்தார். பின்பு இவரது ஊழிய வாஞ்சையை அறிந்தவர்கள் இவரை வேதாகமக் கல்லூரியில் படிக்க உற்சாகப்படுத்தி னார்கள். எனவே, 1990-ம் ஆண்டு இறையியல் கல்லூரியில் இணைந்து, நான்கு ஆண்டுகள் படித்து இளங்கலை இறையியல் பட்டத்தைப் (B.Th.,) பெற்றார். அதற்குப் பின், நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக இணைய தீர்மானித்து விண்ணப்பம் செய்தார். பின்னர் நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று, ஒரு வருட மிஷனெரிப்பயிற்சிக்குச் சென்றார். அப்பயிற்சிக்குப் பின், ஜார்க் கண்ட் மாநிலத்திற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார்.

## திருமண வாழ்க்கை:

1997-ம் ஆண்டு ஏப்ரல் 9-ம் தேதி சகோதரி ஹேனாவைத் திருமணம் செய்து குடும்பமாக ஊழியம் செய்து வந்தனர். இவர்கள் குடும்ப வாழ்வைத் தேவன் ஆசீர்வதித்து, 3 பெண் பிள்ளை களைக் கொடுத்தார். முதல் மகள் மேரி எல்லீஸ் (M.Sc., (Phy) II - Year), இரண்டாவது மகள் மேரி கிரேஸ்லின் (B.Sc., (Phy) II - Year), கடைசி மகள் சோனாலி (9th - Std.) ஆவர். 2004-ம் ஆண்டில் சகோ. சித்தரஞ்சனுக்கு குருத்துவப் பட்டம் வழங்கப்பட்டது.

## முன்னேற்றப்பணி ஊழியம்:

1997-ம் ஆண்டிலிருந்து முன்னேற்றப் பணி ஊழியத்தில் இவர்கள் குடும்பமாக ஈடுபட்டு வந்தனர். ஜெபக்குழுக்களை ஏற்படுத்துவது, ஜெபிப்போர், மிஷனெரி களைத் தாங்குவோர் மற்றும் மிஷனெரி களாகச் செல்வோர் ஆகியோரைக் கண்டுபிடிக்கும் பணியை ஒடிசா மற்றும் சத்தீஸ்கட் மாநிலங்களில் ஒடியா மற்றும் இந்தி பேசும் திருச்சபையினரின் மத்தியில் செய்துவந்தனர். ரூர்கேலா பிராந்தியங்களில் நடைபெற்ற மிஷனெரி தரிசனக்கூடுகைகள், தலைவர்கள் பயிற்சி, மிஷன் கார்னிவெல் ஆகியவற்றில் இவரின் பங்கு அதிகம் இருந்தது. வட இந்திய மொழிகளில் விரிவுப்பணிக்கானப் பாண்டியத்துவத்தைப் பெற்ற வெகு சில ஊழியர்களில், இவர் முன்னணியில் விளங்கியவர்.

## நித்திய வீட்டிற்கு அழைப்பு:

2008-ம் ஆண்டு மூளை மலேரியா காய்ச்சலால் மிகவும் பாதிக்கப்பட்டு, சிகிட்சைப் பெற்று வந்தார். மருத்துவர் களின் அனைத்து முயற்சிகளும் பயன்தராமல் போகவே, அவரின் உடல் நிலை அதிக மோசமடைந்து, மிகவும் சுகவீனமடைந்தார். பின்பு 2008-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி, இவர் கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார். இவரது நல்வாழ்விற்காகத் தேவனைத் துதிப்போம். தற்போது சத்தீஸ்கட், ரகுநாத்பூரிலுள்ள நமது விடுதியில் பணிபுரிந்து வருகின்ற இவரது அன்பு மனைவியையும் மற்றும் அருமை மகள்களையும் தவறாமல் நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம். கர்த்தர் தாமே இவர்களோடிருந்து இவர் களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*

# மகிமைக்குள் பிரவேசித்தார்



நமது ஊழியத்தின் முன்னோடி ஜெபக்குழுத்தலைவரான சகோ. I. தேவநாயகம் ( வயது 81 ) அவர்கள், கடந்த 2020 நவம்பர் 24-ம் தேதியன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் நமது இயக்கத்தின் ஆரம்ப கால 25-வது உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரான இவர் பின்னர் தலைமை ஆசிரியராக சாஃப்டர் மேல் நிலைப்பள்ளியில் பணியாற்றினார்கள். இவர்கள் மேற்கு திருநெல்வேலி பகுதியில் அநேக ஜெபக்குழுக்களை உருவாக்கி, தேசத்தின் இரட்சிப்பிற்காக மக்களை ஜெபிக்க ஊக்கப்படுத்தியவர்கள். 1957-ல் பாளையங்கோட்டை, தூய யோவான் கல்லூரியில் ஜெபக்குழுவை நடத்தினார்கள். அப்போது மாணவர்களாக அங்கே இருந்த திரு. பேட்ரிக் ஜாஷ்வா, திரு. தாமஸ் டேனியல், திரு. தனசீலன். திரு. அகஸ்டின் ஆசீர் போன்றோர் பின் நாட்களில் மிஷனெரிப் பணிகளின் தலைவர்களானார்கள். 1960 -ம் ஆண்டுகளில் அதாவது, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆரம்ப நாட்களில் பண்ணைவிளையில் கிதியோனியர் முகாம்கள் நடத்த முழு ஈடுபாடுக் காட்டினார்கள். எமில் ஜெபசிங் அண்ணனுடன் தினமும் சேர்ந்து ஜெபக்குழுவை நடத்தினார்கள். நல்லூர் முதல் தென்காசி வரையிலான அநேக கிராமங்களில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை அறிமுகம் செய்தல், ஜெபக்குழுக்களை நடத்துதல், மிஷனெரிகளுக்குக் காணிக்கை சேகரித்து அனுப்புதல், மிஷனெரிகள் மற்றும் குழந்தைகளைத் தாங்குதல் போன்ற பணிகளைச் செய்தார்கள். அதோடு தன் நான்கு பிள்ளைகளையும் இவ்வூழியத்தில் ஈடுபட ஊக்குவித்தார்கள். ஜான்சியிலுள்ள நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிப் பயிற்சி மையத்திற்குச் சென்று அங்கிருந்த ஊழியர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார்கள். இவர்கள் கௌரவ மிஷனெரி-ஆசிரியராக உத்தரகாண்டிலுள்ள நமது தர்ச்சுலா பணித்தளப் பள்ளியில் சில காலங்கள் அரும்பணியாற்றினார்கள். இவர்கள் படுக்கையில் இருந்த கடைசிக் காலங்களில் தொலைபேசி கூட்டிணைப்பு ஜெபத்தில் பங்குக்கொண்டு தேசத்திற்காகவும், மிஷனெரிகளுக்காகவும் ஜெபித்து வந்தார்கள். தன் இறுதிக்காலம் வரை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்கள். இவர்களது அமைதியான தோற்றம், தாழ்மை, மன்னிக்கும் குணம், ஆடம்பரமின்மை மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சி அநேகரை நல்ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உட்படுத்தியது. இவர்கள் தனக்கும் தேவனுக்குமுள்ள உறவுக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள். இவர்கள் விட்டுச் சென்றுள்ள அன்பு மனைவி மற்றும் பிள்ளைகளின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

– விரிவுப்பணி செயலர், திருநெல்வேலி பிராந்தியம்.

## 1 ஜனவரி
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பிரேமா ஹரிராம்
திரு. கோன்கா கிரி பாபு, திரு. கின் சாவ்ம்
திரு. மீனுகா அடப்பா மேத்யூ
திருமதி. சரிதா பால், திருமதி. பியூலா எஸ்.
திரு. ஹெபல் ஹெம்ரோம்

# ஜம்மு

### ஜம்மு பிராந்தியம்: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** ஆர். எஸ். புரா, நவ்சேரா, சாம்பா, உதம்பூர் மற்றும் ஜம்மு ஆகிய பணித்தளங்களிலிருந்து 24 நபர்கள் புதிதாக இயேசுவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 45-க்கும் அதிகமான கிராமங்கள் சுவிசேஷத்தினால் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளது. சனிங்கார் பகுதியைச் சார்ந்த வீணா தேவி, நேஹா மற்றும் நீஹா ஆகியோரைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் மீட்டார். சுனில் குமாரைச் சிறுநீரகக் கோளாறிலிருந்தும், சரிதா தேவியைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் சுகமாக்கினார். நமது விசுவாசிகளான பிட்டுகுமார் & சுகுமார் தேவி மற்றும் பிட்டுகுமார் & ஆர்த்தி ஆகியோரின் திருமணங்களைக் கர்த்தர் சிறப்பாக நடத்தித் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயக்கட்டுமானத்திற்கு நிலம் கொடுக்க ஆயத்தமாக இருக்கும் தர்ஷேமிற்காகவும், சம்ப் கிராமத்தில் ஆலயம் கட்டி முடிக்கப்படவும்; காதர்பூர் கிராம ஜான்வியைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க; படியல் கிராம காஞ்சனா, சாட்டா கிராம விக்கி, கோட்லி கிராம அனில் & நேஹா, சாக்கர்னியா கிராம சாக்சி மற்றும் தொல்லியன் கிராம சப்னா ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; குல்லியன் கிராம சுபமிற்கு பக்கவாதத்திலிருந்தும், மெஹ்லோவல் கிராம சென்பாவிற்கு சிறுநீரகக்கல் கோளாறிலிருந்தும், சாக்கர்னியா கிராம ஆஷாவிற்கு புற்றுநோயிலிருந்தும் பரிபூரண சுகம் கிடைக்க கர்த்தரிடம் ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தக்ளக் திருச் சபையைச் சார்ந்த நமது விசுவாசி ஒருவரின் திருமணம் எவ்விதத் தடையுமின்றி நன்கு நடந்து முடிந்தது. 3 புதிய தொடர்பாளர்கள் நமது ஊழியத்தில் கிடைத்துள்ளனர். பாத் பகுதியில் ஆலயம் கட்டத் தங்களது நிலங்களைத் தானம் பண்ண சாத்ராம் மற்றும் பிரகாஷ் ஆகியோரின் குடும்பங்கள் ஆயத்தமாகவுள்ளனர். கணவரால் கைவிடப் பட்டு, தன் இரண்டு வளர்ந்த பிள்ளைகளுடன் வசிக்கும் நமது விசுவாசி சத்யாவின் வாழ்வாதாரத்திற்கு ஏற்ற நன்மைகள் உண்டாகக் கர்த்தர் கிருபை செய்தார். ரீனா, அஞ்சலி, பிரபா, சீமா ஆகியோரைத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடு வித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19ஐ காரணம் காட்டி, ஆராதனைக்கு வராமலிருக்கும் விசுவாசி களின் மனநிலைகள் மாற; விசுவாசத்தில் பின்வாங்கிப் போயிருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நமது சுதேச ஊழியர் கும்ப்தாஸின் மனைவி பால்தாசியின் இரண்டு கணுக்கால் களிலும் உண்டாகியிருக்கும் எலும்பு முறிவிலிருந்து அவர் விரைவில் நற்சுகம் பெற; மேலும் அதிக புதிய தொடர்பாளர்கள் கிடைப்பதற்கு ஏற்ற ஆலோசனைகளைத் தேவன் ஊழியர்களுக்கு நல்க ஜெபிப்போம்.




*ஜனவரி*
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானம் ஃபிலிப், திருமதி. மேகலா பிரபாகர்
திரு. நாத்தான் குமார் பெபர்தா
திருமதி. மஹாலே ஏமன் பான்சிங்
திரு. முன்னா மொஹன்தியர்
திரு. ரவுத் சுபாஷ்பாய் லானுபாய்
திரு. மகேந்திர பால் சிங், திரு. உப்தேஷ் குமார்
திரு. கின்கௌமாங் கிலாங்

# பஞ்சாப்

### புத்லாடா:

### சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. இடுப்பு எலும்பில் உண்டான ஆழமான காயங்களிலிருந்து ராஜி கௌரையும், மாரடைப்பிலிருந்து தேவ்சிங்கையும் தேவன் குணப்படுத்தினார். விசுவாசத்தில் வழுவிப் போயிருந்த காந்தா காலனியைச் சேர்ந்த நமது விசுவாசிகளான ரேகா மற்றும் ஜகாசிங் ஆகியோர் விசுவாசத்திற்குள் மீண்டும் வந்துள்ளனர். ஆலயத்திற்கு வெள்ளையடிக்கத் தேவையான நிதித் தேவையை நமது விசுவாசி ரோஹிராம் சந்தித்துள்ளார். அஞ்சு, சந்தோஷ் மற்றும் கரம்ஜீத் ஆகியோரின் குடும்பப் பிரச்சனைகள் தீர கர்த்தர் உதவிச் செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலா சிங், பீமா சிங், ஹனுமான், கட்டி சிங், செகஜ்பால் சிங், தர்ஷன் சிங், ஹர்பன் சிங் ஆகிய நமது புதிய விசுவாசிகள் தங்களது குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; சிர்சிவால் பகுதி மிகுந்தர் மற்றும் ஹர்பன் கௌர் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; எலும்பு முறிவினால் கஷ்டப்படும் ஆயுஷ், சிந்தர் கௌர் ஆகியோர் விரைவில் பூரண சுகமடைய; நமது விசுவாசிகளான மனிஷ் கௌர், ஜீனத் கௌர் மற்றும் ருனினா ஆகியோர் குழந்தைச் செல்வங்களினால் ஆசீர்வதிக்கப்பட; குர்னே கிராம கரம்ஜீத் கௌரைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் காப்பாற்றிட ஜெபிப்போம்.

# ஹரியானா

### பர்வாலா:

### பாபுபாய் & சரஸ்வதி

**துதிக்க:** புதிதாக பகவத், பெரி, பாலி, பாக்கி மற்றும் ராஜ்புரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளான தேவிலால் மற்றும் கவிதாவைத் தேவன் சாலை விபத்தினின்று காப்பாற்றினார். உக்லானா கிராம மம்தாவைக் கர்த்தர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். அரைபிபூர் கிராம நமது விசுவாசி ஹரியின் வாழ்வாதாரத் தேவைக்கேற்ப ஒரு வேலையைத் தேவன் கொடுத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் தங்களது குடும்பத்தாரால் தொல்லைக்குட்படும் நமது விசுவாசிகள் பவன் மற்றும் மாயாவின் ஆவிக்குரிய வாழ்விற்காக; கோத்கலா கிராம பப்லுவின் இரட்சிப்பிற்காக; மோத், மாதா, பெத்வார் மற்றும் லோஹாரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல்கள் உருவாக; சாகு, சானியானா, சாமர்கேடா, உக்லானா மற்றும் லாலோத் ஆகிய கிராமங்களில் அறிவிக்கப்படுகின்ற சுவிசேஷத்திற்கு நல்ல பலன்கள் கிடைக்க; பகத், ரவிதாசி, பால்மீகி, தன்கந்த் மற்றும் ஓட் ராஜ்புட் ஆகிய மக்களினக் கூட்டங்களிலிருந்து நல்ல ஆவிக்குரிய எழுச்சி உண்டாக ஜெபிப்போம்.

## 3 ஜனவரி
ஞாயிறு

### கலான்வாலி:
**விஜயகுமார் & ஜெபலா**

**துதிக்க:** ஓதான் துணை மையத்திலிருந்து புதிதாக 2 நபர்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்குள் வந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. அசோக் நகரில் கட்டப்பட்டுள்ள ஆராதனைக்கூடம் கர்த்தருடைய நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. நமது சுதேச ஊழியரின் மனைவி ரெபேக்காவைக் கர்த்தர் அதிக சுகவீனத்திலிருந்து சுகமாக்கினார். பஞ்சு பறிப்புத் தொழிலுக்காக இடம்பெயர்ந்துச் சென்றிருந்த நமது விசுவாசிகளைத் தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்கள் ஆவிக்குரிய பலத்தில் பெருகவும், சபைக்காரியங்களை முழுப்பொறுப்புடன் கவனித்துச் செயல்படுத்தவும்; சமீபத்தில் அம்ரோதேவியை இழக்கக் கொடுத்திருக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக; மனவளர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் சுக்தீப்பிற்காக; அவ்விடத்திற்குச் சொந்தமான மொழியை நன்கு கற்றுக்கொள்வதற்கான மொழி ஞானம் நமது ஊழியர்களுக்கு அருளப்பட; ஆசீர் கிராம ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரகாண்ட்

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** நமது விசுவாசி பிரேமின் குடும்பத்தில் தேவன் மழலைச்செல்வத்தைக் கட்டளையிட்டார். கர்த்தர் குமார்பாலைப் பெரிய விபத்தினின்று பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் தீய ஆவியின் பிடியிலிருந்து மோனிகாவையும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து சுந்தரையும் மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்து சுனிலையும் தேவன் காப்பாற்றி, சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசநோயிலிருந்து ரஜனியையும், பக்கவாதத்திலிருந்து ஜத்சிங்கையும், இரத்தச்சோகையிலிருந்து ஆஷாவையும் மற்றும் மனவளர்ச்சியின்மையில் இருந்து ஷியாவையும் தேவன் சுகப்படுத்த; குசும் மற்றும் அனிதா ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## இயேசுவை ஏற்றுக்கொண்ட கிராமத்தலைவர்!

*ஜார்க்கண்ட், ராம்கார் பணித்தளம், ஒரு கிராமத்தலைவரின் மகன் சுனில்கோல் என்பவர் கொடிய பிசாசின் பிடியில் சிக்கித் தகாத விதங்களில் பல முரட்டுத்தனமான செய்கைகளைச் செய்து வந்ததால், அவரை ஒரு கம்பத்தில் கட்டி வைத்திருந்தனர். அவருடைய சுகத்திற்கென அநேக முயற்சிகளைக் கையாண்டும், எல்லாம் வீணாய்ப் போயின. கடைசியில் அவரை நமது சபையின் மூத்த விசுவாசி ஒருவருடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தனர். அங்கே விசுவாசிகள் யாவரும் கூடி, அவருடைய விடுதலைக்காக ஒருமனதோடு ஜெபத்தில் போராடினர். ஜெபத்தைக் கேட்ட தேவன், சுனிலை விடுவித்தார். இதனைக் கண்ட பின்னரும், சுனிலின் தகப்பனார், தான் ஒரு கிராமத்தலைவர் என்பதினால் இயேசுவை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்ததோடு, நமது ஊழியங்களையும் பலவிதங்களில் எதிர்க்கத் தொடங்கினார். ஆயினும், விசுவாசிகள் அவருக்காக விடாது ஜெபித்து வந்ததினிமித்தம், அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டார். தற்போது குடும்பமாக அவர் இரட்சகர் இயேசுவைத் தொழுது கொண்டு வருகிறார். தேவனுக்கே புகழ்! அல்லேலூயா!*

**4** *ஜனவரி* திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஐவி நிக்கல்சன்
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திருமதி. ருக்மா தேகம் சுரேஷ், திரு. பும்சோன்சின்
திரு. லால் கிஷோர் முர்மு

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** கோவிட்-19லிருந்து தேவன் நமது விசுவாசிகளான பத்மினி, ஆனந்த் மற்றும் பரஸ் ஆகியோரைச் சுகத்துடன் மீண்டு வருவதற்கு உதவிச்செய்தார். அநேக வருடங்களுக்குப்பின் சாந்த்மதி குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார். முதல் கிறிஸ்தவ திருமணமான பிரதீப் & கவிதாவின் திருமணம் நன்கு நடைபெற்றது. டெங்கு காய்ச்சலிலிருந்து அதுல் குணமடையவும், நன்கு பெலப்படவும் கர்த்தர் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோஹித்தை இழந்துத் தவிக்கும் அவரது குடும்ப மக்களின் மனஆறுதலுக்காக; நீலம், பவன் மற்றும் சுமன் ஆகியோரின் எதிர்கால நன்மைகளுக்காக; கோவிட்-19லிருந்து மீண்டு வந்த பத்மினியின் சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியம் கிடைக்க; நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணைகள் அமைய; சங்கீதா மற்றும் அலமேலு ஆகியோருக்கு நல்ல சுகப்பிரசவம் நேரிட; தீய ஆவி மற்றும் மாந்திரீகப் பிடிகளிலிருந்து முதல் விடுதலை பெற; பிங்கி & தேவேந்தர், சுப்புலட்சுமி & முத்துபாண்டி, ரீனா & மனோஜ், சிஷ்பால் & சான்சால் மற்றும் பழனிவேல் ஆகியோரின் உடைபட்டிருக்கும் குடும்பவாழ்வு மீண்டும் கட்டப்பட; நமது விசுவாசி அனிதா கோபாலின் வீடுகட்டு மானத் தேவைக்குரிய பணவுதவி கிடைக்க; வலிப்பு நோயிலிருந்து ரச்சணாவிற்கு நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## கேர்வாடா:

### பட்டேல் தேவுபாய் & ஐமுபேன்

**துதிக்க:** நமது ஊழியங்களைப் பலவிதங்களில் கர்த்தர் ஆசீர்வதிப்பதோடு, அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்கவும் உதவிப்புரிகின்றார். இருதயக்கோளாறிலிருந்து ஹஞ்சபேனையும், மனநோயிலிருந்து ஹரிஷையும், சுயநினைவின்மையிலிருந்து பிரமிளாவையும் தேவன் சுகப்படுத்தினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபாய்சா மற்றும் தல்பட்புரா ஆகிய பகுதிகளைச் சார்ந்த நமது விசுவாசிகள் தீய ஆவிகளின் அச்சுறுத்தல்களிலிருந்து விடுவித்துக்காக்கப்பட; தவறான குற்றச்சாட்டினால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளான மகேஷ், விபுல் மற்றும் ராய்ஷ் ஆகியோருக்கு விடுதலை கிடைக்க; தங்களது கிராமத் தலைவராலும், கிராம மக்களாலும் எதிர்ப்பைச் சந்திக்கும் மாதா கிராம நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; கிருஷ்ணா மற்றும் வால்கி ஆகிய இருவரும் தீய ஆவிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## 5 ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் மால்தோ
திருமதி. இவாஞ்சலின் பி.

### கைர்த்தல்:

**செல்வராஜ் & செல்வம்மாள்**

**துதிக்க:** 20 இடங்களில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகளை எவ்விதத் தடையுமின்றி நடந்து முடிய தேவன் கிருபை செய்தார். நமது ஊழியங்களில் 40 புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும், அவர்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டவும் தேவன் ஒத்தாசை புரிகிறார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் அஞ்சலியை விடுவித்தார். இருசக்கர வாகனம் மூலம் ஏற்பட்ட பெரிய விபத்தினின்று தேவன் சன்னியைப் பாதுகாத்தார். கொடிய காய்ச்சலிலிருந்து ஆர்த்தி மற்றும் சாமரையும், வயிற்றுவலியிலிருந்து ராம்பாயையும் தேவன் குணப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீத்டா பகுதி திருச்சபையினர் கிறிஸ்துவில் வளர; நமது ஊழியத்தில் இணைந்திருக்கும் புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; அநேக விதங்களில் நமது ஊழியத்திற்குத் தடைகளாக மாறுகின்ற மனிதர்களின் மன மாற்றத்திற்காகக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

### பாவோட்டா:

**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கால் தவறிக் கீழே விழுந்த தோத்புட்லி கிராம நமது விசுவாசி சங்கீதாவைத் தேவன் பெரும் ஆபத்தினின்று பாதுகாத்தார். தனது வாழ்வாதாரத்திற்கான வேலையொன்று நமது விசுவாசி ராஜேந்தருக்குக் கிடைத்துள்ளது. வலிப்பு வியாதியிலிருந்து தேவன் பிங்கியைச் சுகமாக்கினார். 3 நாட்கள் நடந்த உபவாச ஜெபக்கூடுகையைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அதில் பூஜா, மம்தா, ஆஷா, சந்தோஷ் மற்றும் ஜோதி ஆகியோர் தன்னார்வமாக வந்து நமது ஊழியத்தில் உதவிப்புரிய கர்த்தர் கிருபை காட்டி வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்த்தரிடம் சுகத்திற்காகக் காத்திருக்கும் விக்ரம் மற்றும் சார்லி தேவி இரட்சிப்படையவும், சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும்; தீராத வயிற்றுவலியிலிருந்து பிரேம்லதாவையும், கல்லீரல் பாதிப்பிலிருந்து ராம்சிங்கையும் தேவன் சுகமாக்க; நமது விசுவாசி சங்கீதாவின் கடன்பிரச்சனை தீர தேவனிடம் ஜெபிப்போம்.

## இயேசுவிற்கு சொந்தமான இதயம்!

*குஜராத், தராம்பூர் பணித்தளம், தாம்னி கிராம ஜாய்லால்பாயிற்குப் பிசாசு பிடித்திருந்ததினால், அவருடைய குடும்பத்தினர் பலவிதங்களில் பாதிக்கப்பட்டனர். அப்பிசாசைத் துரத்த அவர்கள் பல முயற்சிகளை எடுத்தும், பிரயோஜனம் ஒன்றுமில்லை. எனவே, யாரோ ஒருவர் சொன்னதின் அடிப்படையில், காட்டிற்குள் வீடொன்று கட்டினால் தனக்குள்ளிருக்கும் அப்பிசாசு அக்காட்டிற்குள் ஓடிவிடும் என்றுக் கருதி, காட்டிற்குள் அவர் வீட்டைக் கட்டினார். அதன் விளைவு, அவர் தனது தாய், தகப்பனை ஒருவர்பின்னொருவராக இழந்ததோடு, மரணப்பீதியினால் தானும் பாதிக்கப்பட்டார். ஆகவே, நமது விசுவாசிகளில் சிலர் அவரை ஆராதனைக்கு வரவழைத்து, அவருக்காக ஜெபிக்கத் தொடங்கினர். அவ்வாறு ஜெபிக்கும் போது, அவருக்குள்ளிருந்த பிசாசு அவரை விட்டு முற்றிலுமாய் வெளியேறியது. அவரது இதயம் இயேசுவுக்குச் சொந்தமாயிற்று. இயேசுவுக்கே துதி! அல்லேலூயா!*

## 6 ஜனவரி

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜென்னிஸ் ஜே. பி.

செல்வி. ராணு கே. எம்.

## ராஜஸ்தான் பிராந்திய அலுவலகம்:

### அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** இம்மாதத்தில் 54 இடங்களில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகளையும், 57 கிராமங்களில் நடந்த ஊழியப் பின்தொடர்பணிகளையும், 82 இடங்களில் நடந்த வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும், 9 இடங்களில் நடந்த வெளிசந்திப்புக் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். நமது மிஷனெரி சகோ. செல்வத்தின் உடல்நிலை முன்னேறி வருகிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளினால் நமது புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் வழுவிப்போகாமலிருக்கவும், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்காகவும்; நமது சிகார் பணித்தளப் பிரச்சனை தீர; ஊழியத்தின் வளர்ச்சிக்காகப் புதிய சுதேச ஊழியர்கள் பணியில் நியமிக்கப்பட; புதிய விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்விற்காக; புதிய விசுவாசிகள் பயமின்றி நமது திருச்சபையில் இணைய; அனுப்கட், சாங்ரியா, ஸ்ரீ கங்கா நகர் மற்றும் தபுகேடா ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்ட நல்ல நிலங்கள் கிடைக்க; ஆண்களுக்கும், பெண்களுக்கும் மற்றும் வாலிபர்களுக்கும் முறையே தொடர்ச்சியாக வேத வகுப்புகள் நடத்தப்பட; தங்களது சொந்த திருச்சபையின் ஆராதனைகளைச் சபை மூப்பர்கள் எடுத்து நடத்தவும், ஒவ்வொரு திருச்சபையிலும் சபைக்கமிட்டி உருவாகவும்; நட் மற்றும் ராய்ஜெர் ஆகிய சமூகத்தினரிடையே சுவிசேஷத்திற்கு நல்ல வாய்ப்பு உருவாக; பாவோட்டா பணித்தளத்திலுள்ள சமூகத்தினரிடையே ஊழியம் செய்யப் புதிதாக இணைந்துள்ள நமது ஊழியர் சகோ. சத்யபிரகாஷும் அவரது மனைவியும் அங்குள்ள புதிய மொழியையும், அம்மக்களின் நல்ல கலாச்சாரப் பண்புகளையும் கற்றுக்கொள்ள கர்த்தர் அவர்களுக்கு உதவிச்செய்ய ஜெபிப்போம்.

### *மாறாத விசுவாசம்!*

*ஜார்க்கண்ட், கத்திகுண்ட் பணித்தளம், முந்திலிதும் என்ற இடத்தில் மனோஜ் என்ற சிறுவன் ஒருவருட காலமாகவே வியாதிப் படுக்கையிலிருந்தான். அவனது தாயார் அவனை மந்திரவாதிகளிடமும், மருத்துவர்களிடமும் கொண்டுச் சென்றார். ஆயினும், அவன் சுகம் பெறவில்லை. எனவே, கடைசியாக தாய் நமது சுதேச ஊழியர்களை அணுகி, தன் மகனுக்காக ஜெபிக்கக் கேட்டார். நமது சுதேச ஊழியர்களான பப்லு தெகிரியும், பாபுலால் தெகிரியும் அவனுக்காகத் தொடர்ந்து அவர்கள் வீட்டிற்குச் சென்று ஜெபித்து வந்தனர். ஆனால், அவனுடைய வியாதி முத்திற்று. ஆகவே, அவனைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு அவசர சிகிட்சைக்காகச் சென்றனர். நமது மிஷனெரிகளும் அச்சிறுவனுக்காக உபவாசத்துடன் ஜெபித்தனர். இருந்தபோதிலும், அச்சிறுவன் மரித்துப் போனான். மிஷனெரிகளும் அதிகம் மனம் தளர்ந்துப்போயினர். எனினும், அதிசயமாக தேவ நாமம் மகிமைப்படும்படி, அவனது தாய் தன் விசுவாசத்தைக் கிறிஸ்துவின் பெயரில் அறிக்கையிட்டார்; அடக்க ஆராதனையும் கிறிஸ்தவ முறையிலேயே நடத்தப்பட்டது. பின்பு அவர்களுடைய முழுக்குடும்பத்தினரும் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கத் துவங்கியுள்ளனர். கர்த்தர் செய்த இவ்வதிசய வழிநடத்தலுக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.*

**7** *ஜனவரி*
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல்

# உத்தரப் பிரதேசம்

### ஜின்ஜக்: சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

**துதிக்க:** கொன்கோஷி மற்றும் தேராபூர் ஆகிய துணை மையங்களிலிருந்து 3 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். உத்னவாபூர், ஹர்பூரா, பாய்ரகரா, மட்டிரா மற்றும் ராய்பூர் ஆகிய 5 கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக உரைக்கப்பட்டுள்ளது. 20 கிராமங்களில் நடைபெற்ற ஊழியப் பின்தொடர் பணிகளையும், தேராபூர், ரசுலாபாத் மற்றும் நய்னாபூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற தேடுவோர் முகாம்களையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். சன்யாபூர், ராம்பூர், தலேல்பூர், ஜலால்பூர் மற்றும் ஹிமாத்பூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகளுக்கான கூடுகைகளின் மூலம் 57 விசுவாசிகள் கிறிஸ்துவிற்குள் தங்களது விசுவாசத்தைப் புதுப்பித்துள்ளனர். ராஜு சிங் மற்றும் சுனில் குமார் ஆகியோரை டைஃபாய்டு காய்ச்சலிலிருந்து கர்த்தர் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் நய்னாபூர் மற்றும் ராய்பூர் ஆகிய பகுதி மக்களின் இரட்சிப்பிற்காக; ஜலால்பூர், தாராபூர், பம்ஹியா ஆகிய பகுதிகளிலுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; வரும் நாட்களில் நடக்கவுள்ள வெளிசந்திப்புக் கூடுகைகளின் ஆசீர்வாதங்களுக்காக; முபார்க்பூர் பகுதியில் விசுவாசத்தில் பின்மாற்றம் அடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தொபோலி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு எழுந்துள்ள எதிர்ப்பு முற்றிலுமாய் மறைய; தங்களது சொந்த கிராமத்திருச்சபையின் பொறுப்புகளை அத்திருச்சபை மூப்பர்கள் உற்சாகமாக எடுத்துச் செய்யவும், வெளிசந்திப்புக் கூடுகையில் அங்குள்ள விசுவாசிகள் தன்னார்வமாகப் பங்குப்பெறவும் தேவனிடம் ஜெபிப்போம்.

### கைம்கஞ்ச்:
### எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. அஜாம்பூர் கிராம சுனிலைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், அலிகன்ஜ் கிராம நிதீஷைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும் தேவன் குணமாக்கினார். நிகழ்நிலை மூலம் கல்வி கற்க இயலாத சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ள 9-ம் வகுப்புப் பயிலும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்குச் சென்று கல்விப்பயிலும் வாய்ப்புக் கிடைத்தமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபப் பிள்ளைகளான லஹுரி பகுதி நாகேஷ், அதுல், ஸ்வாதி மற்றும் ரஜினி ஆகியோரும், சிலாக்கா பகுதி சந்தியா மற்றும் தாஸ் ஆகியோரும் தங்களது சமுதாயத்தின் மீதுள்ள பயத்தைப் புறம்பே தள்ளி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, நற்சாட்சியுள்ள ஜீவியம் செய்ய; ரிங்கி மற்றும் லட்சுமி ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய; நமது விசுவாசி வந்தனாவின் திருமணச் செலவிற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட; தான் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டால், தனது கணவரோடுக்கூட இயேசுவை ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ள கடியா ஜகனாத் கிராம ஊர்மிளாவின் விருப்பம் நிறைவேற; கைம்கஞ்ச் பணித்தள ஊழிய விரிவாக்கத்திற்கு ஏற்ற தன்னார்வ ஊழியர் கிடைக்க கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**8** *ஜனவரி*
வெள்ளி

### கான்பூர் பிராந்தியம்:
**ஸ்ரீனிவாசன் & ஷீபா**

**துதிக்க:** புதிதாக 59 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புக்ராயன் பணித்தளத்தைச் சார்ந்த 31 இடங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். புக்ராயன் பணித்தளத்தில் ஜீப்குழு ஊழியம் தடையில்லாமல் நடைபெற்றது. மலேரியா மற்றும் கல்லீரல் தொற்றிலிருந்து தேவன் ரோஷினியைச் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புக்ராயன் பணித்தள ஜீப்குழு ஊழியம் இன்னும் வீரியமடைய; பார்த்தனா, ஹசேரன் மற்றும் ரணியா ஆகிய இடங்களைப் பணித்தள விஜயம் செய்வதின் மூலம் ஊழியத்தில் நல்ல பலன்கள் உண்டாக; நமது ரூரா சபை மூப்பர் கன்கய்லால் சுகவீனத்திலிருந்து சுகமடைய; நமது சில்லி சபை மூப்பர் பல்கோவிந்த் & சாரதா தம்பதியருக்குக் குழந்தைச்செல்வம் கிடைக்க; காட்டம்பூர் கிராம மக்கள் தங்களது மாந்திரீகப் பழக்கவழக்கங்களிலிருந்து வெளிவர கர்த்தர் உதவிச்செய்ய ஜெபிப்போம்.

### சிக்கந்ரா & பாக்ய நகர்:
**பொன்னுசாமி & சித்ரா**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துள்ளனர். பாண்டேமௌ பகுதியிலுள்ள 2 கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ராணுவின் மகனைத் தேவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுவித்தார். 2 இடங்களில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகை, பெண்கள் கூடுகை மற்றும் சிக்கந்ரா பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற சபை மூப்பர்களுக்கான ஒருநாள் பயிற்சிக் கூடுகை மற்றும் பைசந்த்ராவில் வைத்து நடைபெற்ற விசுவாசிகள் கூடுகை யாவற்றையும் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். ஆலய ஆராதனைகள், ஊழியப் பின்தொடர்பணிகள், வீட்டு ஜெபக்கூடுகைகள் மற்றும் வீடு சந்திப்புகள் ஆகியவைகளை 35 கிராமங்களில் கிரமமாக நடத்த நமது ஊழியர்களுக்குத் தேவன் கிருபை புரிகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த ஏழு வருடங்களாக மனவளர்ச்சியின்மையினால் அவதிப்பட்டு வரும் பிண்டுவிற்கு நல்ல சுகம் கிடைக்க; வலிப்பு நோயிலிருந்து பூலான் தேவியையும், தோல் வியாதியிலிருந்து மனோஜ்குமாரையும், குடற்புண் காய்ச்சலிலிருந்து கீதாவையும், தலைமண்டைஓடு அறுவை சிகிட்சையிலிருந்து தீபாவையும் மற்றும் டெங்கு காய்ச்சலிலிருந்து மோனுவையும் தேவன் அற்புதமாகக் குணப்படுத்த; நமது விசுவாசிகளுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் கிடைக்க; அஞ்சலி, தீபிகா, பார்ஷா மற்றும் சத்யாந்தர் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் கிறிஸ்தவ விசுவாசப் பின்னணியத்திலிருந்து அமைய; ராஜ்புட் சமுதாய மக்களின் இரட்சிப்பிற்காகக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**9** *ஜனவரி*
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பினிட்டா மச்சோ ஹெபல்

# மத்தியப் பிரதேசம்

## நிவாலி:

### சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

**துதிக்க:** நலியம்பா பகுதியிலிருந்து புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசித்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. கன்னத் கான், குஞ்ஜாரி, சகத், சாட்லி மற்றும் வன்கத் ஆகிய பகுதிகளில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். நிவாலி பணித்தளத்தில் பெண்கள் ஊழியத்தைத் துவங்க கர்த்தர் கிருபை பாராட்டியுள்ளார். நூருபாயை மஞ்சள் காமாலை நோயிலிருந்து கர்த்தர் காப்பாற்றி னார். சுல்கான், ராத்டிமஹால் மற்றும் சிக்காலி ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. நமது ஆராதனைக்குழுவில் புதிதாக 20 நபர்கள் இணைய தேவன் உதவிச் செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோலிபானி பகுதியில் ஆலயம் கட்டுவதற்கான நிலப்பதிவுச் சான்றிதழ்கள் கிடைக்கப்பட; நிவாலி பணித்தள ஆராதனை மையத்தில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பங்குப்பெற; கண் பிரச்சனையிலிருந்து ஷீலாபாயிற்கு பூரண சுகம் கிடைக்க; சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டும் தடு மற்றும் சுரேஷ் ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிப்படைய தேவனை நோக்கி ஜெபிப்போம்

## பன்சேமால்: வசாவா பாங்சிங்

### மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவை அறியும் அறிவிற்குள் வந்துள்ளனர். பன்சேமாலில் முதன்முறையாக நடை பெற்ற ஆனந்த மேளாவைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். பனாலி கிராமத் தில் ஓர் ஆலயம் கர்த்தருடைய நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. புல்ஹானி கிராம ராம்தாஸைக் கர்த்தர் மரணப்படுக்கையிலிருந்து தூக்கிவிட்ட தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியர் சாம்ஜியின் மனைவி மற்றும் ரீத்தா ஆகியோரை இரத்த வாந்திக் கோளாறிலிருந்தும், தினேஷைக் குடலிறக்கப் பிரச்சனையிலிருந்தும் தேவன் குணமாக்க; சிவதேக்கடி மற்றும் கட்யா ஆகிய கிராமங்களிலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *மாயமான கட்டி!*

*குஜராத், உமர்காம் பணித்தளம், ஜரல் என்ற கிராமத்தில் 14 வயதே நிரம்பிய நமது விசுவாசியொருவரின் மகன், பாபுபாய் வாகத் என்பவருக்குத் தனது கையில் அதிகமான வேதனை உண்டானது. உடனே அவனது தகப்பனார் அவனை மருத்துவமனைக்குக் கொண்டுச் சென்றார். பரிசோதித்துப் பார்த்த மருத்துவர்கள் அப்பையனின் தலையில் கட்டி ஒன்று இருப்பதாகக் கண்டறிந்தனர். அன்று அவர்கள் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்துக்கொண்டிருக்கும்போது, திடீரென அப்பையனுக்குப் பக்கவாதம் ஏற்பட்டது. உடனே, அவனைத் தூக்கிக்கொண்டு, அருகிலிருந்த ஆலயத்திற்குத் தகப்பனார் சென்றார். அங்கே நமது விசுவாசிகள் 4 நாட்களாகத் தொடர்ந்து அவனுக்காக ஜெபித்து வந்தனர். அதன் விளைவு, அப்பையன் அற்புதமாக முழுசுகம் பெற்று, நடக்க ஆரம்பித்தான். தேவனுக்கே மகிமை!*

## 10 ஜனவரி
ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாஷ்வா சின்னதுரை எஸ்.
திரு. சஞ்சீப் ஆனந்த், திரு. பவுலுஸ் பர்ஜோ
திரு. செல்வம் தவமணி, திருமதி. ஹவ்ஜம் ஹிஜம்
திரு. லால்துசகா, திரு. சாந்தகுமார்

### கண்ட்வா பிராந்தியம்: ஐசக் & சீதா

**துதிக்க:** முதன்முறையாக 45 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசித்துள்ளனர். புதிதாக 29 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசி சாகுன் ஷிர்லாலைக் கர்த்தர் கோவிட்–19னின் பாதிப்பிலிருந்து காப்பாற்றினார். ஜமாலி கிராம தரணை வாய்ப்பேசாமையிலிருந்தும், ராதிகாவைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் அற்புதமாய் சுகப்படுத்தினார். திருமணமாகி 12 வருடங்களுக்குப்பின், நமது விசுவாசி சுனிதா மாபோவிற்குத் தேவன் மழலை பாக்கியத்தை நல்கினார். நமது விசுவாசி பாவ்சிங்கின் சோளப்பயிர் நிலத்தைக் கர்த்தர் காட்டுப்பன்றிகள் சேதப்படுத்தாதபடியும், பெத்துல் கிராம பூஷாவை இடிந்து விழுந்த மதிலினால் உயிர்ச்சேதமடையாதபடியும் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காட்கியா, சுத்ரியாபுரா மற்றும் ருதக்கல் ஆகிய கிராமங்களில் புதிதாக ஜெபக்கூட்டங்கள் நடத்தவேண்டுமென்ற திட்டம் செயல்படுத்தப்பட; தரணி பணித்தள நமது விசுவாசி ரேகாவின் கணவர் மன மாற்றத்துடன் சிறையிலிருந்து வெளிவர; மால்குந்தி கிராம காட்டுப்புறப்பகுதிகள் தவறாக ஆக்கிரமிக்கப்படுவது தடுக்கப்பட; கக்கடா கிராம சுக்தரையும், தார் கிராம ஆஷிஷையும், மாஃப்பிபுரி கிராம பரத்தையும் மற்றும் குந்தா கிராம மம்தாவையும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெறச் செய்ய; சாஸ்ராபுரா நாசுபாயை நெஞ்சுவலியிலிருந்தும், ராதிகாவை மனவளர்ச்சியின்மையில் இருந்தும், சாயினா பானுவை வலிப்புநோயிலிருந்தும், பிஸ்நர் கிராம 12 வயது சிறுவன் ஆர்தாஸைக் கண்பார்வையின்மையிலிருந்தும் கர்த்தர் சுகமாக்க ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ராம்கார்: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சமடைந்துள்ளனர். புதிதாக 17 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. ஊரடங்கிற்குப்பின் அதிகமான மக்கள் நமது ஆராதனைகளில் கலந்துக்கொள்கின்றனர். நமது விசுவாசிகளுக்கு இவ்வருடம் தேவன் விவசாயத்தில் பெரும் விளைச்சலைத் தந்துள்ளார். நமது சுதேச ஊழியர் இம்மானுவேலின் மனைவிக்குக் கர்த்தர் நல்ல சுகம் தந்துள்ளார். நமது சுதேச ஊழியர் மைக்கேல் தம்பதிக்குத் தேவன் குழந்தை பாக்கியத்தை அருளினார். ஜெபத்தின் மூலம் நமது விசுவாசிகளில் அநேகர் பற்பல வியாதிகளிலிருந்து சுகம் பெற தேவன் உதவிச்செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனஉளைச்சலிலிருந்து பாக முனி, ரூபின் மராண்டி மற்றும் சுனில் டுடுவையும், மஞ்சள்காமாலைநோயிலிருந்து கான்சிரியா சபையைச் சேர்ந்த நமது சபை மூப்பரின் மனைவியையும் கர்த்தர் சுகமாக்க; போக்வா மற்றும் வாலியம் சபை மூப்பர்களின் நற்சாட்சியுள்ள ஆவிக்குரிய வாழ்விற்காக; உள்ளூர் மதுபான தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நமது பத்ரியா சபை விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்கள் யாவரும் அத்தவறிலிருந்து மனந்திரும்ப; சிந்திரியா சபை மூப்பர் வேதாகமக் கொள்கைகளைப் பின்பற்றி, ஆராதனைகளைக் கிரமமாக நடத்தித் தர கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## 11 ஜனவரி திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயா ஹெலன் ரோஸ் செல்வகுமார்

### அமலகாச்சி: ஆல்பர்ட் பிரபாகரன் & முருகம்மாள் எஸ்தர்

**துதிக்க:** 35 இடங்களில் நடைபெற்ற மாலைநேர ஜெபக்கூடுகைகளையும், 36 இடங்களில் நடைபெற்ற ஊழியப் பின்தொடர்பணிகளையும், 32 இடங்களில் நடைபெற்ற ஒருநாள் உபவாசக் கூடுகைகளையும், ஒரு இடத்தில் நடைபெற்ற சபை மூப்பர்கள் கூடுகையையும், 4 முறை நடத்தப்பட்ட சுதேச ஊழியர்களுக்கான வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும், ஒருமுறை நடத்தப்பட்ட புதிய விசுவாசிகளுக்கான ஆவிக்குரிய பயிற்சிக் கூடுகையையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துக் கொடுத்தார். சிங்கார்சி மலைப்பகுதியைச் சார்ந்த 17 கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்காக ஒரு பகல் நேர பராமரிப்பு மையம் கட்ட, நமது சபை மூப்பரான டேனியல் மால்தோ 3 ஏக்கர் பரப்பளவிலான தனது நிலப்பகுதியை இலவசமாகத் தந்துள்ளார். தங்களது சொந்த இருப்பிடங்களில் பாதுகாப்பாக உள்ள நமது படுதா பள்ளி மாணவர்களை அவ்வப்போது ஆசிரியர்கள் சென்றுச் சந்தித்து, பலவழிகளில் ஊக்கப்படுத்தி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மாரியோ சபை மூப்பரான யாகுப் மால்தோவைச் சமீபத்தில் இழந்துத் தவிக்கும் அவரது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காக; நமது படுதா பள்ளியின் வகுப்பறைகள் மற்றும் தங்கும் அறைகளின் கட்டுமானப்பணிகள் விரைவில் நிறைவுற; குமார் பகாடியா மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்டு வரும் பாடல்கள் மற்றும் மொழி அகராதியின் பணிகள் சிறப்பாக முற்றுப்பெற; வாழ்வாதார அடிப்படைத் தேவைகளுக்காக இடம்பெயர்ந்துச் செல்லும் நமது விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்களின் ஆவிக்குரிய நல்வாழ்விற்காக ஜெபிப்போம்.

## கடத்தப்பட்டவர், காப்பாற்றப்பட்டார்!

*உத்திரப்பிரதேசம், ஜாலுன் பணித்தளம், அக்கூடி கிராம நமது விசுவாசி சஞ்சு என்பவர், வரும் நாட்களில் நடக்க இருக்கும் ஊழியங்களைக் குறித்துத் திட்டமிட மிஷனெரிகளால் ஒழுங்குச்செய்யப்பட்டிருந்த கூடுகையொன்றுக்குச் சென்றிருந்தார். இவருக்கு 2 மகள்களும் ஒரு மகனும் உண்டு. இவர் அத்திட்டக் கூடுகைக்குச் சென்றிருந்த சமயத்தில், இவருடைய மகன் ட்யூசனுக்குச் செல்லும் வழியில் காரில் வந்த யாரோ இருவர் அச்சிறுவனைக் கடத்திக்கொண்டு பிந்த் என்ற இடத்திற்குச் சென்றுவிட்டனர். இச்செய்தி சஞ்சுவின் செவிக்கு எட்டியது. உடனே, அங்கே திட்டக்கூடுகையில் இருந்த விசுவாசிகளோடு இணைந்து இதற்காக ஜெபிக்கலாயினார். இதன் விளைவாக அங்கே நடந்தது என்ன? கடத்தல்காரர்கள் ஓரிடத்தில் காரை நிறுத்திவிட்டு, கழிவறைக்குச் சென்றனர். அச்சமயம் இச்சிறுவன் காரிலிருந்து இறங்கி, அருகிலிருந்த விருந்தினர் விடுதி ஒன்றிற்குள் தஞ்சம் புகுந்தான். பின்பு அங்குள்ள மக்கள் கயிறுகளினால் கட்டப்பட்டிருந்த அவனுடைய கைகள் மற்றும் பிளாஸ்திரியினால் ஒட்டப்பட்டிருந்த அவனுடைய வாய் அனைத்தையும் கட்டவிழ்த்து, அச்சிறுவன் கொடுத்தத் தகவலை முன்னிட்டு, அவனை அவனது பெற்றோர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டனர். சிறுவனைக் காப்பாற்றிய தேவனுக்குப் புகழ்ச்சி உண்டாகட்டும்! அல்லேலூயா!*

## 12 ஜனவரி
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. லவ்லின் புன்யா

### லால்மதியா:
**அமரேந்திரன் & சுவேதா**

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்தில் வந்துள்ளனர். 4 இடங்களில் எவ்விதத் தடையுமின்றி மாலைநேர ஜெபக்கூடுகைகள் சிறப்பாக நடைபெற்றன. தினமும் அதிகாலை 5 மணி கைபேசி கூட்டிணைப்பு அழைப்பின் மூலம் நமது விசுவாசிகளுடன் இணைந்து நடத்தும் ஜெப நேரத்தைத் தேவன் ஆசீர்வதித்துத் தருகிறார். மோகபத்தன் கிராம மரங்மை முர்முவைத் தீராத முதுகு வலியிலிருந்து தேவன் அற்புத மாகச் சுகமாக்கினார். துளசிபூர் மற்றும் படா சின்னி கிராம மக்கள் புதிதாக ஜெபம் மற்றும் ஆராதனை நடத்த தங்களது கிராமங்களுக்கு வரும்படி அழைப்பு விடுக்கின்றனர். தெத்மாய் மராண்டியைப் பாம்புக்கடியிலிருந்து தேவன் காப்பாற்றினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திலாய்பாத், சின்னி, துளசிபூர், போத்கமா, சித்தார்கட்டி, சபாய்ஜோடா, சாம்பூர், பராதீர், மகசோல், ஜர்கடா, ஜப்தி, மஸ்னகா காஸ்பதார் மற்றும் கார்காடி ஆகிய கிராமங்களிலுள்ள நமது புதிய தொடர் பாளர்கள் யாவரும் இரட்சிப்பின் அனுபவத் திற்குள் வர; சின்னி, பராதீர், திலாய்பாத், துளசிபூர், பால்கமி, சிம்தா, சபாய் ஜோடா, சித்தார்குட்டி, சாம்பூர் மற்றும் பாக்ஜுடி ஆகிய கிராமங்களில் நடக்கப்போகும் மாலைநேரக் கூட்டங்களின் ஆசீர்வாதங்களுக்காக; 5 புதிய திருச்சபைகள் உருவாக்கப்பட; பஞ்சகாச்சி கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் அனைவரும் மனம் மாற; பாஜ்நாத்பூர் மற்றும் கைர்பானி ஆகிய கிராமங்களில் ஆவிக்குரிய மலர்ச்சியுண்டாக; மோகபத்தன் மற்றும் ஹர்கட்டா ஆகிய பகுதிகளில் திருச்சபைகள் நிறுவப்பட; விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு புதுப்பிக்கப்பட; தேவிபூர் பகுதியில் பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் மன மாற்றம் பெற; மலைப்பாங்கான இடங்களில் இயேசு திரைப்படம் திரையிட, ஒரு சிறிய ஒளித்திரை (mini projector) வாங்குவதற்கான நிதித்தேவை சந்திக்கப்பட; தேவிபூர் திருச்சபைக்குச் சரியான நபர் ஒருவர் திருச்சபை மூப்பராகத் தெரிந்தெடுக்கப்பட; விசுவாசிகளின் மத்தியில் நல்ல புரிதல் உண்டாகக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

### மோகுல் பஹாடி:
**பாகி சத்தீஷ் & முத்தா ரத்னகுமாரி**

**துதிக்க:** புதிதாக 18 நபர்கள் கிறிஸ்துவின் அன்பண்டை விசுவாசத்துடன் வந்துள்ளனர். 26 இடங்களில் ஊழியப் பின்தொடர்பணி செய்யப்பட்டுள்ளது. ரோஷ்னாலா மற்றும் பானதும்பர் ஆகிய கிராமங்களில் அநேக மக்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்து வில் அறிக்கையிடவும் திருச்சபையில் இணையவும் ஆயத்தமாக உள்ளனர். சாப்புடியா கிராம சிபி தெகிரியைத் தேவன் பாம்புக்கடியிலிருந்து காப்பாற்றினார். ருபாய் தெகிரி, புல்முனி ராணி மற்றும் பார்வதி ராணி ஆகியோரைத் தீராத வியாதிகளிலிருந்து தேவன் பாதுகாத்தார். ஹரிந்தர் கிரி மற்றும் சாம்பு தெகிரி ஆகியோரது குடும்பப் பிரச்சனைகளைக் கர்த்தர் முடிவிற்குக் கொண்டுவந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புசனா அகாதியை நெஞ்சு வலியிலிருந்தும், புதன் தெகிரியை கைவலி யிலிருந்தும் சுகமாக்க; தலாகி மற்றும் மால்தி ஆகிய பகுதிகளைச் சார்ந்த அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் சென்றடைய, நமது விசுவாசிகளைத் தொந்தரவுச் செய்யும் பனியாபசார் கிராம துமா தெகிரி மற்றும் ராஜேந்தர் கிரி ஆகியோர் மனந் திரும்ப; மோகுல் போனா பகுதி விசுவாசிகள் அனைவரின் ஆவிக்குரிய வாழ்விற்காகக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**13** *ஜனவரி*

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

## சந்தால் சீஷத்துவப் பயிற்சி ஊழியம்:

**சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** நமது விசுவாசிகளின் பின்னணியத்திலிருந்து மிஷனெரிகளாக மாறியிருக்கும் தினேஷ் & மேரி அவர்களின் திருமணத்தை மிக அருமையாகத் தேவன் நடத்தித் தந்தார். நமது விசுவாசிகள் இவ்வருடம் விவசாயத்தில் நல்லறுவடையைப் பெற கர்த்தர் உதவினார். அநேக இடங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. சுதேச ஊழியர்களின் குடும்பக்கூடுகையில் கலந்துக்கொண்டு, அவர்களை உற்சாகப்படுத்தத் தேவன் நமது மிஷனெரிகளுக்குக் கிருபை செய்தார். நமது மிஷனெரிகளாகிய பாபுஜி முர்மு மற்றும் வயலட் ஹன்ஸ்தக் ஆகியோரது திருமண ஏற்பாடுகளை நல்ல முறையில் செய்து முடிக்க கர்த்தர் உதவியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற 3 மாதங்களில் 22 பணித்தளங்களில் 386 வேதாகம வகுப்புக்குழுக்களை உருவாக்குவதற்கான திட்டத்தைத் தேவன் ஆசீர்வதித்துத் தர; வேதாகம வகுப்பிற்கான கையேடுகள் விரைவில் அச்சிடப்பட; நமது மிஷனெரி சகோ. ரூபன் டுடுவிற்கு நல்ல வாழ்க்கைத் துணை அமைய; இன்னும் சந்திக்கப்படாதிருக்கும் இப்பகுதி சந்தால் இனமக்கள் கர்த்தருடைய வார்த்தையினால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## தெலோ:

**பால்ராஜ் & ஜெபஜோதி**

**துதிக்க:** புதிதாக 35 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 12 இடங்களில் விசுவாசிகளின் கூடுகைகளையும், கொடும்பா கிராமத்தில் சிறிய ஜெபக்குழுத்தலைவர்கள் கூடுகையையும், பலிதி கிராமத்தில் சபை மூப்பர்கள் குடும்பக்கூடுகையையும் மற்றும் 4 இடங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் வெற்றியாக நடத்தி முடிக்க தேவன் உதவினார். கர்த்தர் தாராபூர் கிராம நமது விசுவாசி ஜோசப் ஹெம்ரோமை அக்கிராம மக்களின் எதிர்ப்புக்கு விலக்கிக் காத்துள்ளார். டேவிட் முர்முவின் மகள் தலமாய் முர்முவை மூளை மலேரியா நோயிலிருந்தும், மங்குரு கிராம தலமாய் ஹன்ஸ்தக்கை மனவளர்ச்சியின்மையிலிருந்தும் தேவன் காப்பாற்றிச் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கௌரி, ஹரின்சாரா, பாதர்கட்டா மற்றும் தாராபூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு எதிராக இருப்போர் மனந்திரும்ப; போக்ரியா மற்றும் கந்தூர் ஆகிய கிராமங்களில் திருச்சபையின் உறுப்பினர்களாக மாறக் காத்திருக்கும் நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இந்துவா, கோர்டிஹா, ராணிதிஹ் ஆகிய கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட; பாக்முண்டி கிராம ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக விரைவில் நிறைவுப்பெற; தற்போது தங்களுடைய பெற்றோர்களோடு இருக்கும் பலிதி மற்றும் மட்டியா கிராமங்களைச் சார்ந்த நமது சிறுவர் பராமரிப்பு மையங்களிலுள்ள 150 பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்களது நல்ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் தேவனிடம் ஜெபிப்போம்.




*ஜனவரி*
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஐசக் ஆபேல் எஸ்.

# மேற்கு வங்காளம்

## பாலுர்காட்:

### ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பண்டை வந்துள்ளார். தேவன் இவ்வருடம் நமது விசுவாசிகளுக்கு நல்ல அறுவடையைத் தந்திருக்கிறார். பக்கவாதத்திலிருந்து ராபின் டுடுவையும், தீராத தலைவலியிலிருந்து ராணியையும் கர்த்தர் குணமாக்கினார். பாஸ்நயைச் சார்ந்த சோபுன் டுடு, சாந்தமானைச் சார்ந்த ஜிசு முர்மு, துந்தகாராவைச் சார்ந்த பிஸ்நாத் டுடு, கோமல் டுடு, அஜு டுடு மற்றும் தெதகத்தோலாவைச் சார்ந்த அனில் கிஸ்கு, தலமாய் முர்மு, சுனில் கிஸ்கு ஆகிய நமது அனைத்து புதிய தொடர்பாளர்களும் சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம் பெயர்ந்துச் சென்றுள்ள நமது விசுவாசிகள் யாவரும் தங்களது ஆவிக்குரிய ஜீவியத்தில் குன்றிப் போகாமலிருக்க; மனநிலை கோளாறினால் குடும்பத்தாரின் தொடர்பிலிருந்து விடுபட்டிருக்கும் பெல்தா கிராம ஜோசப் ஹஸ்தாவின் பரிபூரண சுகத்திற்காக; எதிர்ப்பைச் சந்திக்கும் பெல்தா கிராம ராணி முர்மு தனது விசுவாசத்தில் திடமாய் நிற்க; சாம்நர், சுட்டிபுக்கூர், உதால், கமில்பூர், மும்மின்பூர், காத்தன், தராஜ்பூர், முனிஷ்பூர், பாஸ்நய், லிட்டோதங்கா, அரக்தா, ராங், டான்கி, தெகிதோலா, கோக்ராம், பில்பாடா, காசிபூர், துரல தப்கா, துந்தகாரா, மக்வா, ஜாராய் மற்றும் மே நகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் உட்புக வாய்ப்புகள் கிடைக்கக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## இட்டாஹார்:

### அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புருபுகட் கிராமத்தில் 5 மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்களையும், வாலிபர் கூடுகையையும் நடத்திட கர்த்தர் உதவிச்செய்தார். குச்சியாமரி கிராம தொங்கல் முர்மு மற்றும் பசாஹர் கிராம தலமாய் பெஸ்ரா ஆகியோரைத் தேவன் குழந்தைச் செல்வங்களினால் ஆசீர்வதித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால் பெலவீனத்தினால் நிற்கக்கூட முடியாமல் வேதனைப்படும் அனில் முர்முவையும், பக்கவாதத்தினால் அவதிப்படும் குச்சியாமரி கிராம லூர்து முர்முவையும் தேவன் குணப்படுத்த; பாக்ரிகுட்டு கிராம சுனி சோரேன் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலுமாய் விடுபட; இடம் பெயர்ந்துச் சென்றிருக்கும் சபை மூப்பர்களான காலிபுக்கூர் கிராம தால்கு சோரேன் மற்றும் பசாஹர் கிராம ராஜன் கிஸ்கு ஆகியோர் மீண்டும் சுகபத்திரமாய் வீடு வந்துச் சேர கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## 15 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி ஜோசப்
திருமதி. சுகந்தி சாலமோன்

### ராணிகன்ஜ்:
### துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** புதிதாக 19 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 4 இடங்களில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். மோரபாரா மற்றும் லவதங்கா ஆகிய திருச்சபைகளில் வைத்து நடத்திய சிறுவர் நிகழ்ச்சிகள் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்தன. அனைத்து திருச்சபைகளிலும் அறுவடைப்பண்டிகை வெற்றிகரமாக நடைபெற்றன. பல்வேறு வியாதிகளிலிருந்து சிலா முர்மு மற்றும் தலா ஹெம்ரோம் ஆகியோரைத் தேவன் சுகமாக்கினார். தோனா மர்தி, ரஜினா மர்தி மற்றும் ஸ்ரீமான் சோரேன் ஆகியோர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க ஆவலாக உள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியருடைய குடும்பத்தினரின் ஆரோக்கியத்திற்காக; வெளிசந்திப்பு ஊழியத்தில் நமது விசுவாசிகள் உற்சாகமாக ஈடுபட; தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருக்கும் மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; புஜு பித்தா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு வாசல் திறக்கப்பட; கலிதோலா கிராம திலி மராண்டி மற்றும் ரோகுட்டு கிராம தோனா மர்தி ஆகிய இருவரின் இரட்சிப்பிற்காக; பின் மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் மனம்மாற ஜெபிப்போம்.

### சம்சி:
### தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் புதிதாக வந்துள்ளனர். 4 கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 10 இடங்களில் விசுவாசிகளுக்கென நடைபெற்ற ஒரு நாள் ஜெபக்கூடுகைகளையும், மாலைநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் அநேகருக்குப் பிரயோஜனமாக்கித் தந்தார். ஜத்தல்பூர் கிராம மங்கல் ஹன்ஸ்தா நமது மிஷனெரிகளுடன் சேர்ந்து ஜெபிக்கும் போது, தனது பாவத்தை அறிக்கையிடக் கர்த்தர் அவருக்குக் கிருபை செய்தார். ஜித்தல்பூர் கிராமத்தில் புதிய ஆராதனை மையம் துவங்கக் கர்த்தர் உதவினார். நமது புதிய தொடர்பாளர்களான ரகுநாத் மராண்டி, சீத்தா சோரேன், மங்கல் ஹன்ஸ்தா, ரமேஷ் கிஸ்கு, தீனு முர்மு, பாசுர் முர்மு மற்றும் ஹோப்னா முர்மு ஆகியோர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாய்ப் புற்றுநோயிலிருந்து மங்கல் ஹன்ஸ்தா பூரண சுகம் பெற; லக்சர்பூர் மற்றும் வாரி ஆகிய திருச்சபையினருக்கு ஆலயங்கள் கட்ட நல்ல நிலங்கள் கிடைக்க; கலிதோலா கிராம சுவிசேஷ எதிர்ப்பாளர் மனம் மாற; சம்சி பகுதியில் பணிபுரிய ஒரு தன்னார்வ ஊழியர் கிடைக்க; ஜித்தல்பூர் கிராம மங்கல் ஹன்ஸ்தா, ஜர்னா தோலா கிராம சீத்தா முர்மு மற்றும் ராபின் முர்மு, பிஜாய் சோரேன், சான்சா சோரேன், பிரான்ஸிஸ் முர்மு, ரூபி மராண்டி, சுனித்தா ஹன்ஸ்தா, சங்கர் முர்மு, ஜக்காஸ் முர்மு மற்றும் ரகுநாத் மராண்டி ஆகியோரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

**16** *ஜனவரி*
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயமலர் குருபாதம்
திருமதி. தெபோரா டி. ரோஸ்லின் அருள்ராஜ்

## தபன்:
### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். 5 இடங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியங்களையும், சிறுவர் ஊழியங்களையும் மற்றும் அனைத்து திருச்சபைகளிலும் நடந்த ஊழியப் பின்தொடர் பணிகளையும் கர்த்தர் ஆசீர்வாதமாக்கித் தந்தார். தீராத பெலவீனத்திலிருந்து ராதிகா ஹஸ்கியைத் தேவன் சுகப்படுத்தினார். தபன் பகுதியில் பலவிதங்களில் தேவன் சுவிசேஷ வாசலைத் திறந்து தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்படுகின்ற கிராமங்கள்தோறும் பெருமளவு ஆவிக்குரிய அசைவு ஏற்பட; பாஸ்பாடா பகுதியில் ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; விசுவாசிகள் தங்களது விவசாயத் தொழிலில் தீவிரமாக ஈடுபடுவதுடன் தங்களது ஆவிக்குரிய வாழ்விலும் சீராக முன்னேற; அனந்தபூர், போதால், காடதோலா, நாராயண்பூர் மற்றும் தோக்கல்பூர் ஆகிய கிராமங்களில் விசுவாசிகளினிடையே எழுப்புதல் உண்டாக; வெளி சந்திப்பு ஊழியத்தில் நமது விசுவாசிகள் புத்துணர்ச்சியுடன் கலந்துக்கொள்ள; ஊழியங்களை மேலும் திறம்படச் செய்வதற்கு சுதேச ஊழியர்களும், தன்னார்வ ஊழியர்களும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் பெலப்பட; தற்போது சுவிசேஷம் உட்புகுவதற்கு ஏதுகரமாக உள்ள தபன் பணித்தளப் பகுதிக்கு ஒரு புதிய சுதேச ஊழியரின் குடும்பம் நியமிக்கப்பட; ரஞ்சன் கஸ்லா மற்றும் சதீஸ் குமார் ஆகியோர் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ ஜெபிப்போம்.

## கங்காராம்பூர் :
### தீஹேு & சரணி

**துதிக்க:** போன்தாரி கிராமத்தில் வைத்து நடைபெற்ற முழுஇரவு ஜெபக்கூட்டத்தின் மூலம் நமது விசுவாசிகளின் ஜெபவாழ்வு மேம்புறக் கர்த்தர் உதவிச்செய்தார். தீய ஆவியின் தொந்தரவினால் அடிக்கடி வரும் பயங்கரத் திகில் கனவுகளிலிருந்து சேட்டன் பெஸ்ராவையும், தீராத தலைவலியிலிருந்து பூர்மிளா ஹஸ்த்கையும் தேவன் விடுவித்தார். அநேக சவால்களின் மத்தியிலும் 2020-ம் வருடத்திற்கான ஸ்தோத்திர ஜெபக்கூடுகையை நடத்தி முடிக்க தேவன் ஒத்தாசை நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை மிகுந்த ஆர்வத்தோடு கேட்கும் திலீப் கிஸ்கு, ஜோதின் ஹஸ்தக், நாராயன் பஸ்கி மற்றும் ராஜேஷ் ஹஸ்தக் ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; வரும் நாட்களில் 15 கிராமங்களில் இயேசு திரைப்பட ஊழியங்களையும், 3 கிராமங்களில் சிறுவர் ஊழியங்களையும் மற்றும் 6 இடங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் ஆசீர்வாதமாக நடத்திக் கொடுக்க; நமது திருச்சபைத்தலைவர்களான கோவிந்தோ சோரேன், மங்கல் ஹஸ்தக், கோமு ஹெம்ரோம் மற்றும் மங்கோல் மர்தி ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

**17** *ஜனவரி*
ஞாயிறு

# அஸோம்

## ஜோனை:

### சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

**துதிக்க:** புதிதாக 30 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 6 கிராமங்களில் ஆய்வுப்பணி நிறைவுப்பெற்றுள்ளது. ஏறத்தாழ 900 மக்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டுள்ளனர். 2 இடங்களில் நடந்த வெளிசந்திப்புக் கூடுகைகளையும், 8 இடங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். பாலி கிராமத்தில் ஞாயிறு வேதாகமப்பள்ளி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாமுனி பாலி, பௌந்தரி, சிகா, கியாரோமெயில், தெலிஜான், மொய்தாபூர், மாமோர் மற்றும் பாலி ஆகிய கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; கிருஷ்ணா தோலே, ராஜா ரீகன், ஜெம் தோலே, அசாத் கஹாய், தினோ பெகு, புதுல் தோலே மற்றும் லபோயினி கும்பஸ்கியின் குடும்பம் ஆகியோரின் மனமாற்றத்திற்காக; போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் வாலிபர்கள் அப்பழக்கத்திலிருந்து முழுவிடுதலை பெற ஜெபிப்போம்.

## கோஹ்பூர்: டென்சிங் & கவிதா

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வர கர்த்தர் கிருபை புரிந்துள்ளார். நமது விசுவாசி சுனியாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுவித்தார். நடந்த அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும், அதில் முக்கியமாக வாலிபர் கூடுகையையும் தேவன் மக்களுக்கு அதிக ஆசீர்வாதமாக்கித் தந்தார். நமது விசுவாசிகளில் சிலர் கோவிட்-19னால் பாதிக்கப்பட்டப் போதிலும், மருத்துவமனைக்குச் செல்லாமலேயே சுகம்பெற தேவன் உதவிச்செய்தார். ஜங்குனி மற்றும் ரவுனாமுக் ஆகிய இடங்களில் ஆலயங்கள் சிறப்பாகக் கட்டிமுடிக்கப்பட்டதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம் பெயர்ந்துச் சென்றிருக்கும் தெலியாபாரி கிராம விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக இருக்க; லுயின்முக் திருச்சபையிலுள்ள பின்மாற்றமடைந்த விசுவாசிகள் மீண்டும் ஆலயம் வரத் தொடங்க; விசுவாசிகளல்லாதோரைத் திருமணம் செய்திருக்கும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நின்றுத் தங்களது வாழ்க்கைத்துணைகளையும் அவ்விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கேற்ற நற்சாட்சியுள்ள ஜீவியம் செய்ய; அடிக்கடி அதிக பெலவீனத்திற்குள்ளாகும் நமது சுதேச ஊழியர் பரிபூரணமான சுகம் பெற ஜெபிப்போம்.

## பூனையும்! பாம்பும்!

*ஜார்க்கண்ட், வனஞ்சால் பணித்தளம், பொக்கரியா கிராம நமது விசுவாசி புதன் தெகிரி தனது குடும்பத்தாருடன் வீட்டிற்குள் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது, பெரிய நாகப்பாம்பு ஒன்று வீட்டிற்குள் நுழைந்தது. இதைக் கண்ட அவரது வீட்டுப்பூனை அப்பாம்பைக் கொல்ல முனைந்ததோடு, அப்பாம்பும் அப்பூனையைக் கொல்ல எத்தனித்தது. சண்டையின் இறுதியில் பூனை புதன் தெகிரி உறங்கிக் கொண்டிருந்த கொசுவலையின் மேல் குதித்தது. உடனே, புதன் தெகிரி விழித்து விட்டார். சற்று சுதாரித்த அவர், தனது படுக்கையினருகே பாம்பைக் கண்டதும், தனது மனைவியையும் உதவிக்கழைத்து இருவருமாக அப்பாம்பைக் கொன்றனர். பாம்புக்கடியிலிருந்து புதன் தெகிரியின் வாழ்வைக் காப்பாற்றிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

## 18 ஜனவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. விஜயா ஜாய்சன்

### லோக்ரா:
### லுன்கிம் தோங்காம் கோங்சய் & லிங்டின்கிம் ஹயோகிப்

**துதிக்க:** கோவிட்-19னால் பாதிக்கப் பட்டிருந்த நமது அனைத்து விசுவாசி களும் கர்த்தருடைய பெரிதானக் கிருபை யினால் மீண்டும் சுகவாழ்வு பெற்றனர். கர்த்தர் வாலிபர் முகாமை ஆசீர்வதித்துத் தந்ததோடு, அம்முகாமில் அநேக வாலி பர்கள் தங்களைக் கர்த்தருடைய நாம மகிமைக்கென வாழ அர்ப்பணிக்கவும் உதவிப்புரிந்தார். பெரிய விபத்தினின்று சஞ்ஜீவ் தச்சாங் மற்றும் ராஜன் தாபா வைத் தேவன் பாதுகாத்தார். அனைத்து திருச்சபைகளிலும் வாரம் இருமுறை வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் நன்கு நடைபெற்று வருகின்றன. சபை ஊழியச் செயல்பாடுகளில் வாலிபர்கள் ஆர்வமுடன் பங்குப்பெறுகின்றனர். சபைமூப்பர்கள் அனைவரும் அவர்களே தங்களுடைய சபைகளை ஆவிக்குரிய விதத்தில் நடத்திக் கொண்டுச்செல்லுமளவில் ஊக்கப் படுத்தப்பட்டிருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இளம் விசுவாசிகளும், இளைஞர் களும் கிறிஸ்துவில் நாளுக்குநாள் வளர; விசுவாசத்தோடு ஆராதனையில் பங்குப் பெறும் நமது விசுவாசிகள் தங்களது சரீர பெலவீனங்களிலிருந்து முற்றிலுமாய் சுகம் பெற்றிட; நமது புதிய தொடர்பாளர்களான ரங்கராஜன், போர்தியோராய், பாபாரி, சல்பாரி மற்றும் போத்தசாலி ஆகியோர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; லாய்கேஷ்வர், ரித்தேஷ்வர், ராஜு, பூனமி, விக்கேஷ், அகுன், பெவ்ரி, உர்பா மற்றும் ரோஹமோனி ஆகிய சபைத்தலைவர்கள் யாவரும் உற்சாகமாக ஊழியம் செய்யக் கர்த்தருடைய வல்லமை யினால் அவர்கள் நிரப்பப்பட ஜெபிப்போம்.

### சிலபதார்:
### பாகிரதி பிசோயி & லால்மணி டிகல்

**துதிக்க:** எதிர்ப்புகள் மற்றும் பிசாசுகளுடைய தொந்தரவுகளின் மத்தியிலும் கதல்குடி மற்றும் பிப்பள்குடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நமது விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றனர். எதிர்ப்பின் நேரங்களில் தங்களது விசுவாசத்தில் திடமாக நின்ற ஜெகதீஷ் மேதாக் மற்றும் தாராபதி மேதாக் ஆகியோரைத் தேவன் தீங்கிற்கு விலக்கிக் காத்தபடியால் துதிப்போம்.

**ஜெபிக்க:** முகதிஹார் கிராமத்தைச் சேர்ந்த மங்கல்சிங் தோலே மற்றும் ஜீபோநாத் பமி ஆகியோரின் குடும்பங்கள் தங்களது சொந்த கிராம மக்களின் சத்தத்திற்குச் செவிக்கொடாமல் தைரியமாகத் திருச் சபையில் வந்து இணைய; அடிக்கடி பெலவீனத்தினிமித்தம் அல்லல்படும் ஒபோகாந்தா பாங்கிங்கின் குடும்பத்தைத் தேவன் முழுவதுமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

**19 ஜனவரி**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஐசக் தனசிங் ஆர்.

### மாஜுலி:
### ரபீந்திர முர்மு & செலினா மராண்டி

**துதிக்க:** ஊரடங்கிற்குப்பின் தற்போது மீண்டும் இங்கே விசுவாசிகளின் கூட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணித்தளத்தில் நடந்த எல்லா ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தீராத வயிற்றுவலியிலிருந்து டிங்கு மிலியைத் தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிஷாமோரா மற்றும் லிலாபாரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் உட்புகவும், அங்கே புதிதாக ஆராதனை மையங்கள் திறக்கப்படவும்; விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள தெப்ரோஞ்ஜன் தோலே, லெக்கிசன் பெகு, புலுமாய் பெகு, ராஜு, ரிம்பி, சுனில், மிலான் ஜோதி, ஆபேல், ஹெமுதா மற்றும் சானியா ஆகிய நமது விசுவாசிகள் அனைவரும் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஓய்ஷி மிலியின் இரட்சிப்பிற்காக; பெக்காமோனி கிராமத்தில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

### கோகாமுக்:
### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** 3 நபர்கள் முதன்முறையாகக் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். டிங்கிரி, ஜாய்ராம்பூர் மற்றும் கோயோன் ஆகிய கிராமங்களிலும் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோசுதோலி பகுதி யில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. நமது புதிய தொடர்பாளர்களான தோசரத் தோலே, ரேணு தோலே, மதுஸ்மிதா தாகு, சுரேஷ் பெகு, மீம் பெகு, அபாய் பெகு, நிகோம் பெகு மற்றும் போகபுரா பெகு ஆகியோர் சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டி வருகின்றதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டுவோரின் இரட்சிப்பிற்காக; சின்னம்மை தொற்றிலிருந்து மயூர் பெகுவையும், பக்கவாதத்திலிருந்து அர்மோன் மிசோங் கையும், சிறுநீரகக் கோளாறிலிருந்து மானிக் தோலேயையும், கர்ப்பப்பை கட்டியிலிருந்து பீனா பெகுவையும் மற்றும் வலிப்பு நோயிலிருந்து மதுஸ்மிதா தாகுவையும் கர்த்தர் அற்புதமாகச் சுகமாக்க ஜெபிப்போம்.

## *பொய் பேசும் வாய் அடைக்கப்படும்!*

*ஜார்க்கண்ட், நமது பாட்வாரா திருச்சபையைச் சார்ந்த பர்னபாஸ் சோரேன் மற்றும் அவரது இரு சகோதரர்கள் மீது அவர்களது சொந்த கிராமத்தினரே பொய்க்குற்றச்சாட்டு சுமத்தி வந்தனர். அவர்கள் தங்களது கிராமத்திலிருக்கும் 2 கையடிக்குழாய்கள் ஒன்றன்பின் ஒன்றாக செயலிழந்து போவதற்குக் காரணம், இயேசுவை ஏற்றுக்கொண்ட இச்சகோதரர்கள்தான் எனத் தங்களது கிராமம் முழுவதும் இச்செய்தியைப் பொய்யாகப் பரப்பி வந்தனர். இதைக் கேட்ட அவ்விசுவாச சகோதரர்கள் மனமுடைந்து கர்த்தரிடம் அக்காரியத்திற்காக ஜெபித்தனர். அப்போது தேவன் அவர்களுக்கு முக்யா என்பவரை அழைத்து, அக்குழாய்களைச் செப்பனிட உதவிக்கேட்குமாறு ஆலோசனை அருளினார். அதன்படி அவர்கள் முக்யா என்பவரை உதவிக்காக அணுகிய போது, அவர் ஆட்களை அனுப்பி, அக்குழாய்களைச் சரி செய்து கொடுத்தார். தற்போது எவ்விதப் பிரச்சனையுமின்றி அக்குழாய்கள் இயங்கி வருகின்றன. இதைக் கண்டதும், அவர்களுக்கு விரோதமாகப் பொய் பேசியவர்கள் வாயடைத்துப் போயினர். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!*

## 20 ஜனவரி

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா மராண்டி

# சத்தீஸ்கட்

### சீத்தாபூர்: பத்வி சோமாலியா மான்சுபாய் & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. ஹர்திசாந்த் திருச்சபை தொடக்க ஆராதனையைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். மடுசாசாரை மற்றும் தாரேதான் ஆகிய திருச்சபைகளில் சிறப்பாக அறுவடைப்பண்டிகை நடத்தப்பட்டதோடு, அவைகள் அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் அமைந்தன. பிரேம்சாயின் குடும்பத்தில் தேவன் மழலைச்செல்வத்தைக் கட்டளையிட்டார். மடுசாசாரை, சார்தின், ஜாஜ்கா, சாட்டன் பாரா, கேராஜு, போக்சாரி மற்றும் லலித்பூர் ஆகிய இடங்களில் உள்ள விசுவாசிகளுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி கொடுக்கப்பட்டது; இது அநேக விசுவாசிகளுக்குத் தங்களது உற்றார் உறவினர்களை ஆத்தும ஆதாயம் செய்வதற்குப் பெருந்தூண்டுதலாக இருந்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நவபாரா மற்றும் போக்சாரி ஆகிய பகுதிகளில் நடந்துக்கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய; எல்லாத் திருச்சபைகளிலும் மாதச்சந்தா காணிக்கை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த; சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து விஜய் எக்காவையும், கல்லீரல் பிரச்சனையிலிருந்து தினேஷையும் கர்த்தர் குணமாக்க; அகன்பாடி கிராம நமது விசுவாசி நீராகிண்டுவிற்குத் தகுந்த வேலை கிடைக்க; மன்பகால் & சுக்முனியா தம்பதியருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க தேவனிடம் ஜெபிப்போம்.

### சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் இயேசு கிறிஸ்துவை தங்களது இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஜெர்வி மற்றும் சசஹா ஆகிய இடங்களில் சுவிசேஷம் முதன் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அஹில்தா, மெக்கரி மற்றும் சோனே ஆகிய கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களையும், 15 கிராமங்களில் நடந்த ஊழியப் பின்தொடர்பணிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். நமது ஊழியத்தில் பிரதாப் பார்கவ் என்பவரைத் தன்னார்வ ஊழியராக தேவன் இணைத்துள்ளார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் அகர்பாயை விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கம்ஹாரியா கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; ரகுபீர், மோகன், அகதசியா, முகேஷ், அசோக், ராகேஷ், சஞ்ஜு, ரத்ரி, பரதேசி, ராகுல், பஞ்ஜாரி, மகிதர் மற்றும் சன்வானி ஆகிய நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; உரய்கா கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கான நிலத்தை வாங்குவதிலிருக்கும் தடை யாவும் நீங்க; வினய், ஜெய்பிரகாஷ், பரதேசி, பல்ராம் பத்ரி ஆகிய நமது விசுவாசிகளுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; சாத்னமி, சாகு, பைனிகா, யாதவ், நிசாத், ரோஹித்தாஸ், சூர்யவன்சி, தேவங்கன், கஷ்யாப், பட்டேல், சபரியா, டாங்சாஹா, கம்ஹார், கஹார், டோபி, நய், திவார், சார்தி, கோர்வா, திமார் ஆகிய மக்கள் கூட்டங்கள் நமது கர்த்தரை அறிகிற அறிவிற்குள் முழுவதுமாக வர ஜெபிப்போம்.

## 21 ஜனவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமலதா டேனியல் தாமஸ்
செல்வி. சாந்தி முர்மு

### கர்கோடா:
### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** 25 இடங்களில் நடந்த வெளி சந்திப்பு பஜன் கூடுகைகளையும், 3 நாட்கள் நடந்த உபவாச ஜெபக்கூடுகையையும், 3 இடங்களில் நடந்த வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும் மற்றும் 7 இடங்களில் நடந்த மாலைநேர ஜெபக்கூடுகைகளையும் கர்த்தர் பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். நமது விசுவாசிகளுக்கென நடத்தப்படும் ஆத்தும ஆதாயப்பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் அநேகர் ஊழிய தரிசனம் பெற ஏதுவாகிறது. நமது மிஷனெரி சகோதரி மீனாவின் காதில் செய்யப்பட்ட அறுவை சிகிட்சை நல்லமுறையில் முடிந்தது. யானைக் கூட்டத்திடமிருந்து தேவன் நமது விசுவாசிகளின் விவசாய நிலங்களைப் பாதுகாத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்கோடா பணித்தளத்தில் நமது ஊழியம் நல்வளர்ச்சிப் பெற; ரத்தியா மக்களினத்தின் இரட்சிப்பிற்காக; வெளி சந்திப்பு ஊழியத்தில் விசுவாசிகள் உற்சாக மாக ஈடுபட; இயேசுவை விசுவாசிப்போர் திருச்சபையில் இணைவதற்கு இருக்கும் தடைகள் யாவும் மறைந்துப் போக; மனநிலை பாதிப்பினால் கஷ்டப்படும் நமது விசுவாசியின் மகள் ருக்மணி பூரண சுக மடைய ஜெபிப்போம்.

### காட்கோரா:
### டிட்டிங்பெள & மலங்மெய் சனாலுங்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பாங்கிதா கிராமத்தில் நடத்திய இயேசு திரைப்பட ஊழியத்தையும், பர்னஜ்ஹரியா & ராகா கிராமங்களில் 2 நாட்கள் நடத்திய சிறுவர் முகாம்களையும், கோர்கா கிராமத்தில் நடத்திய சிறுவர் பிரதிஷ்டை நிகழ்ச்சியையும், ராகா கிராமத்தில் வைத்து நடைபெற்ற அனைத்து இரவுநேர ஜெபக்கூட்டங்களை யும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். குடலிறக்கப் பிரச்சனையிலிருந்து பசந்தி என்பவரின் மகன் சாமுவேலையும், பய்சிமர் பகுதி ஜெய்ராமையும் கர்த்தர் குணப் படுத்தினார். புதிதாக ஞாயிறு ஆராதனை கீராமூரா கிராமத்திலும், இரவு பஜன் கூடுகை பய்சிமர் கிராமத்திலும் தொடங்கப் பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளான துல்சிங், மகிதர் சிங் மற்றும் சோமர் சிங் ஆகியோர் முற்றிலுமாய் குடிப்பழக்கத் திலிருந்து விடுபட; கீராமூராவில் ஆராதனைக்குப் புதிதாக வரும் நமது பய்சிமர் பகுதி மானு என்பவர் கிறிஸ்தவ விசுவாசத்தில் மேலும் வளர; ஆராத னைக்கு வரவிடாமல் தனது மனைவி யைத் தடைசெய்யும் பய்சிமர் கிராம மான்சிங்கையும், அத்தாரின் தாயைத் தடைசெய்யும் அவரின் தகப்பனாரும் மனம் மாற; கார்தி கிராம நமது விசுவாசி பீர்பாலின் குடும்பத்தில் சமாதானம் பிறக்க; பாரி, அமதார், நாங்தல் மற்றும் சாலியா பாதா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## 22 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சுதாகர் நத்தானியேல்

### பிரதாப்பூர்: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் உரைக்கப்பட்டுள்ளன. தேவன் நமது விசுவாசிகளுக்கு இவ்வருடம் நல்ல பயிர் அறுவடையைக் கட்டளையிட்டுள்ளார். விசுவாசிகள் கர்த்தரில் வளரவும், பாட்னி, காசி, செல்கலி, பாய்கோனா, கஹாத்ரு ஆகிய பகுதிகளின் புதிய தொடர்பாளர்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும் தேவன் கிருபை செய்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக; புலம் பெயர்ந்துள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக; சரீர பெலவீனத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசிகளின் சுகநலன்களுக்காக; சங்கர் மற்றும் அவரது குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக; கஹாத்ரு பகுதியிலிருந்து சுவிசேஷத்திற்கு ஆவலாய் காத்திருக்கும் 8 குடும்பங்களின் ஆவிக்குரிய மனமாற்றத்திற்காக ஜெபிப்போம்.

## குஜராத்

### உமர்காம்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** நமது விசுவாசிகளான ஜோதிபேன், சாந்தனாபேன் மற்றும் தக்ஷணாபேன் ஆகியோருக்குத் தேவன் குழந்தை பாக்கியம் நல்கினார். ஜெபத்தின் மூலம் அங்கலாத் கிராம ஹிரல்பாயைத் தேவன் பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாத்தார். தங்களது அன்றாடக அவசியங்களுக்குப் பயன்படுத்தும்படி இருசக்கர வாகனங்களை வாங்கும் கிருபையைத் தேவன் நமது விசுவாசிகளான கிசோரிபாய் மற்றும் கல்லேஷ்பாயிற்கு ஈந்தார். தல்வாடல் கிராம நமது விசுவாசி சுரேஷ்பாயிற்கு சொந்தமாக வீடு கட்ட கர்த்தர் அநுக்கிரகம் பாராட்டினார். சபை மூப்பர்கள் கூடுகை பலவிதங்களில் ஆசீர்வாதமாக அமைந்தது. பெரிய விபத்தினின்று கர்த்தர் நமது மிஷனெரியைக் காத்தபடியால் துதி செலுத்துவோம்.

**ஜெபிக்க:** நமது திருச்சபை விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசி ஜெகதீஷ்பாய் தொடர்ச்சியாக ஆலய ஆராதனைகளில் பங்குப்பெற; தனது மனைவியை ஆராதனைக்கு வரத் தடை பண்ணும் இத்தேஷ்பாய் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### *பேசாத நாவு துதித்தது!*

*ராஜஸ்தான், கேர்வா பணித்தளம், பூம்தவாடா என்ற கிராமத்தில் கமாலிபேன் என்பவருக்குக் கடந்த மாதம் ஏற்பட்ட பெலவீனத்தினால் திடீரென வாய்ப்பேச இயலாமல் போனது. அவருடைய குடும்பத்தினர் பலவித சிகிட்சைகளை மேற்கொண்டும் பயனொன்றுமில்லை. நாளுக்குநாள் பெலவீனம் அதிகரித்து, சாப்பிடவும் நடக்கவும் கூட இயலாமல் போய்விட்டது. இந்தச் சூழ்நிலையில் அக்குடும்பத்தினரைச் சந்தித்த தபாய்சா கிராம நமது விசுவாசி ரமேஷ்பாய் அவர்களை நமது ஆலய ஜெபத்திற்கென வழிநடத்தவே, அக்குடும்பத்தினரும் கமாலிபேனைத் தூக்கிக்கொண்டு ஜெபத்திற்கு வந்தனர். சில மணிநேரங்கள் அனைத்து விசுவாசிகளுடன் சேர்ந்து அவருக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்ட வேளையில், கர்த்தர் பெலவீனமாயிருந்த அப்பெண்ணைத் தொட்டு சுகப்படுத்தினார். உடனே, வாய்ப் பேச இயலாதிருந்த அப்பெண் கர்த்தரைத் துதிக்க ஆரம்பித்தார். தற்போது அவரது சாட்சியுள்ள வாழ்வு அநேகரைக் கர்த்தரண்டை வழிநடத்திக் கொண்டு வருகிறது. கர்த்தருக்கே மகிமை! அல்லேலூயா!*

## 23 ஜனவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மேத்யூ கே., திரு. குமார் வி.
திரு. தேகம் சுரேஷ் ஷாம்ராவ்

### அஹ்வா & டாங் வெளிசந்திப்பு ஊழியம்:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** ஹன்வோத்காந்த் பணித்தளத்திலுள்ள ஆம்சர்வான் திருச்சபையிலும், பிப்பள்வாடா பணித்தளத்திலுள்ள மிலன் திருச்சபையிலும் வைத்து நடைபெற்ற சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகைகள் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தன. ஆம்தவா கிராமத்திலிருந்து 2 குடும்பங்களும், வசுரான் கிராமத்திலிருந்து ஒரு குடும்பமும் சுவிசேஷத்தின் மீது மிகுந்த வாஞ்சை காட்டுகின்றனர். இருசக்கர வாகன விபத்தின் மூலம் உண்டான பெரும் காயங்களிலிருந்து தேவன் வனிதாபேனையும், சுனிதா பேனையும் சுகப்படுத்தினார். பம்னமால் கிராமத்திலிருந்து புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கைச்செய்துள்ளனர். தாங்டி, வசுரான் மற்றும் சலே ஆகிய கிராமங்களில் நடந்த பெண்கள் ஐக்கியக்கூடுகையில் பெண்கள் அதிக உற்சாகத்துடன் கலந்துக்கொள்கிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கும் ஊழியப்பயிற்சிக் கூடுகைகளில் சபை மூப்பர்களும் சபை உபதேசியார்களும் தவறாமல் பங்குப்பெற; திருச்சபைகளின் பொருளாதாரத் தேவைகள் அந்தந்த சபை விசுவாசிகளின் மூலம் சந்திக்கப்பட்டு, தனிச்சையாக அச்சபைகள் இயங்குவதற்கு நமது விசுவாசிகளின் பொருளாதார வாழ்வு மேம்பட; மக்களின் பொதுநலனைக் கருதி, ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையன்று நடத்தத் திட்டமிட்டிருக்கும் சுகமளிக்கும் ஆராதனையைத் தேவன் மக்களின் சரீர மற்றும் ஆவிக்குரிய விதங்களில் ஆசீர்வதித்துத் தர; விசுவாசத்தில் நாளுக்கு நாள் ஆசீர்வாதமாக வளரும் நமது விசுவாசிகள், ஊழியத்திற்கென கொடுக்கும் ஈகைப்பண்பிலும் சிறந்து விளங்க; தக்லி பாடாவைச் சார்ந்த நமது விசுவாசிகளான சுனிதாபேன் & கன்சுபாய் தம்பதியருக்கும், சுலே பகுதியைச் சார்ந்த அன்கிதா பேன் & சாமுவேல்பாய் தம்பதியருக்கும் மழலைச்செல்வங்கள் கிடைக்க; தனது கர்ப்பத்தில் இரட்டைக்கருவைச் சுமந்துக் கொண்டிருக்கும் வடியவான் கிராமத்தைச் சார்ந்த ரவினாபேனுக்குத் தேவன் பாதுகாப்பான சுகப்பிரசவம் நல்க ஜெபிப்போம்.

### பாஜிபுரா:

**மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்**

**துதிக்க:** காங்பூர் மற்றும் தோன்தான் ஆகிய கிராமங்களில் மீண்டும் ஆலய ஆராதனைகள் துவங்கப்பட்டன. அநேகர் இயேசுவின் நற்செய்தியைக் கேட்பதற்கும், புதிய ஏற்பாடு மற்றும் ஆவிக்குரிய கைப்பிரதிகளைப் பெற்றுச்செல்வதற்கும் தேவன் கிருபை தந்தார். கையெலும்பு முறிவிலிருந்து தேவன் நமது சபை மூப்பர்களான ராஜூபாய் மற்றும் நானுபாய் ஆகியோரைச் சுகம் பெற உதவிச்செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீப காலத்தில் பாஜிபுரா பகுதியைச் சார்ந்த வினோத்பாயை இழந்த தினிமித்தம் துக்கத்தில் வாடும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருக்கும் நமது பாஜிபுரா விசுவாசிகளுக்காக; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து பயல்பேன் மற்றும் அம்ருத்பாய் விடுதலை பெற; நமது விசுவாசிகளான ஆகாஷ்பாய் மற்றும் ராஜூபாயிற்கு தகுந்த வேலைவாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

## 24 ஜனவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் ஜங்கய் தெளங் கான் காப்

### மாந்தவி:
### ரமேஷ் கிறிஸ்டியன் & ரேச்சல் ரமேஷ்

**துதிக்க:** சனாதாரா பகுதியிலிருந்து புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். சதாடி, ரென்தா, சர்வான், மற்றும் காதி குடி ஆகிய கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணி செய்யப்பட்டது. சுனிதா, ரானுபேன், மகிமா ஆகியோரைக் காய்ச்சல் மற்றும் தொண்டை வலியிலிருந்தும், ராம்காபேனைக் கால் வலியிலிருந்தும், சர்வான் கிராம கனஜுபாயைப் பக்கவாதத்தி லிருந்தும் தேவன் குணமாக்கினார். காதிகடி கிராம ரீனாபேனைத் தேவன் பொல்லாத பிசாசின் பிடியிலிருந்து காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சனாதாரா கிராம ரமீலாபேனையும், கொலகாதி கிராம ராகேஷ்பாயையும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்க; தனது கணவனையிழந்து 2 சிறு குழந்தை களுடன் துயரத்தினால் தவிக்கும் அல்பா பேனுவின் மனஆறுதலுக்காக; சனாதாரா, சொரம்பா, மற்றும் ராகிபுரா ஆகிய பகுதி களில் வாலிபர்களுக்கான கூட்டங்கள் ஆரம்பித்து நடத்தப்பட; பக்கவாதம், கண் பிரச்சனை மற்றும் தோல் ஒவ்வாமை நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டி ருக்கும் சீலாவிற்கு தேவன் முழுசுகம் தர ஜெபிப்போம்.

### சஹயாத்ரி பிராந்தியம்:
### சாமுவேல் சுப்பிரமணி & சுசிலா

**துதிக்க:** அஹ்வா, சஜ்னிவாதா மற்றும் சில்வாசா ஆகிய பணித்தளங்களில் நடைபெற்ற சபை மூப்பர்கள் மற்றும் உபதேசியார்களுக்கான நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். வடியவான் பகுதியில் ஓர் ஆலயத்தைத் தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்ய கர்த்தர் உதவினார். வசியாபாயைப் பக்கவாதத்திலிருந்தும், சானியாபாயைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கினார். திருமணமாகி 10 வருடங்களுக்குப்பின், நமது விசுவாசி ரவியாபாயின் குடும்பத்தில் தேவன் மழலை பாக்கியத்தைக் கொடுத்தார். நமது விசுவாசி ஷைலேஷ்பாயைச் சிறுத்தைப்புலியிடமிருந்து தேவன் காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; வருகிற நாட்களில் நடக்கவிருக்கும் அறுவடைப்பண்டிகை, வாலிபர் கூடுகை, பெண்கள் கூடுகை, வெளிசந்திப்பு ஊழியம், மற்றும் பல ஊழிய நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர; வேதாகமப்பயிற்சி வகுப்புகளில் பங்குப்பெற்ற மற்றும் பங்குப்பெற போகிற சபை மூப்பர்களும், உபதேசியார்களும் வருங்காலங்களில் கர்த்தருடைய பணியைச் சிறப்பாகவும், பலனுள்ளதாகவும் செய்திட; நமது விசுவாசியின் மகன் சுதிர்பாயிற்கு மருத்துவக்கல்விக்கான இடம் கிடைக்க; இடம் பெயரும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக; பக்கவாதத்திலிருந்து திவால்ஜிபாயையும், முதுகுத்தண்டுவடப் பிரச்சனையிலிருந்து மஞ்சுபேனையும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## 25 ஜனவரி திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டீபன் ஜாய்சன்
திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ்
திருமதி. மார்கரெட் முத்தையா சாமுவேல்
திருமதி. ஜெயா ரூபி சாலமோன்
திருமதி. கிருபாசனம் ஸ்டெல்லா ஆண்ட்ரூஸ்

# தாத்ரா & நகர் ஹவேலி

### டாமன்: வெங்கட பிரவீன் & பயூலா

**துதிக்க:** 9 மாதங்களுக்குப்பின், நாயக் வாத் என்ற கிராமத்தில் வாரந்தோறும் குடும்பங்களாக இணைந்து நடத்தும் ஜெபக்கூடுகை மீண்டும் தொடங்கப்பட்டது. லீலாபேன் மற்றும் மீனாபேனைத் தோல் தொற்றுவியாதியிலிருந்தும், பிரியனை அதிக பெலவீனத்தினின்றும் தேவன் சுகமாக் கினார். நமது புதிய விசுவாசி பூஜாபேன் இயேசுவின் நற்செய்தியின் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெரும் சுகவீனத்தினால் அவதிப் படும் சிறுபிள்ளை ஜான்வி முழுமையான சுகம்பெற்று, அவளது முழுக்குடும்பமும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வர; பாரியவாத் கிராமத்தைச் சார்ந்த பிஜய்பாய் தனது மனைவியை ஆலய ஆராதனைக்குச் செல்ல அனுமதிக்க; ஜாரி கிராம சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் சுவிசேஷத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் ஜாரி கிராம லதாபேன், நீருபேன், பூஜாபேன், ரேகா, மனீஷா, அசோக்பாய் மற்றும் சீத்தால் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்துப்பெருக; துங்கார் ஃபாலியா மற்றும் பாலி கரம்பெலி ஆகிய இடங்களில் சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கப்பட; ஆலய ஆராதனைகளில் விசுவாசிகள் யாவரும் தவறாமல் கலந்துக்கொள்ள; பட்டியா கிராமத்தில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் உருவாக; பட்டேல் மற்றும் ஹல்பதி ஆகிய பழங்குடியினர் மத்தியில் சுவிசேஷத்திற்கான வாய்ப்புகள் உருவாக ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### ஆலப்பள்ளி:

**நிங்தௌஜம் அலோன்சிங்**

**துதிக்க:** முதன்முறையாக 7 கிராமங் களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. மல்லேரா திருச்சபையின் 6-வது ஆண்டு விழா ஆராதனை வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விசுவாசிகளின் சுகத் திற்கென நடத்தப்பட்ட சிறப்பு உபவாச ஜெபவேளையில், நமது விசுவாசிகளான சரத் கெதம் மற்றும் அவரது மனைவி ருக்மாபாயிற்கும் தேவன் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை கொடுத்தார். பெத்தா தவாஸ் பகுதியைச் சார்ந்த புஷ்பா மோல்வர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார். கண் பிரச்சனையிலிருந்து மதுகரையும், காய்ச்சலி லிருந்து வச்சலாபாயையும் மற்றும் வயிற்றுவலியிலிருந்து பாபிபாயையும் தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது வாழ்வில் தேவ அற்பு தத்தை ருசித்த நமது புதிய தொடர்பாளர் கோசய் அத்ராமின் இரட்சிப்பிற்காக; ஜெபத்தின் மூலம் சர்க்கரை வியாதி யிலிருந்து சுகம்பெற்ற பிரஸ்தம் என்பவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கர்த்தரிடத்தி லிருந்து சுகம் பெற்றிருக்கிற வச்சலாபாய் மற்றும் பாபிபாய் சுவிசேஷத்திற்கும் செவி கொடுக்க ஜெபிப்போம்.

## 26 ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் தினேஷ் ஜி. எம்.

### சுர்கானா:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** பென்டிபாடா மற்றும் கோசூர்தா ஆகிய கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி உரைக்கப்பட்டுள்ளது. சார்னிவான் மற்றும் உம்பச்சபாடா ஆகிய கிராமங்களில் விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்து, ஞாயிறுதோறும் ஆலய ஆராதனைகளிலும் பங்குப்பெறுகின்றனர். உம்பச்சவாடா பகுதியில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப் பணி சிறப்பாக முடிவடைந்தது. ஜெபத்தின் மூலம் போர்சந்த் கிராமத்தில் நமது ஊழியத்தைத் தடைசெய்து வந்த சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் தங்களது தொந்தரவுச் செய்கைகளை நிறுத்திவிட தேவன் கிருபை தந்தார். நமது ஆலய ஆராதனையில் புதிதாக 4 குடும்பங்களைத் தேவன் இணைத்திருக்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆம்பட்டா கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்க்கும் மக்கள் மனம் மாற; தங்களுக்குள்ளே சொந்தமாகச் சாராயம் காய்ச்சி, வியாபாரம் செய்து, அதன் மூலம் ஒட்டுமொத்த கிராம மக்களின் சமாதான வாழ்வை நிர்மூலமாக்கும் உம்பர்பாடா, குந்த்வீர், சார்னிவான் மற்றும் ரான்வீர் ஆகிய கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; திருச்சபையில் மக்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டு இணையும் ஆராதனைவேளைகள் யாவும் தடையின்றி மிகவும் அமைதியுடன் நடைபெற ஜெபிப்போம்.

### ஜிம்மலாகட்டா (சிரோன்சா) :

### ஸ்ரீனிவாஸ் லாசரஸ் & சுனிதா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 15 கிராமங்களில் நடந்த பின்தொடர்பணி ஊழியங்களையும், 14 இடங்களில் நடந்த உபவாச ஜெபங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். போரம்பள்ளி கிராமத்தில் புதிதாக ஞாயிறு ஆராதனையும், மாரனள்ளி கிராமத்தில் புதிதாக ஜெபக்கூட்டமும் தொடங்கப்பட்டுள்ளன. தேவன் சகுந்தாவைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவித்து, அவருடைய சரீர பெலவீனங்கள் அனைத்தையும் நீக்கிப் போட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கவிதா மற்றும் மௌனிகா ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; வெங்கட் கொண்டகர்லா, எஷ்வந்த், சுரேஷ் மாவி, திலீப் அத்ராம் ஆகியோர் குடும்பமாக ஊழியத்தில் தங்களைச் சுதேச ஊழியர்களாக ஒப்புக்கொடுக்க முன்வர; ஜெபம் மற்றும் வேதாகம வகுப்புகளைக் கிரமமாக நடத்துவதற்கு ஏற்றவாறு தலைவர்கள் உருவாக்கப்படவும், அவர்கள் தங்களது பகுதிகளில் மக்கள் மத்தியில் அதைச் சிறப்பாக செயல்படுத்தவும்; ஆராதனைக்குழுக்களை நடத்துவதற்கும், திருச்சபை மக்களை ஆவிக்குரிய நல்வழியில் நடத்துவதற்கும் ஏற்ற சபைமூப்பர்கள் உருவாக; போரம்பள்ளி பகுதியில் ஞாயிறு ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. போரம்பள்ளி கிராமத்தைச் சார்ந்த மதனையா காவரே, சாந்தரையா கொடப்பி, ராமச்சந்திரன் ஆகியோரின் குடும்பங்களும் மற்றும் உமனூர், வேணுகம்பந்தா ஆகிய கிராமங்களைச் சார்ந்த மல்லவ்வா, சங்கர் காவரே ஆகியோரின் குடும்பங்களும் இரட்சிப்பிற்குள் வர; மொர்பள்ளி, சிரபள்ளி, எரகடா, பெர்காபட்டி, தர்ஷாவாடா மற்றும் தச்சிலிபீட்டா ஆகிய கிராமங்களிலுள்ள திருச்சபைகள் கர்த்தருக்குள் மேலும் பலப்பட; ஆம்பதெள்ளி, எரகடா, ராம்பள்ளி, பட்டிகோன் மற்றும் கரஞ்சா ஆகிய கிராமங்களில் வசிக்கும் மடியாகோண்ட் மக்களினத்திற்கும், மெரிகுடேம், ஆம்பெஜாரா மற்றும் வேணுகம்பந்தா ஆகிய கிராமங்களில் வாழும் மன்யா கோயாஸ் மக்களினத்திற்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

## 27 ஜனவரி

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பீதிகா பிபாபா பானி

### சிந்கேடா துணை மையம் - வடாலி:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. பாருல், சௌகோன் மற்றும் கோர்தா ஆகிய பகுதிகளில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பாருபாய் சுகம் பெற்றார். மேதாபாய் மற்றும் சுரேஷ் தாதா ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது பணிகளினிமித்தம் புலம் பெயர்ந்துள்ள நமது நாதனா கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; நமது விசுவாசி மோபாயின் கடன்பிரச்சனை சுமூகமாகத் தீர; மேவாத் தாதா மற்றும் உதான் தாதா ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; வரும் நாட்களில் நடக்கவுள்ள ஊழிய நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

### தஹானு:

**சங்கர் & ஆனந்தி**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். முதன்முறையாக 6 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ரஞ்சனா மற்றும் வான்சி பேனைத் தேவன் தேனீக்களின் தாக்குதலுக்குத் தப்புவித்தார். தகுவான் மற்றும் அர்கித்பாடா ஆகிய கிராமங்களில் சிறிய ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வாஞ்சல் என்ற கிராமத்தில் புதிய திருச்சபை தொடங்கப்பட்டுள்ளது. மங்கேஷ் மாகுவாங் என்பவர் தன்னார்வ ஊழியராகப் பணிபுரிய முன்வந்துள்ளார். அர்கிதா பாடா மற்றும் மதில்பாடா ஆகிய கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன. நிலேஷ், சுஜித், சுனில், பரசுபாய், உமேஷ் மற்றும் ஜெயேஷ் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராய்தலே மற்றும் ஜார்லி ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்ட நல்ல நிலங்கள் கிடைக்க; ஜார்லி திருச்சபை மூத்த விசுவாசி நருபாயிற்கு கால்புண்கள் நன்குச் சுகமாக; நமது இளம் விசுவாசியான மங்கேஷிற்கு நல்ல வாழ்க்கைத்துணை அமைய; தவறானப் போதனைகளால் அடிக்கடி திசை திருப்பப்படும் நமது முசல்பாடா, வாகத் மற்றும் அர்ஜித்பாடா ஆகிய பகுதி மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; தேவ், மங்கேஷ், குஷம் தம்பதி, அஜய், சிர்பத், சுதன், மனிஷா மற்றும் சானு ஆகியோரின் மனமாற்றத்திற்காக; தங்களது கிராமத்தினரால் துரத்தியடிக்கப்பட்டுள்ள 8 குடும்பங்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

**28** *ஜனவரி*
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜங்கோலுன் தௌதாங்
திருமதி. ஸ்டெஃபி பிஜு லால்
திரு. பாருத் பிரதாப் மாங்யா

# கர்நாடகா

## கானாப்பூர்:

### வினயராஜ் & சாந்தா வினயராஜ்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கானாப்பூர் மற்றும் நகதா ஆகிய இடங்களில் நடைபெறும் நமது ஆராதனைக்குழுக்களில் புதிய குடும்பங்கள் வந்து கலந்துக் கொள்கின்றனர். அதிகளவிலான காய்ச்சலிலிருந்து தேவன் லட்சுமியைச் சுகப்படுத்தினார். தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் உமாவை விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிவகுமாரின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; அர்ச்சனா மனநோயிலிருந்து சுகமாக்கப்படவும், அவருடைய 2 சிறு பிள்ளைகளின் எதிர்காலம் கர்த்தரால் பாதுகாக்கப்படவும்; மஞ்சு, சங்கீதா, மாதவி, கணபதி, கீதா, சிவகுமார், சிவராஜ் மற்றும் மஞ்சுநாத் ஆகியோர் இரட்சிப்படைய; கால்களில் உணர்வற்ற நிலையிலிருக்கும் ஒரு வயது சிறுபெண்பிள்ளைக்காகவும், மாதந்தோறும் தீராத வயிற்றுவலியினால் துன்பப்படும் பார்வதிக்காகவும் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## மாலூர்:

### கிஷாந்த் லிமா & பிரமிளா சிங்

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளார். பக்கவாதத்திலிருந்து நமது விசுவாசிகளான ரமேஷ் மற்றும் ராஜப்பாவையும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து நமது சுதேச ஊழியரான கன்ஷியாமையும் தேவன் சுகப்படுத்தினார். தன் வாழ்வில் நடந்த ஒரு அற்புதத்தின் மூலம் கர்த்தரின் அன்பை ருசித்த நமது புதிய விசுவாசி காந்தம்மா கிரமமாக நமது ஆராதனையில் பங்குப் பெறுகிறார். வாழ்வாதாரத் தேவைக்கான வேலையொன்றை நமது விசுவாசி பாக்யம்மா கிடைக்கப்பெற்றமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவின் அன்பிற்குள் அடைக்கலம் புக; நெஞ்சு வலியினால் கஷ்டப்படும் கௌதமையும், இரத்தச் சோகையினால் பெலவீனமாக இருக்கும் ராமக்காவையும் தேவன் சுகப்படுத்த; வரும் நாட்களில் நடக்க இருக்கும் ஆவிக்குரிய ஊழிய நிகழ்வுகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

## ஐசுவரியவானுக்கும் இயேசு தேவை!

*சத்தீஸ்கட், பையதான் பணித்தளம், ஒரு சமயம் அங்குள்ள நமது மிஷனெரிகள் ஒரு மனிதருக்குச் சுவிசேஷம் சொல்லும்படி வழிநடத்தப்பட்டனர். அவர் பாடி என்ற ஊரைச் சார்ந்த ஒரு செல்வந்தர். அச்செல்வந்தர் நமது மிஷனெரிகளை அன்புடன் வரவேற்று, அவர்கள் கூறிய வேத வசனங்களைக் கருத்துடன் கேட்டது மாத்திரமல்லாமல், தனது குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கும்படியும் கூறினார். பின்பு நமது மிஷனெரிகள் கொடுத்த வேதப்புத்தகத்தை வாங்கிக்கொண்டு, தவறாமல் அதைவாசித்து, கர்த்தரில் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறார். அச்செல்வந்தர் தனது விசுவாசத்தைத் தெளிவாகக் கிறிஸ்துவில் அறிக்கையிட நாமும் தொடர்ந்து ஜெபிப்போம்.*

**29** *ஜனவரி*
வெள்ளி

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி

**துதிக்க:** அக்கனாம்பட்டு, காதேபள்ளி, நடிம்பள்ளி மற்றும் தோட்டாபள்ளி ஆகிய கிராமங்களிலிருந்து அநேக புதிய குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். நடிம்பள்ளி, மடிகபள்ளி மற்றும் கருணாமய்து ஆகிய கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். கொடுகு சிந்தா ஆலயத்தில் வைத்து நடந்த சபை மூப்பர்கள் கூடுகை அம்மூப்பர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது. சித்தேதார்பள்ளி சகரியாவைத் தேவன் அதிக சுகவீனத்தினின்று சுகப்படுத்தினார். செர்லோபள்ளி கிராம லட்சுமிதேவியைப் பொல்லாத ஆவியின் பிடியினின்று கர்த்தர் விடுவித்தார். வள்ளிகட்லா பகுதியைச் சார்ந்த தனம்மாவின் குடும்பத்தில் தேவன் சமாதானத்தைக் கட்டளையிட்டார். நெல்லி மந்தபள்ளி கிராமத்தைச் சேர்ந்த நமது புதிய தொடர்பாளர் மகாலட்சுமியின் குடும்பம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியின் மீது மிகுந்த விருப்பம் காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதன்முறையாகக் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டிருப்போர் தேவ அன்பை நன்கு ஆழமாக அறிந்துக்கொள்ள; நமது புதிய தொடர்பாளர்களான மடிகபள்ளி மற்றும் நடிம்பள்ளியைச் சார்ந்த கிரண், சாவித்திரி மற்றும் சியாதன்பாவின் குடும்பமும், அக்கனாம்பட்டுவைச் சார்ந்த பேபி குடும்பமும், காதேபள்ளியைச் சார்ந்த கோபி மற்றும் அவரது சகோதரர்களின் குடும்பமும் மற்றும் தோட்டாபள்ளி கிராமத்தைச் சார்ந்த முரளியின் குடும்பமும் இரட்சிப்படைய; வரும் நாட்களில் நடக்கவுள்ள ஊழியப்பயிற்சிக் கூடுகைகள், வெளிசந்திப்பு ஊழியம், வாலிபர் கூடுகை மற்றும் பெண்கள் கூடுகை ஆகியவற்றின் ஆசீர்வாதங்களுக்காக; கோமேபள்ளியைச் சேர்ந்த எலிசபெத் சின்னபாப்பம்மாவையும், ஜோகிவரிபள்ளி கிராம காந்தம்மாவையும் இழந்துத் தவிக்கும் அவர்களது குடும்பத்தினர்களின் மனஆறுதலுக்காக; போலக்கா கிராம மஞ்சு தேவ அன்பை அறிந்திட; நமது விசுவாசிகள் கோவிட்-19 னின் நிமித்தம் உண்டாயிருக்கும் அச்சத்தை மேற்கொண்டு, ஆலய ஆராதனைகளில் தொடர்ச்சியாகப் பங்குப்பெற கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## கொத்தச்செருவு: தேசாய் திலிப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். எர்ரா பள்ளியில் வைத்து நடைபெற்ற தேடுவோர் முகாமைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். முத்யாலப்பாவைத் தேவன் ஒரு பெரிய விபத்தினின்று பாதுகாத்தார். நமது புதிய தொடர்பாளர்களான கங்காதாரி, வெங்கட்ராமலு, சங்கரா மற்றும் அனிதா ஆகியோர் கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எர்ராபள்ளி நாகரத்னம்மா மற்றும் இம்மானுவேல் ஆகியோர் பிசாசுகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; நந்தினி, உஷாராணி மற்றும் கல்பனா ஆகியோர் இரட்சிக்கப்பட; வெங்கடராமலு மற்றும் கங்கம்மா ஆகியோரின் நிலப்பிரச்சனை சுமூகமானத் தீர்வுக்கு வர; செட்டிபள்ளியைச் சேர்ந்த ஆஸ்வாத்தம்மாவைக் கால் புண்களிலிருந்தும், நாகார்ஜுனைக் கண்பார்வைக் கோளாறிலிருந்தும் தேவன் குணப்படுத்த; பிரபாகர் & அனிதா தம்பதியருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கவும் அவர்களது விசுவாசத்தைத் தேவன் வர்த்திக்கப்பண்ணவும் ஜெபிப்போம்.

## 30 ஜனவரி
சனி

### குப்பம்:
**பால் குப்புசாமி & சைலா**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துள்ளனர். G.C. பள்ளி & குப்பம் ஆகிய இடங்களிலுள்ள சபைகளில் வைத்து நடைபெற்ற ஆத்தும ஆதாயப்பயிற்சிக் கூடுகைகளையும், K.C.பள்ளியில் வைத்து நடைபெற்ற தேடுவோர் முகாமையும் தேவன் ஆசீர் வதித்துத் தந்தார். குப்பம் பகுதியைச் சார்ந்த நமது விசுவாசி கீதாவிற்கு தாதிய ராகப் பணிபுரிய ஒப்பந்த அடிப்படையிலான அரசு வேலையொன்று கிடைத்தது. சபை மக்களின் ஆதரவிலேயே குப்பம் சபை யில் கண்காணிப்புக் கேமரா பொருத்தப் பட்டிருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** G.C.பள்ளி, மெட்லுசெனு, K.C.பள்ளி, கட்டுகொளை மற்றும் சாந்தி புரம் மக்கள் காலந்தாழ்த்தாமல் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; குப்பம் சபைக்கு கண்காணிப்புக் கேமரா வாங்க உதவிய ஓமனில் வேலைசெய்யும் நமது விசுவாசியின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; ஹரிஷ் முனியம்மா குடும்பங்கள் மற்றும் பிரியா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; அஹ்ரகாரம், போடூர் மற்றும் பந்தபள்ளி ஆகிய இடங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; குடிப்பழக்கத்திலிருந்து நமது விசுவாசி மணி முற்றிலுமாய் விடுதலை பெற; சௌந்தரி மற்றும் பவித்ராவின் சுகப்பிரசவத்திற்காக; அனிதா & பாலாஜி தம்பதியருக்கு மழலைச்செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

### சித்தூர் பிராந்தியம்:
**சத்தியப்பா & ஷியாமளாபாய்**

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடைக்கலமாயினர். 5 இடங்களில் சிற்றுந்து (Van) மூலம் நடந்த ஊழியங்களைக் கர்த்தர் சிறப்பாக ஆசீர்வதித்துத் தந்தார். அதிகப்பிரயாச முனைவிற்குப்பின், ஆழ்துளைக் கிணற்றின் மூலம் நமது விசுவாசி யுவராஜிற்கு நல்ல நிலத்தடித் தண்ணீர் கிடைத்தது. நமது விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களது ஆடுகளுக்குப் புகலிடமாகப் பல்லவி ஹவுஸ் என்ற இடத்தைத் தேவன் கொடுத்தார். பந்தகுண்டா கிராம கல்லபூரம் மாவைக் கர்த்தர் கொடிய பெலவீனத்தி னின்று காப்பாற்றினார். பலமநேரு பணித்தளத்தில் விசுவாசிகள் மற்றும் சபைமூப்பர்கள் வெளிசந்திப்புக் கூடுகைக்கு தங்களது ஒத்துழைப்பைத் தருகிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராமகுப்பம் பகுதியைச் சேர்ந்த ராஜேஷ்வரி புற்றுநோயிலிருந்து குண மடைய; நமது விசுவாசி பழனிக்குக் குழந்தைச் செல்வம் கிடைக்க; மாதாஸ் என்பவரது வீட்டில் புதிதாக ஒரு ஜெபக்குழு தொடங்கப்பட; கனமழையினால் தனது விவசாயத்தில் நஷ்டமடைந்துள்ள இப் பணித்தள நமது முதல் விசுவாசியைக் கர்த்தர் நம்பிக்கையில் அதிகம் பெலப்படுத்த ஜெபிப்போம்.




## ஜனவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்ரீலதா ஸ்டீபன் ஜெயசீலன்
திரு. பிரதாப் ரஹாங்

### ரோதம்: கென்னத் கரியப்பா & கீதா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 3 இடங்களில் நடந்த ஊழியங்களையும், சபை மூப்பர்கள் கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். கர்ப்பமாக இருந்த இடைக்காலத்தில் வந்த வயிற்று வலியிலிருந்து தேவன் பவானியை அற்புதமாகப் பாதுகாத்தார். நமது விசுவாசி ஆஷாவிற்கு சுகப்பிரசவத்தைத் தேவன் அருளியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இன்னும் சில கிராமங்களில் தொடங்கப்படாமல் இருக்கும் ஆலய ஆராதனைகள் மீண்டும் துவங்கப்பட; சபை மூப்பர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காகவும், அவர்கள் சபையாரை முறையாக வழிநடத்துவதற்குரிய நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ்வதற்காகவும்; பவானியின் கணவர் மனம்மாற; ரோதம் பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட நல்ல நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளது. கோட்டியூர், உரிகம், ராமர்கோவில் மற்றும் செக்கந்த ஹள்ளி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பின்தொடர்பணி ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். புதிதாக 5 குடும்பங்கள் நமது ஆராதனைகளில் தவறாமல் பங்குப்பெறுகின்றனர். கர்த்தருக்குள் விசுவாசிகள் வளர்ந்துப் பெருகும்படி, கர்த்தரின் அதிசயத்தை அவர்கள் தங்களது வாழ்வில் ருசிக்க தேவன் உதவிச்செய்கிற படியால் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிற இடங்களுக்குப் பெயரும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாச வாழ்வில் உறுதியாய் நிற்க; கோட்டியூர், தான்டியம், செக்கந்தஹள்ளி, அஞ்செட்டி மற்றும் பீர்னாபள்ளி ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கான வாய்ப்புகள் அதிகம் கிடைக்க; கால்களில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனையிலிருந்து தாராபாயையும், கொடிய காய்ச்சலிலிருந்து முருகனையும், கண்கோளாறிலிருந்து பிரேமாவையும் மற்றும் கால்மூட்டுப் பிரச்சனையிலிருந்து செல்வியையும் தேவன் முற்றிலுமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

### கெலமங்கலம்: பாலசுப்ரமணியன் & பரஞ்ஜோதி லூசினா

**துதிக்க:** 7 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் முதன்முறையாக வந்துள் ளனர். பெரிய விபத்தினின்று தேவன் சின்னதம்பி மற்றும் தினேஷைப் பாது காத்தார். பூதசத்திரம் என்ற இடத்தில் ஜெபக்கூட்டம் மீண்டும் செயல்படத் தொடங்கியது. எல்லாத் திருச்சபைகளிலும் வீடு சந்திப்பு ஊழியம் நேர்த்தியாக நடை பெற கர்த்தர் உதவிச்செய்து வருகிறதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரசா மற்றும் சின்னதம்பியின் கால்புண்கள் விரைவில் ஆற; தீய ஆவி களின் பிடிகளிலிருந்து தனுஜ் மற்றும் மஞ்சுளா விடுபட; ஸ்ரீனிவாசன் என்பவரின் நிலத்தை அநியாயமாக ஆக்கிரமிக்கும் மக்கள் மனந்திருந்த; பூதசத்திரத்தில் அநேகர் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்கு நேராக வர; ஓவிபாளையம் ஆலயத்தைச் சுற்றி பாதுகாப்பாக வேலியடைக்கப்பட ஜெபிப்போம்.

# நிதி அலுவலகத்திலிருந்து

Regd. Newspaper for India No.17759/69
TN/PMG(CCR)/WPP700/2018-2020
Regd. No. TN/TBM/56/2018-20
Licensed to post without prepayment
Date of publication: Last week of every month

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A095 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark colum பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின் அஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**
it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Thomson Press India Ltd., A-9, Industrial Complex, Maraimalainagar - 603 209 ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***